# மஞ்சரி

நந்தன - பங்குனி

மார்ச், 1953

பணம் வேண்டுமா?

புதுமாதிரி ஸினிமா

அந்நியரின் சிலை

நவீன துபாஷி

அத்தை சொன்ன கதை

-6-
அணா

## துன்பத்தின் காரணம்

எல்லா மனிதர்களிடமும் ஈசுவரன் இருக்கிறான். ஆனால், எல்லா மனிதர்களும் ஈசுவரனிடம் இல்லை; இதுதான் அவர்கள் துன்பப்படுவதன் காரணம்.

— ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர்.

# மஞ்சரி


**ஆசிரியர், பதிப்பாளர்:** என். ராமரத்தினம்

**நிர்வாக ஆசிரியர்:** தி. ஜ. ரங்கநாதன்

பாஷை ஆசிரியர்கள்:

கி. வா. ஜகந்நாதன்
த. நா. ஸேனாபதி
வி. எச். சுப்பிரமணிய சாஸ்திரி
சீதா தேவி
கௌரி அம்மாள்
கா. ஸ்ரீ. ஸ்ரீ.
கி. தாமோதரன்
கி. சாவித்திரி அம்மாள்
'ஆர்வி'
மோ. ஸ்ரீ. செல்லம்

**ஓவியர்கள்:** ஸாமி, மகான், சுசி, சுப்பு.

---

மஞ்சரி, தபாற் பெட்டி நெ. 604, மயிலாப்பூர், சென்னை 4. பிரதி மாதமும் முதல் தேதி வெளிவரும். தனிப் பிரதி விலை 6 அணா. வருஷ சந்தா ரூ. 4/8. கலைமகள் சந்தாதார்களுக்கு மட்டும் ரூ. 4/- சந்தாத் தொகையை 'ஸர்க்குலேஷன் மானேஜர்' என்ற விலாசமிட்டு அனுப்புக. விலாச மாற்றங்களைத் தங்கள் பழைய விலாசத்துடன் சந்தா எண்ணையும் குறிப்பிட்டுத் தெரிவியுங்கள்.


'மஞ்சரி'யிலுள்ள எல்லாக் கட்டுரைகளும் கதைகளும் பதிப்புரிமை பெற்றவை.

ஆண்டு 6] நந்தன–பங்குனி :: :: மார்ச் 1953 [இதழ் 4

# மஞ்சரி

மாதத்தின் சுவையான மலர்க்கதம்பம்

## ஊரும் உலகமும்

★

“கேவலம் பிரிவதற்காக மட்டும் ஒற்றுமை கொள்வது பயனில்லை. பிரிவுக்குப் பிறகும் ஒற்றுமை நிலைக்க வேண்டும். அப்படி அது நிலைத்தால்தான், பிரிவின் சிறந்த பயனை நாம் அடைவோம்” என்று சென்னையில் ராஷ்டிரபதி ராஜேன் பாபு கூறினார். அருமையான வாக்கு. ஆந்திரருக்கு மட்டும் அல்ல; எல்லாருக்குமே இந்த உபதேசம் பொருந்தும். பிரிட்டிஷ் ஆட்சியை எதிர்ப்பதற்காக ஒன்றுபட்டிருந்த இந்தியக் கோஷ்டியினரெல்லாம் இன்று சிதறிவிட்டதைக் கண்ணாரக் காண்கிறோம். பொது எதிரியை வெல்வதற்கு ஒன்றுபட்ட அமெரிக்காவும் ருஷியாவும் இன்று பாம்பும் புலியும் போல் ஒன்றையொன்று சீறுகின்றன! போராட்டத்தில் ஒற்றுமை கொண்டவர், ஆக்க வேலையில் வேற்றுமைப் படுவது இயற்கையாக இருக்கிறது. பாபுவின் உபதேசம் ஆந்திரர் விஷயத்தில் பலிக்குமா?

* * *

ஒரிஸ்ஸாவில் இதுவரையில் இல்லாதபடி அபரிமிதமான நெல் விளைச்சல் ஏற்பட்டிருக்கிறதாம். கண்ட்ரோல் அங்கே அமலில் இருப்பதால் ஒரிஸ்ஸா சர்க்கார் ஏராளமாக நெல்லைக் கொள்முதல் செய்து வைத்திருக்கிறதாம். ஆனால் மற்ற ராஜ்ய சர்க்கார்களுக்கு நிர்ணயித்த பங்கு நெல்லைச் சீக்கிரமாக அவர்கள் வாங்கிக் கொள்ளாததால், ஒரிஸ்ஸா சர்க்கார் சங்கடப்படுகிறார்களாம். இதைச் சமாளிக்க இந்திய சர்க்கார் கூடிய சீக்கிரம் நடவடிக்கை எடுப்பதாகச் சொல்கிறார்கள். தவிர, உணவுத் தானிய விளைச்சல் இந்தியா முழுவதுமே சீர்பட்டிருக்கிறதாம். அடுத்த வருஷம் வெளி நாடுகளிலிருந்து உணவுத் தானிய இறக்குமதியே தேவையிராதாம். இந்தச் செய்தியையெல்லாம் கேட்க மகிழ்ச்சியாகத்தான் இருக்கிறது. ஆனால், உணவுத் தானிய விநியோகம் வியாபாரிகளின் சூழ்ச்சியால் சீர்குலையாமல், ஏழை மக்களெல்லாம் சௌகரியமடையும் முறையில் நடைபெறச் சர்க்கார் எப்போதும் எச்சரிக்கையாக இருப்பது மட்டும் அவசியம்.

* * *

இந்திய ரெயில்வே பிரயாணிகள் கட்டண வருமானத்தில் 1952-53-ஆம் வருஷம் 10 கோடியே 14 லட்சம் ரூபாய்

குறையுமென்று கணக்கிட்டிருக்கிறார்கள். இதில் மேல் வகுப்புப் பிரயாணிகள் கட்டண வருமானக் குறைவு மாத்திரம் 2 கோடியே 19 லட்சம் ரூபாயாம். இதற்கென்ன காரணம் என்பதைச் சகல ரெயில் பாதை நிர்வாகிகளிடமும் இந்திய சர்க்கார் கேட்டிருக்கிறார்களாம். அந்த நிர்வாகிகள் ஆராய்ந்து அனுப்பும் அறிக்கைகளை நிபுணர்களிடம் கொடுத்து, இந்த நிலைமையைச் சமாளிப்பதற்கான வழி துறைகளைச் சொல்லும்படி கேட்கப் போகிறார்களாம். சாமான் போக்குவரத்து வருமானம் மட்டும் இதற்கு மாறாக 1948 - 49 - இல் 96 கோடி ரூபாயாக இருந்தது, 1952 - 53 - இல் 144 கோடியே 56 லட்சம் ரூபாயாக உயர்ந்திருக்கிறது. பிரயாணிகள் கட்டண வருமானம் குறைவதற்கு வேறு என்ன காரணம் இருந்தாலும் சரிதான்; இன்றும் கூட யாரும் சகிக்க முடியாத ஜனக் கூட்டத்தின் நெரிசல் இருக்கிறதே, இதுதான் முதல் காரணமாயிருக்கும் என்று நமக்குத் தோன்றுகிறது. கட்டணச் சலுகை, உற்சவப் பிரசாரங்களிலெல்லாம் செலவிடுவதைவிட, வண்டிகளை அதிகப்படுத்துவது மிக நல்ல பயன் தரும்.

'ஒரு பொய்யைச் சொல்லு; அதைத் திரும்பத் திரும்பச் சொல்லு. யார் எவ்வளவு ஆதாரத்தோடு மறுத்தாலும் திரும்பத் திரும்பச் சொல்லிக்கொண்டே இரு. அந்தப் பொய் உண்மை ஆகிவிடும்' என்பது எதேச்சாதிகாரப் பற்றுள்ள அரசியல்வாதிகள் கடைப்பிடிக்கும் வழக்கம். ஏறக்குறைய இந்த மாதிரி கொள்கையைப் பின்பற்றிய ஒரு கோஷ்டியினராலேயே பாகிஸ்தான் உருவாயிற்று. பாகிஸ்தான் இன்னமும் இந்தத் தந்திரத்தை விடவில்லை. சிந்து நதி நீர் விடுவதுபற்றி, இப்படி இந்தியாமீது அபாண்டமாக வீண் பழி சுமத்திப் பாகிஸ்தான் சர்க்காரும் தலைவர்களும் கடும் பிரசாரம் செய்கிறார்களாம்; பத்திரிகைகளையோ கேட்க வேண்டியதில்லை. நதி நீர் விஷயம் உலக பாங்கியின் பஞ்சாயத்தில் இருக்கிறது. இடைக்காலத் திட்டப்படி வருஷத்துக்கு வருஷம் பாகிஸ்தானுக்கு இந்தியா தண்ணீர் விட்டு வருகிறது. இது விஷயமாய் இந்திய சர்க்காருக்குப் பாகிஸ்தான் சர்க்கார் எந்த ஆட்சேபமும் தெரிவித்துக்கொள்ளவில்லை. இப்படியிருக்க, ஏன் விஷமப் பிரசாரம்?

## மன மாற்றம்

ஒரு வியாபாரி வண்டி நிறைய வெள்ளரிப்பழம் கொண்டு வந்தான். ஒரு பழத்தை நான் திருடினேன். யாரும் இல்லாத ஒரு சந்தில் புகுந்து தின்ன எண்ணினேன். அதைக் கடிக்கப் போனேன். அதில் என் பல் பட்டதும், புதிய உணர்ச்சி ஒன்று எனக்கு உண்டாயிற்று. திரும்பவும் வண்டியருகே போனேன். அதை வண்டியிலேயே திரும்பவும் வைத்தேன்- நன்றாகக் கனிந்த பழமாக வேறொன்றை எடுத்துக் கொண்டு சந்துக்குப் போனேன்.

—மார்க் ட்வேன்

# புத்தரும் சர்வோதயமும்

ஆசாரிய விநோபா

**பூதான யாத்திரை செய்யும்போது பிஹாரில் பலாமு என்ற இடத்தில் விநோபா பாவே செய்த பிரார்த்தனைப் பிரசங்கத்தின் சாரமான ஒரு பகுதி இது.**

இந்த உலகத்தில் மனிதரின் வாழ்க்கை சுமார் பத்து லட்சம் வருஷங்களாக நடைபெற்று வருகிறது என்று விஞ்ஞானிகள் கூறுகிறார்கள். அதற்கு முன்பு என்ன இருந்தது என்பது தெரியாது. மனிதர்களின் பூர்வ ரூபத்தைப்பற்றி நமக்கு ஒன்றும் தெரியாது. இன்று நாம் மனிதர்களை என்ன ரூபத்தில் பார்க்கிறோமோ, இதே ரூபத்தில் பத்து லட்சம் வருஷங்களாக அவர்கள் வேலை செய்துகொண்டு வருகிறார்கள் என்பது விஞ்ஞானிகளின் கருத்து. மிருகங்களின் உடலுக்கு உண்பதும் குடிப்பதும் அவசியமாக இருப்பதைப்போல் மனித உடலுக்கும் அவை அவசியமாக இருக்கின்றன. இதற்காக மனிதன் முயலவேண்டியிருப்பதைப் போல், மற்றப் பிராணிகளும் முயலவேண்டியிருக்கிறது. மனிதன் இப்படிப்பட்ட முயற்சிகளை எல்லா இடங்களிலும் செய்துகொண்டே இருக்கிறான். ஆனால் உண்பது, குடிப்பது இவற்றினால் மட்டும் மனிதனுக்குச் சமாதானம் ஏற்பட முடியாது. மனிதனுக்குச் சிறிதளவு கருத்துப் பசியும் ஏற்படுகிறது. இன்று வரை நிகழ்ந்த கருத்துப் பிரவாகம், ஏற்பட்ட கருத்துச் சீர்திருத்தம், மாறுதல் இவை அனைத்தும் மனிதனுக்குத் தூண்டுதல் அளித்திருக்கின்றன. ஏவையேனும் சில அடிப்படைக் கருத்துக்கள் அவனுக்குத் தோன்றிக்கொண்டே இருக்கின்றன.

ஆதி காலத்துக்குப் பிறகு, சுமார் இரண்டாயிரம் வருஷங்களுக்கு முன் பகவான் புத்தர் ஜீவ ஹிம்ஸைக்கு விரோதமாகக் குரல் எழுப்பி மக்களுக்கு இந்த விஷயத்தை விளக்கினார்: "பிராணிகளிடமிருந்து நாம் பெற்றுக்கொள்ளக்கூடிய உதவியைப் பெற்றுக்கொள்ளவேண்டும்; அவற்றிற்கு நம்மால் செய்யக்கூடிய உதவியைச் செய்யவேண்டும். ஆனால் அவற்றை ஹிம்சிப்பது மனிதர்களுக்கு அழகல்ல." தன் அக்கம் பக்கத்திலுள்ள சிருஷ்டியுடன் மனிதன் கருணை மனப்பான்மையுடன் நடந்துகொள்ள வேண்டும் என்ற இந்தக் கருத்தைப் புத்தர் பிரசாரம் செய்ய விரும்பினார். இதனால் சமூகத்தில் ஒரு புரட்சிகரமான மாறுதல் ஏற்பட்டது. அதன் பலன் ஓர் ஆயிரம் வருஷம் வரை இந்துஸ்தானத்துக்கு ஏற்பட்டுக்கொண்டிருந்தது. இன்றும் நாம் இந்தக் கருத்துக்கு மரியாதை செலுத்துகிறோம். நம் சமூகம்

மூலம்: சர்வோதயம் (தமிழ்: பிப்ரவரி '53), சர்வ சேவா சங்க், திருப்பூர்.

இதை ஏற்றுக்கொண்டிருக்கிறது. ஜீவஹிம்சை முற்றும் நின்று விட்டது என்பதில்லை. இருந்தபோதிலும் சமூகம் இந்தக் கருத்தை ஏற்றுக்கொண்டது. இது போல் புரட்சிகரமான மாறுதல் ஏற்பட்ட பின்பு, யாருடைய அரசாங்கச் சின்னத்தை இன்று நாம் உபயோகிக்க ஆரம்பித்திருக்கிறோமோ அந்த அசோக சக்கரவர்த்தி, புத்தருடைய கருத்தைப் பிரசாரம் செய்தார். இந்தியாவின் வாழ்க்கையில் இந்தக் கருத்துக்கு முக்கியத்துவம் கிடைத்தபோது, இதை அரசாளுவோர் ஏற்றுக்கொண்டார்கள்; பின்பு இது இந்தியாவுக்கு வெளியிலும் பரவியது. மற்றத் தேசங்களுக்குத் தைரியத்தையும் கொடுத்தது. இன்றும் சீனா, ஜப்பான், மலேயா, பர்மா, இலங்கை முதலிய தேசங்களில் பௌத்த மதத்தைப் பின்பற்றுவோர் இருக்கிறார்கள்.

கருத்தின் தூண்டுதல் மனிதனுக்கு எந்த முறையில் உத்வேகத்தை அளிக்கிறது என்பதை நான் விளக்க விரும்புகிறேன்; ஆகையால்தான், நான் இந்த உதாரணத்தைக் கொடுத்தேன். மனிதனின் சரீர வாழ்க்கை நடைபெறத்தான் செய்கிறது. ஆனால் மனிதனின் முன்னேற்றத்தில் ஒரு கருத்து அடங்கியிருக்கிறது. கருத்தின் காரணமாகத்தான் இயக்கங்கள் நடைபெறுகின்றன; ஆவேசம் உண்டாகிறது; புதிய வாழ்க்கை அமைகிறது; சமூக அமைப்பும் மாறுகிறது; பின்பு வாழ்க்கை முறையே மாறிவிடுகிறது. பிரான்ஸில் அரசியல் புரட்சி நடந்தது; அதுவும் கருத்தின் காரணமாகத்தான். மார்க்ஸ் தோன்றினார்; அவருடைய கருத்தின் ஆதாரத்தில் ருஷியாவில் ஒரு வேலை நடந்தது. இவற்றால் கருத்தின் சக்தி என்ன என்பதை நாம் உணர்கிறோம். மனிதனுக்குக் கருத்துத்தான் சக்தியை அளிக்கிறது. எல்லாவற்றிற்கும் அடிப்படையான ஒரு கருத்து இருக்கிறது. அதைத்தான் நாம் தர்மம் அல்லது கொள்கை என்று கூறுகிறோம். கருத்தின் அடிப்படையில் வாழ்க்கை என்னும் கட்டிடம் எழுகிறது.

நான் இப்போது செய்துகொண்டிருக்கும் வேலையின் வெளித்தோற்றம், நிலப் பிரச்னையைத் தீர்க்கும் வேலையாகத் தோன்றுகிறது; ஆனால், இதில் ஒரு கருத்து அடங்கியிருக்கிறது; அதை நடைமுறைக்குக் கொண்டுவருவதற்காகவே நான் ஒரு வெளிப்படையான வேலையை மேற்கொண்டிருக்கிறேன். இப்படி மேற்கொள்ளவில்லையானால், கருத்து நிர்க்குணமாகவும் உருவமின்றியும் இருந்துவிடும். ஆகையால் கருத்துப் பிரசாரத்துக்காக வெளிப்படையான வேலையை மேற்கொள்ளுவது அவசியமாகும். ஆதலால் நான் இந்தியாவின் இன்றைய முக்கியப் பிரச்னையை மேற்கொண்டிருக்கிறேன். மேலும், கருத்தைப் பிரசாரம் செய்வதற்காக நான் கிளம்பியிருக்கிறேன்.

பகவான் புத்தரின் தர்ம போதனையின் அடிச்சுவட்டைப் பின்பற்றி அதுபோலவே செய்துகொண்டிருக்கிறேன் என்று பல தடவை நான் கூறியிருக்கிறேன். இந்தக் கருத்தின் பெயர் சர்வோதயம். ஒருவரின் நன்மையால் அனைவருக்கும் நன்மை ஏற்படுகிறது என்பதுதான் இதன்

பொருள். ஒருவரின் நன்மைக்கு விரோதமாக மற்றவர்களின் நன்மை இருக்கமுடியாது. ஏதாவது ஒரு கூட்டம், சமூகம், வர்க்கம் அல்லது தேசத்தினுடைய நன்மைக்கு விரோதமாகக் கூட இன்னொரு கூட்டம், சமூகம், வர்க்கம் அல்லது தேசத்தினுடைய நன்மை இருக்க முடியாது. இவற்றின் நன்மைகளில் பரஸ்பர விரோதம் இருக்கிறது என்ற எண்ணமே தவறானது. ஒருவருடைய நன்மையால் மற்றவருக்கும் நன்மைதான் உண்டாகும். நன்மைகளில் விரோதம் இருக்க முடியாது. ஆனால் நாம் நன்மையில்லாதவற்றையே நன்மையெனக் கருதுவோமானால், மேலே கூறிய நன்மைகளில் விரோதம் இருக்கக்கூடும். 'நான் புத்திமானாக இருக்கிறேன்; என் ஆரோக்கியம் சீர்திருந்துகிறது' என்றால், அதனால் உங்களுக்கு நன்மைதான் ஏற்படப் போகிறது. எனக்குத் தாகம் ஏற்பட்டவுடன் தண்ணீர் கிடைக்கிறது என்றால், அதனால் எனக்கு நன்மை ஏற்படுவதுடன், உங்களுக்குங் கூட நன்மை ஏற்படுகிறது. நன்மைகளில் விரோதம் இருப்பதாக நாம் கற்பனை செய்வோமானால், நன்மையின் பொருளே பொய்யாகிவிடும். பக்கத்திலுள்ளவர்களைத் துன்பத்துக்குள்ளாக்கி நாம் சுகமாக இருக்க முடியாது. அதனால் நமக்கு ஆயிரம் விதமான நஷ்டம் ஏற்படக் கூடும். மற்றவர்களைக் கொள்ளையடித்தோ, துன்பத்துக்குள்ளாக்கியோ சுகமடைய விரும்புகிறவன், சாப்பாடு கூட அமைதியாகச் சாப்பிட முடியாது. அவன் சரீரத்தில் நோய்கள் பிரவேசிக்கும். அவன் டாக்டரின் தயவில் வாழவேண்டியிருக்கும். வீட்டுக்குப் பணம் வந்தவுடன் அமைதியின்மையும் வந்துவிடும். உணவு அவனுக்கு ஜீரணமாகாது. நோய் அவனைத் துன்புறுத்தும். கொள்ளையடித்துப் பணத்தை வீட்டுக்குக் கொண்டுவந்து சுகமடைய முயல்பவன், ஒருபோதும் தான் சுகமடைய முடியாது. இந்த மாதிரி சேகரித்து வீட்டுக்குக் கொண்டு வரும் பணம் வீட்டுக்கு நெருப்பு வைத்துவிடுகிறது. ஆகையால், மற்றவர்களின் நன்மையில்தான் நம்முடைய நன்மை இருக்கிறது என்ற மகத்தான கருத்தை விளக்குவதற்கே நான் வந்திருக்கிறேன்.

## வக்கீல் வேலை

கணவனுக்கும் மனைவிக்கும் மனஸ்தாபம் வந்து கோர்ட்டிலே வழக்கு நடக்கும் நிலை.

மனைவியின் வக்கீல் கணவனிடம் சென்று வெகு நேரம் ராஜிப் பேச்சு நடத்தினர். பிறகு வெற்றிக் குதூகலத்துடன் தம் கட்சிக்காரியிடம் வந்தார். "இதோ பார், அம்மா, உனக்கும் சரி, அவருக்கும் சரி, இரண்டு பேருக்கும் நியாயமான ஓர் ஏற்பாட்டுக்கு அவரைச் சம்மதிக்கச் செய்துவிட்டேன்" என்றார்.

"இரண்டு பேருக்கும் நியாயமாகவா! இதை நானே செய்திருப்பேனே? இதற்கு நீர் எதற்கு? இதற்கா உம்மை வக்கீலாக அமர்த்தினேன்?" என்று நொந்துகொண்டாள் கட்சிக்காரி.

—'வால் ஸ்ட்ரீட் ஜர்னல்'

# ஹோட்டல்கள் சீர்திருந்த வழி

**என். ஜி. வீர்கர்**

**இந்த நாளில் ஹோட்டலுக்குப் போகாமல் இருக்க வழி இல்லை. இதை உணர்ந்து ஹோட்டல் சொந்தக் காரர்களும் தகுந்த வசதிகள் செய்வது அவசியம்.**

தாலுக்கா கச்சேரிக்கு ஒரு சிறு வழக்கு விஷயமாக ஊரிலிருந்து வந்த கோபால ராவ், பகலில் ஒரு ஹோட்டலுக்குள் புகுந்தார்.

ஹோட்டலில் படிக்கு அருகில் இருந்த ஒரு பெஞ்சில் சிலர் உட்கார்ந்திருந்தார்கள். அவர்களுக்கு டீயும் டிபனும் எடுத்துக்கொண்டு வேகமாக வந்த பையன் எதிரே வந்த ஒருவரோடு இடிபடவே, தேநீர்க் கோப்பைகள் கீழே விழுந்து உடைந்து, டீ வெள்ளமாகப் பெருகியது; டிபன்கள் சிதறின.

டீ வெள்ளம்; டிபன்கள் சிதறின

கடைக்காரர் உடனே வந்து அந்தப் பையனைத் திட்டியபடியே அறைந்தார். பையன் விக்கி விக்கி அழலானான். இரண்டொருவர் கடைக்காரரைச் சமாதானப்படுத்தினார்கள். இந்த வைபவத்தைக் கண்ட கோபால ராவ் வேறு ஹோட்டலை நோக்கி நடந்தார்.

பம்பாயில் சாண்டர்ஸ்ட் ரோடு ஸ்டேஷன் பக்கத்தில் ஒரு ஹோட்டல் இருந்தது. அங்கே பஜ்ஜியும் டீயும் சாப்பிட்டு வந்த ஒருவர், வாந்தியெடுத்துச் சாலையிலே விழுந்துவிட்டார். சந்தேகம் வரவே, முனிஸிபாலிட்டியார் அந்த ஹோட்டலைப் பார்வையிட்டார்கள். அங்கே பொறி வைத்துச் சில எலிகளைப் பிடித்தபோது, ஓர் எலி பிளேக் நோயினால் பொறிக்குள் இறந்து கிடந்தது. உடனே அந்த ஹோட்டலைச் சீல் வைத்து மூடிவிட்டு, சொந்தக்காரர் மேல் வழக்கு நடத்தினார்கள்.

பல ஹோட்டல்களில் சமையலறையின் ஒரு பக்கத்தில் கடாயியில் பஜ்ஜி வேகும்; மற்றொரு புறத்தில் ஒரு பெரிய தொட்டியில் வாளியிலோ எச்சில் தட்டுகளையும் கிண்ணங்களையும் அலம்புவார்கள். ஒரே தொட்டியில் திரும்பத் திரும்ப அவற்றை அலம்புவதைக் கண்டால் யாருக்கும் அருவருப்புத் தான் உண்டாகும்.

அடுப்புச் சாம்பலை அன்றாடம் காலையிலோ, வாடிக்கைக்காரர்கள் வராத சமயத்திலோ அப்புறப்படுத்திச் சமையலறையைச் சுத்தமாக வைத்திருப்பது நல்லது. ஒரே தொட்டியில் எச்சில் பாத்திரங்களை அலம்பக்கூடாது. மூத

காப்பிரைட்: உதயம் (மராட்டி: பிப்ரவரி '53), நாக்பூர்.

வில் ஒரு வாளியில் அவற்றைத் தண்ணீரில் அலம்பிய பிறகு வெந்நீரினால் மறுபடி அலம்பவேண்டும். இதற்காக ஒரு பெரிய தண்ணீர்த் தொட்டி கட்டி வைப்பது நல்லது. இப்படிக் கழுவிய பாத்திரங்களை ஒரு வெந்நீர்த் தொட்டியில் சற்று நேரம் போட்டு வைத்தால் அவை சுத்தமாக இருக்கும்.

ஹோட்டலில் தரையை மேடு பள்ளமில்லாமல் செய்து நாற்காலி மேஜைகளை ஒழுங்காய்ப் போட வேண்டும். சுவர்களுக்கு அடிக்கடி வெள்ளையடிக்க வேண்டும். மேஜையில் பளிங்குக் கல்லோ, கனமான கண்ணாடியோ, 'கால்வனேஸ்' செய்த இரும்புத் தகடோ பொருத்தி, அதன்மேல் பண்டங்களைப் பரிமாறுவது நல்லது. அடிக்கடி சுத்தம் செய்வதற்கும் இது வசதியாக இருக்கும்.

எச்சில் பாத்திரங்களை எடுப்பதற்கு ஒரு வேலையாளும், மேஜையைத் துடைக்க வேறு ஆளும் இருப்பது நல்லது. பண்டம் பரிமாறுகிறவர்களோடு இவர்களுக்கு எவ்விதத் தொடர்பும் இருக்கக் கூடாது. அப்பொழுதுதான் எல்லாம் சுத்தமாக இருக்க முடியும்.

சிற்றுண்டி உண்ணும் இடத்தில் சமையலறையிலிருந்து புகை வராதபடி ஏற்பாடு செய்ய வேண்டும். சமையலறையில் சாமான்

ஒரே தொட்டியில் திரும்பத் திரும்ப...



சமையற்காரர்களின் வேர்வை..

களை ஒழுங்காக வைத்துச் சமைக்க வசதி இருக்க வேண்டும். சமையற்காரர்கள் அடுப்பின் அருகில் வேலை செய்ய வேண்டியிருப்பதால் அவர்களின் உடலிலிருந்து எப்போதும் வேர்வை பெருகும். பஜ்ஜியோ பூரியோ தோசையோ போடும்போது இந்த வேர்வை அவற்றிலே படக்கூடாது. தலையில் ஒரு துணியைக் கட்டிக் கொள்வதோடு, அடிக்கடி வேர்வையைத் துடைத்துக் கொள்ள இவர்கள் தோளில் ஒரு துண்டை வைத்துக்கொள்வது அவசியம். காஸ் அல்லது மின்சார விசையினால் அடுப்பு வைத்துக்கொள்ளும் நிலைமை இன்னும் நம் நாட்டு ஹோட்டல்களுக்கு ஏற்படவில்லை. அது ஏற்படும் வரைக்கும் சமையற்காரர்கள் தங்கள் உடலைப் பல வகையிலும் நன்றாக வைத்துக்கொள்வது தான் விரும்பத் தகுந்தது.

சமையலறையிலோ ஹோட்டலுக்குள்ளோ வேலைக்காரர்கள் புகை பிடிக்கக்கூடாது; புகையிலையும் மூக்குப் பொடியும் போடக் கூடாது.

ஹோட்டல் முதலாளிகள் இந்த விஷயங்களைக் கவனித்துத் தக்க ஏற்பாடு செய்தால், ஹோட்டல்கள் சீர்திருந்தும்.

# ரமணர்

## வாழ்வும் வாக்கும்

**ஆத்மஞானத்துக்கு முன் மற்ற ஞான மெல்லாம் அற்பம் என்பதைத் தம் வாழ்க்கை யால் நிரூபித்துக் காட்டியவர் மகரிஷி ரமணர். இவர் வாக்கு ஸ்வாநுபவம் பொதிந்தது.**

**குரங்குகளுக்கும் கருணை:** ரமண முனிவருக்கு ஸர்வபூத தயை இருந்ததென்பது ஆச்சரியம் அன்று. ஆனால் அதை மற்றவர் களும் கண்டு களிக்கிற சமயங் கள் பல அமைவதுண்டு. பகவா னிடத்தில் அணிலும் குரங்கும் மானும் மாடும் விளையாடும். அவ ரால் தமக்கு இன்பமே யன்றி எந்த விதமான துன்பமும் நேரா தென்பதை அந்தப் பிராணிகள் எப்படியோ உணர்ந்துகொண்டன.

ரமண பகவான் ஆசனத்தில் அமர்ந்திருந்தார். அப்போது ஜன்னல் வழியே ஒரு குரங்கு எட் டிப் பார்த்தது. அது தன் கையில் இளங்குட்டியை வைத்திருந்தது. உள்ளே நுழைந்த பகவானுக்கு அருகில் வரவேண்டுமென்ற முயற்சி அதனிடம் இருந்தது. உள்ளே இருந்தவர்கள் அந்தக் குரங்கை ஓட்டினார்கள். 'மனிதர் கள்' வரும் இடத்தில் 'குரங்கு' வரலாமா? பகவான் அவர்களைப் பார்த்துக் கையமர்த்தினார்.

"என் அதைத் துரத்துகிறீர் கள்? அது இங்கே வரவேண்டும் என்று ஆசைப்படுகிறது. தன் இளங்குழந்தையை எனக்குக் காட்டுவதற்காக வருகிறது. இப் படிச் செய்வது தவறா? உங்களுக் குக் குழந்தை பிறந்தால் என் னிடம் கொண்டுவந்து காட்டுவது இல்லையா? அப்படிக் கொண்டு வரும்போது யாராவது உங்களைத் தடுத்தால் எப்படி இருக்கும்? நீங்கள் குழந்தைகளைக் கொண்டு வரலாம்; இதுமட்டும் கொண்டு வரக் கூடாதா? இது என்ன நியாயம்?" என்ற வார்த்தைகள் பகவானுடைய திருவாக்கிலிருந்து அலர்ந்தன. அப்புறம் யாராவது அதைத் தடுப்பார்களா? குரங்கு தன் குட்டியுடன் உள்ளே வந்து சென்றது.

*  *  *

**ஆ**சிரமத்தில் இந்தியாவின் சுதந்தர தினக் கொண்டாட்டம் நடைபெற்றது. விருந்துக்கு ஏற் பாடு பண்ணினார்கள். பகவான் அப்போது, "எல்லாவற்றையும் திட்டம் செய்தீர்களே! நம் முடைய தோழர்களாகிய குரங்கு களுக்கு விருந்து ஒன்றும் இல் லையா? அவர்களை மறந்துவிடா

தீர்கள். அவர்களுக்கும் விருந்து போடுங்கள்'' என்றார். அவருடைய விருப்பப்படியே வானரத் தோழர்கள் விருந்துணவு பெற்றார்கள்.

*   *   *

விரூபாக்ஷிக் குகையில் பகவான் இருந்த காலத்தில் குரங்குகள் மிகவும் தாராளமாகப் பழகின. ரமணாசிரமத்தில் பிற்காலத்தில் யாராவது குரங்குகளைத் துரத்தி ஓட்டினால் பகவான் அவர்களைப் பார்த்து, "நீங்களெல்லாம் இப்போது வந்திருக்கிறீர்கள். அந்தக் காலத்தில் எனக்கு இவர்களே நண்பர்கள். அப்போது இவர்களைப் பார்த்திருக்க வேண்டும். எல்லாம் இவர்கள் ராஜ்யந்தான்'' என்று சொல்லுவார்.

யாராவது பழங்கள் கொண்டு வந்து வைத்தால் சில சமயங்களில் குரங்குகள் தூக்கிக்கொண்டு போய் விடும். பக்தர்களுக்குக் கோபம் கோபமாக வரும். பகவான் புன்முறுவல் பூத்தபடியே, "பழத்தைக் கொண்டு வருவதும், அதை ஜாக்கிரதையாக வைத்துக்கொள்வதும் உங்கள் வேலை; உங்கள் கடமை. அதை எடுத்துக்கொண்டு போவது இவர்கள் கடமை. இவர்கள் தங்கள் சொந்தக் கடமையைச் செய்யும்போது நாம் என் கோபித்துக்கொள்ள வேண்டும்?'' என்று சொல்வார்.

(வாழ்வு)

**யார் குற்றம்?** ஆசிரமத்தில் அழகான தோட்டம் ஒன்றைப் பக்தர்கள் போட்டுப் பாதுகாத்தார்கள். மிகவும் அருமையான செடிகளைக் கொண்டு வந்து நட்டு வளர்த்து வந்தார்கள். ஆசிரமத்துக் கோசாலையில் பல பசுக்கள் இருந்தன. ஒரு நாள் சில பசுமாடுகள் தோட்டத்துக்குள் நுழைந்து சில நல்ல செடிகளைத் தின்றுவிட்டன. இதைப் பக்தர்கள் கண்டார்கள். பல காலமாகச் சிரமப்பட்டு வளர்த்த அபூர்வச் செடிகள் வீணாகிவிட்டதனால் அவர்களுக்கு வருத்தம் உண்டாயிற்று. பசுமாடுகளிடம் கோபமும் ஏற்பட்டது. பல நாள் பட்ட பாட்டைச் சில நிமிஷ நேரத்தில் அழித்து விட்டனவே என்ற கோபம். இதைப்பற்றி ஆசிரமவாசிகளிடத்தில் சிறிது கலக்கமும் ஆரவாரமும் உண்டாயின. இது பகவானுடைய காதுக்கு எட்டியது.

பகவானுக்குக் குற்றம் யாருடையது என்ற ஆராய்ச்சி எழுந்தது. இது சாமானிய விஷயந்தான். ஆனாலும் அங்கே இருந்தவர்கள் எல்லோரும், "மாடுகள் அழித்து விட்டன, மாடுகள் அழித்தவிட்டன'' என்று திருப்பித் திருப்பிச் சொன்னார்களே ஒழிய, வேறு ஒன்றையும் சிந்திக்கவில்லை. அவர்களுடைய சிந்தனையை வேறு திசையில் திருப்பினார் ரமண முனிவர்.

"பசுமாடுகள் அழித்தவிட்டன என்று சொல்கிறீர்களே! இந்த இடத்திலுள்ளதை மேயக்கூடாது என்று அவைகளுக்குத் தெரியுமா? பச்சையான இடங்களைக் கண்டால் மேய்வது அவைகளுடைய இயல்பு. நாமே தோட்டம் போட்டோம். தோட்டத்தக்குள் பசுமாடு வரக் கூடாதென்பது நமக்குத்தான் தெரியும்; பசு மாட்டுக்குத் தெரியாது. தெரியும்படி செய்யவும் முடியாது. இந்த நிலையில் தோட்டத்தக்கு நன்றாக வேலி போட்டுக் காப்பாற்றியிருந்தால், மாடுகள் நுழைந்திருக்குமா? நாம் எதைச் செய்யவில்லையோ அதை

நினைக்காமல் பசு மாடு செய்ததை நினைத்துக் கோபப்படலாமா? செய்ய வேண்டியதைச் செய்யாமல் இருக்கிறது குற்றம் அல்லவா?'' என்று சிரித்துக்கொண்டே இந்த முனிவர்பிரான் சொன்னார்.

(வாழ்வு)

**சகஜ சமாதி:** ஒரு முறை பக்தர் ஒருவர் பகவானிடம் ஒரு சந்தேகத்தைத் தெரிவித்தார். ''ஞானியானவன் நிர்விகல்ப சமாதியில் இருக்கும்போது உலக விவகாரத்தில் ஈடுபட முடியாது என்று சாஸ்திரம் சொல்கிறதே. ஆனால் பகவானைப் பார்த்தால், ஞானி தன் சமாதி நிலையினின்றும் இறங்காமல் உலக விவகாரங்களிலே கலந்து கொள்ளலாம் என்று தோன்றுகிறதே! உண்மை என்ன?'' என்று கேட்டார்.

பகவான் அதற்கு விடை சொன்னார்: ''இரண்டும் சரியே. ஏனென்றால், நிர் விகல்ப சமாதிகளில் இரண்டுவகை உண்டு. யோகிகளின் சமாதியாகிய கேவல நிர்விகல்ப சமாதி ஒரு வகை. ஞானிகளின் சமாதியாகிய சகஜநிர்விகல்ப சமாதி என்பது மற்றொரு வகை. ஒரு செம்பைக் கிணற்றிலே விடுகிறோம். அது கிணற்றுக்குள் மூழ்குகிறது. பிறகு அதை அதிலிருந்து மேலே இழுத்துவிடுகிறோம். அதேமாதிரி யோகியினுடைய மனம் சிலகாலத்துக்கு ஆத்ம சைதன்யத்தில் ஒன்றிப்போய் நிற்கும். மறுபடியும் அதை விவகார தசைக்குக் கொண்டுவந்து விடலாம். ஞானியின் சமாதி நிலையோ வேறுபட்டது; நதியின் நீர், கடலிலே கலப்பது போன்றது அது. ஒரு முறை கடலிலே கலந்துவிட்ட நீரை மீட்டும் திருப்ப முடியாது. இரண்டு நீரும் ஒன்றாகிவிடும். அப்படியேதான் ஞானியின் சமாதி நிலையும் கலைவதில்லை. ஆனால் இந்தச் சகஜசமாதி நிலை, உலக விவகாரங்களில் இருந்தபடியே கெடாமல் அநுபவிக்கும் நிலையாகும். ஆத்மானந்தத்தை அநுபவிக்கும் ஞானிக்கு விவகார தசையினால் அந்த அநுபவம் கெடுவதில்லை.

(வாக்கு)

**கண்ணை மூடுதல்:** ஓர் அன்பர் ஒரு நாள், ''தியானம் பண்ணும்போது கண்ணை மூடிக்கொண்டு செய்வதில் விசேஷ பலன் உண்டா?'' என்று கேட்டார். பகவான் பின் வருமாறு விடை அளித்தார்:

''தியானம் செய்கிறவர்கள் கண்ணை மூடிக்கொண்டும் இருக்கலாம்; திறந்துகொண்டும் இருக்கலாம். அது அவரவர்களுடைய சௌகரியத்தைப் பொறுத்தது. பார்க்கின்றவை கண்கள் அல்ல; கண்ணின் மூலம் பார்க்கிறவன் ஒருவன் இருக்கிறான். அவன் தன் பார்வையை உள்முகமாகச் செலுத்திவிட்டானானால், அவன் கண்கள் திறந்திருந்தும் பார்க்க முடியாது. இந்த அறையில் ஜன்னல்கள் இருக்கின்றன. நாம் கண்ணை மூடிக்கொண்ட பிறகு ஜன்னல் மூடியிருந்தால் என்ன? திறந்திருந்தால்தான் என்ன?''

(வாக்கு)

### மலிவான சரக்கு

இந்தக் காலத்தில் மிக மிக மலிவாகக் கிடைப்பது ஒரே ஒரு சரக்கு; அதுதான் 'அரசியல்.'

எல்லாருக்கும் பண ஆசை உண்டு; ஆனால், அதை அடையச் சிலர்தான் வழி கண்டுபிடிக்கிறார்கள்.

# பணம் வேண்டுமா?

## எஸ். எஸ். தாம்ஹனே

தந்திரமும் யுக்தியும் தெரிந்தவர்கள் இடுப்பொடிய ஓயாமல் உழைக்க மாட்டார்கள்; செக்கு மாடுபோலத் திரும்பத் திரும்பச் சுழலுவது அவர்களுக்கு அலுத்துவிடும். யாரும் செய்யாத ஒரு புது வேலையை அவர்கள் கண்டுபிடித்து விரைவிலே பெரிய பணக்காரர்கள் ஆகிவிடுகிறார்கள். நடுவில் தொந்தரவுகள் வந்தால் அவைகளுக்காக அவர்கள் அஞ்ச மாட்டார்கள். முள்வழி அவர்களுக்கு மலர்வழியாகத் தோன்றும். வெற்றி கிடைக்கும்வரையில் அவர்கள் சும்மா உட்கார மாட்டார்கள். இங்கிலாந்து, காலிபோர்னியா முதலிய நாடுகளில் இப்படி நூற்றுக்கணக்கான பேர் இருக்கிறார்கள்.

லிவர்பூலில் வாட்கின்ஸ் என்ற ஒருவன் ஓர் எலியைக் கொண்டு பணக்காரன் ஆகிவிட்டான். ஓர் உணவுக் கப்பலில் பருமனான ஓர் எலி அவனுக்குக் கிடைத்தது. அதன் எடை 26 பவுண்டு இருந்தது. அதற்கு மேலும் உணவு தந்து அதை அவன் பின்னும் பருக்கச் செய்தான். அந்த எலியைக் காண்பதற்கு ஆயிரக்கணக்கான மக்கள் திருவிழாப் போலக் கூடினார்கள். பெண்களும் குழந்தைகளும் ஏராளமாக வந்தார்கள். "எலியைப் பார்க்க ஒவ்வொருவரும் மூன்று பென்ஸ் கொடுக்க வேண்டும்" என்றான் வாட்கின்ஸ். அவனுக்குத் தினத்துக்குப் பதினைந்து பவுன் கிடைத்தன. நாளாக ஆக அவன் வருமானம் பின்னும் உயர்ந்தது. அவன் பெரிய பணக்காரன் ஆகிவிட்டான்.

ஸான் பிரான்ஸிஸ்கோ நகரில் புரொபஸர் வில்லியம் பாட் என்பவர் வேடிக்கையான ஒரு யுக்தி செய்தார். எங்கு விலை திடீரென்று இறங்கிவிட்டதனால் எங்கு வியாபாரியான அவருக்கும் மற்றவர்களுக்கும் ஏராளமான நஷ்டம் வந்துவிட்டது. ஒருவர் சிரமத்தை மற்றவரிடம் சொல்லிக்கொண்டார்கள். புரொபஸர் பத்திரிகைகளில் ஒரு விளம்பரம் செய்தார்: "உங்கள் தொந்தரவுகளை என்னிடம் சொல்லுங்கள்; ஒரு மணி நேரம் யோசனை சொல்வதற்குக் கொஞ்சம் டாலர்தான் செலவு!" பணக்காரர்களிடமும் ஏழைகளிடமும் அவர் ஒரே பீஸ்தான் வாங்கினார். எந்த விஷயத்தைப் பற்றியும் அவர் ஆலோசனை சொன்னதால் லட்சக்கணக்கான ஜனங்கள் அவரிடம் வந்தார்கள். பிறகு அவர் தம் அநுபவங்களைக் கொண்டு ஒரு பெரிய நூலும் எழுதினார். தாம் இழந்த செல்வத்தை அவர் இப்படித் திரும்பச் சம்பாதித்துவிட்டார்.

முதல் உலகப் போர் முடிந்ததும் எங்கும் வேலையில்லாத் திண்டாட்டம் தலை விரித்தாடியது. ஆம்ஸ்டன் என்பவன் எங்கே வேலை

காப்பிரைட்: வஸந்த் (மராட்டி: பிப்ரவரி '53), பம்பாய்-4.

தேடியும் கிடைக்கவில்லை. அவனுக்கு வயது 48. ஒரு நாள் ஒரு டாக்டரோடு அவன் பேசிக்கொண்டிருந்தான். அப்போது அவர், "நான் ஒரு நோயாளியை இன்று சில நிமிஷம் முன்னால் சந்தித்திருந்தால் அவனைக் காப்பாற்ற முடிந்திருக்கும். மேலும் நான் வெளியே இன்ன இடத்துக்குப் போயிருந்தேன் என்பது அப்போது என் மனைவிக்குத் தெரியாது. அதனால் நான் நோயாளியிடம் போய்ச் சேரத் தாமதம் ஆகிவிட்டது" என்றார்.

இதைக் கேட்டதுமே ஆம்ஸ்டனின் மூளை வேலை செய்தது. உடனே அவன் விளம்பரம் கொடுத்தான். "யாருக்காவது நீங்கள் ஏதாவது செய்தி அறிவிக்க வேண்டுமானால், பகலானாலும் சரி, இரவானாலும் சரி, உடனே நான் ஏற்பாடு செய்வேன். இதற்குச் செலவோ மிகவும் குறைவு!" என்று, டெலிபோன் கம்பெனியோடு அவன் சொற்பச் செலவில் ஒப்பந்தம் செய்துகொண்டு வியாபாரத்தைத் தொடங்கினான். பல டாக்டர்களும் வியாபாரிகளும் அவனுக்கு வாடிக்கைக்காரரானார்கள். பத்து வருஷத்துக்குள் அவன் அமெரிக்காவிலேயே பெரிய பணக்காரனாகிவிட்டான்.

கென்னத் லிப் என்பவன் பரம ஏழையாக இருந்தான். சட்டை வாங்கக்கூட அவனிடம் பணம் இல்லை. ஒரு நாள் யுத்தக் காரியாலயத்தில் 2,50,000 பூட்ஸுகளை ஏலத்துக்கு விற்றார்கள். அவை அனைத்தும் இடது கால் பூட்ஸாகையால் யாரும் வாங்கவில்லை. கென்னத் லிப் எங்கோ சிறு தொகையைக் கடனாகப் பெற்று அந்தப் பூட்ஸுகளை வாங்கினான். பிறகு அவற்றில் பாதியை வலது காலுக்குச் சரியாகச் சீர்படுத்தினான். ஆனால் பூட்ஸுகள் பெரியவையாக இருந்ததனால் விற்க முடியவில்லை. அயர்லாந்தில் ஜனங்களின் கால் பெரிதாக இருப்பதைக் கேள்வியுற்று அவன் அங்கே போய் அந்தப் பூட்ஸுகளை விற்றான். இப்போது கென்னத்திடம் 50,00,000 டாலர்கள் குவிந்திருக்கின்றன.

இதெல்லாம் சரி, உங்களுக்குப் பணம் கிடைக்க என்ன வழி செய்யப் போகிறீர்கள்?

## பிரயாணியின் கவலை

வாடகைக்குப் பிடித்த டாக்ஸி கார் ஒன்றில் மிக் ஆண்ட்ரூ என்ற கனவான் செங்குத்தான ஒரு மலைப்பாதையில் சென்றுகொண்டிருந்தார். கார் வெகு உயரம் போனதும், திடீரென்று எஞ்சின் நின்றுவிட்டது; கார் சரிந்து அதிக வேகமாய்க் கீழ் நோக்கி ஓட ஆரம்பித்தது.

கனவானை அழைத்து, "ஸார், ஸார்; பிரேக் முறிந்து போயிற்று. காரை என்னால் நிறுத்த முடியவில்லை" என்று கத்தினான் டிரைவர்.

கனவான் மிக்க பரபரப்புற்றவராய், "அது எப்படியானாலும் சரி, அப்பா. டாக்ஸி - மீட்டர் ஓட வேண்டாம்; அதை உடனே நிறுத்திவிடு" என்றார்.

—'பார்க்குவாய் பால்'

# அட மனிதா!

மனிதன் என்றால் வாழ்வு முழுதும் பல கஷ்டங்களை அநுபவிக்க வேண்டியிருக்கிறது. இந்த உலகத்தில் பிறக்கும் போதும் அவன் தன் இஷ்டம் போல் பிறப்பதில்லை; இதை விட்டுப் போகும்போதும் தன் இஷ்டப்படி போய்விடுவதில்லை. இன்னும் கேட்டால் வேண்டா வெறுப்பாகத்தான் உயிரை விடுகிறான். இப்படிப் பிறந்து சாவதற்குள் அவன் வாழ்வே கரடுமுரடாகத்தான் இருக்கிறது. அவனுடைய வாழ்க்கைப் பிரயாணத்தில்தான் என்ன என்ன முரண்பாடுகள்!

குழந்தையாக இருக்கும்போது பெரிய பெண்கள் அவனை முத்தமிட்டுக் கொஞ்சுகிறார்கள். ஆனால், அவன் பெரியவனானால் சின்னஞ்சிறு பெண்களைத்தான் முத்தமிட முடிகிறது!

அவன் ஏழையாக இருந்தால் நாலு பேர், "அவனுக்கு ஏது சாமர்த்தியம்!" என்கிறார்கள். பணக்காரனாக இருந்தாலோ, "அவன் மகா மோசக்காரனாச்சே! பின்னே எப்படிப் பணம் சேர்த்தானாம்!" என்கிறார்கள்.

அவன் கடன் கேட்கப் போனால், யாரும் கொடுப்பதில்லை. செல்வச் சீமானாக இருந்தால், எல்லாரும் ஏதாவது உபகாரம் செய்யவேண்டும் என்று அவனை நச்சரித்து விடுகிறார்கள்.

தான தருமம் செய்தால், "டம்பத்தைப் பார்!" என்கிறார்கள். அப்படி ஒன்றும் செய்யாவிட்டாலோ, "சே சே! சுத்தக் கஞ்சன்!" என்கிறார்கள்.

அவன் ஆசார சீலனாக இருந்தால், "கபட சந்நியாசி!" என்கிறார்கள். அப்படி இராவிட்டால், "பஞ்ச மாபாதகன்!" என்கிறார்கள்.

அவன் எல்லாரிடமும் அன்பு பாராட்டினால், "இவ்வளவு இளகின மனசு கூடாது. மகா கோழை!" என்கிறார்கள். யாரையும் மதிக்காமல் இருந்தால், "என்ன திமிர் பார்!" என்கிறார்கள்.

அவன் இளவயதில் இறந்துவிட்டால், "அவன் இருந்திருந்தால், எப்படிச் சோபித்திருப்பான் தெரியுமா!" என்கிறார்கள். அதிக நாள் வாழ்ந்தாலோ, "அவன் எதற்கு லாயக்கு? குட்டிச் சுவர் மாதிரி இருக்கிறான்!" என்கிறார்கள்.

ஏதோ கொஞ்சம் பணம் சேர்க்கப் பார்த்தால், "லோபி" என்கிறார்கள். அதைச் செலவழித்தாலோ, "சுத்த ஊதாரி" என்கிறார்கள்.

அவன் கஷ்டப்பட்டு உழைத்தால், "இதென்ன, பிச்சுவாக இருக்கிறானே!" என்கிறார்கள். வேலை செய்யாவிட்டால், "உதவாக்கரை!" என்று திட்டுகிறார்கள்.

ஆகவே, மனிதனாகப் பிறந்து என்ன பலன்?

—'டெய்லர் டீரக்,'



# கலி தீர்க்கும் நூல்

ஒரு சமயம் சனகர் முதலிய நான்கு முனிவர்களும் பதரிகாசிரமம் வந்தார்கள். அங்கே நாரதர் சோர்ந்து உட்கார்ந்திருப்பதைக் கண்டு, "என் இந்த வருத்தம்?" என்று விசாரித்தார்கள்.

அதற்கு நாரதர் சொன்னார்: "பூலோகத்துக்குப் போயிருந்தேன். அங்கே சத்தியம், தவம், சுத்தி, தயை, தானம் முதலிய குணங்களையே காண முடியவில்லை. பல இடங்களில் சுற்றித் திரிந்தேன்; கடைசியில் பகவான் திருவிளையாடல் புரிந்த யமுனைக்கரையை அடைந்தேன். அங்கே ஓர் ஆச்சரியத்தைக் கண்டேன். இளம் பெண் ஒருத்தி மனச்சோர்வோடு உட்கார்ந்திருந்தாள். அவளருகில் இரண்டு கிழவர்கள் நினைவிழந்து கிடந்தார்கள். அவர்களுக்கு நினைவு வரும்படி அந்தப் பெண் தன்னால் ஆன பணிவிடை செய்துகொண்டிருந்தாள். நூற்றுக்கணக்கான பெண்கள் அவளைத் தேற்றப் பார்த்தார்கள். அவள் துயரத்தின் காரணம் என்ன என்று பார்க்க அருகில் சென்றேன். என்னைக் கண்டதும் 'என் துயரத்தைப் போக்க வேண்டும்' என்று வேண்டினாள். உடனே நான், 'நீ யார்? மூர்ச்சையாகிக் கிடக்கும் இவர்கள் யார்? இந்தப் பெண்கள் யார்?' என்றேன்.

"அதற்கு அவள், 'என் பெயர் பக்தி. இவர்கள் ஞானம், வைராக்கியம் என்ற என் இரண்டு பிள்ளைகள். இந்தப் பெண்கள் கங்கை முதலிய நதிகள். என்னைச் சேவிப்பதற்காக இங்கே வந்திருக்கிறார்கள். தேவதைகளே வந்து பணிவிடை செய்தாலும் எனக்கு ஆறுதல் ஏற்படாது. நான் தமிழ் நாட்டில் பிறந்து கர்நாடகத்தில் வளர்ந்தேன். மகாராஷ்டிரத்தில் அங்கங்கே சுற்றி வந்து சற்றுக்



களைப்புற்றேன். குர்ஜரத்துக்கு வந்தபோது கிழடு தட்டியது. பிருந்தாவனம் வந்ததும், இளமை திரும்பிவிட்டது. ஆனால் என் பிள்ளைகள் மட்டும் கிழவர்களாகவே இருக்கிறார்கள். அதனால் தான் வருத்தம். என் இப்படி நேர்ந்தது என்று நீங்கள்தான் சொல்லவேண்டும்' என்றாள்.

"நான் அவளைத் தேற்றி, 'பெண்ணே, இது கலியுகம்; இப்போது ஒழுக்கம், யோகம், தவம் எல்லாம் அழிந்துவிட்டன. மக்கள் தீய செயலில் ஈடுபட்டிருக்கிறார்கள். அதனால்தான் எவரும் உன்னையும் உன் மக்களையும் கவனிப்பதில்லை. பிருந்தாவனத்தில் எப்போதும் பக்தி நடனம் புரிவதால்தான் இங்கே வந்ததும் உனக்கு இளமை திரும்பியது.

**கிருஷ்ண பகவானின் லீலைகளை மட்டும் அல்ல; இன்னும் எத்தனையோ அரிய கதைகளையும் தத்துவங்களையும் சொல்வது பாகவதம். அதன் பகுதிகள் இந்த இதழிலிருந்து தொடர்ச்சியாக வெளிவரும்.**

ஞானத்தையும் வைராக்கியத்தையும் ஏற்பவர் இங்கே இல்லை; அதனால்தான் இவர்களின் கிழத்தன்மை நீங்கவில்லை. கிருஷ்ண பகவான் இந்த உலகத்தை விட்டுப் போனதுமே இங்கே கலி காலை வைத்துவிட்டது. பரீட்சித்து அரசனாகியும் இதை விலக்க முடியவில்லை. யுகதர்மமானதால், பகவானும் இதைத் தடுக்கவில்லை. என் வீணாக வருத்தப்படுகிறாய்? கிருஷ்ண பகவானின் திருவடிகளையே தியானம் செய். உன் வருத்தம் போகும். கௌரவர்களிடமிருந்து திரௌபதியை அவர் காக்கவில்லையா? கோபிகளுக்கு மோட்சம் அளிக்கவில்லையா? நீ அவருக்கு மிகவும் வேண்டியவளாயிற்றே! நீ அழைத்தால், கடையரில் கடையர் வீட்டி

லும் அவர் வந்து தோன்றுவாரே! கிருதம் முதலிய யுகங்களில் ஞானமும் வைராக்கியமும் மோட்சம் அளிக்கும். கலியுகத்தில் பக்தி ஒன்றே மோட்சம் அளிக்கும். பக்தர்களைக் காக்க உன்னையும் உனக்குப் பணிவிடை செய்ய முக்தியையும், பூலோகத்துக்குப் பகவான் அனுப்பியிருக்கிறார். பேய், பிசாசு எதுவாக இருந்தாலும், உன்னைத் தொட்டால் அது புனிதமாகிவிடும். உன்னை இகழ்ந்ததால், துர்வாச முனிவர் முன்னே எவ்வளவு கஷ்டப்பட்டார்! விரதம், தீர்த்தம், யோகம், யாகம் ஒன்றும் வேண்டாம். பக்தியே நேரில் மோட்சம் அளிப்பதால், அதுதான் எல்லாவற்றையும் விடச் சிறந்தது' என்றேன்.

"இதைக் கேட்டதும் பக்தி மகிழ்ச்சியுடன், 'நாரத முனிவரே, உங்களுக்கு என்னிடம் மிகவும் அன்பு உண்டு. நான் எப்போதும் உங்கள் மனத்தில் குடிகொண்டிருப்பேன். இந்தக் குழந்தைகளின் கஷ்டம் விலக வழி சொல்லுங்கள். இவர்களை எழுப்புங்கள்' என்று வேண்டினாள்.

"நான் எவ்வளவுதான் எழுப்பிப் பார்த்தும், அவளுடைய மக்கள் கண் விழிக்காமல் கொட்டாவி விட்டு மீண்டும் மயக்கமுற்றுக் கிடந்தார்கள். நான் என்ன செய்வதென்று யோசிக்கலானேன். அப்போது ஆகாயத்தில், 'கவலைப்பட வேண்டாம். உங்கள் முயற்சி பலிக்கும். இதற்காக ஒரு நல்ல காரியம் செய்யுங்கள்' என்று அசரீரி சொல்வது கேட்டது. அது என்ன காரியமாக இருக்கும் என்று எனக்குப் புரியவில்லை. அதனால் தீர்த்த யாத்திரை செய்துகொண்டே பல பெரியோர்களிடம் பக்தி, ஞானம், வைராக்கியம் இவைகளுக்குப் பலன் தரும் நல்ல காரியங்களைப் பற்றி விசாரித்து வந்தேன். யாருக்குமே தெரியவில்லை. நான் என்ன செய்வதென்று புரியாமல் இங்கே தவம் செய்துகொண்டிருக்கிறேன். நல்ல வேளையாக உங்களைப் பார்த்தேன். நீங்கள் இதற்கு ஏதாவது வழி சொல்லுங்கள்."

இதைக் கேட்டதும் சனகாதி முனிவர்கள் மகிழ்ச்சியோடு பாகவதத்தின் சிறப்பை எடுத்துச் சொன்னார்கள். பிறகு நாரதரையும் மற்ற முனிவர்கள், பக்தி, ஞானம், வைராக்கியம் இவர்களையும் அழைத்துக்கொண்டு கங்கைக் கரைக்குப் போனார்கள். அங்கே 'ஸப்தாஹ' முறைப்படி பாகவதத்தைச் சொன்னார்கள். உடனே பக்தியும் ஞானமும் வைராக்கியமும் புத்துணர்வு பெற்று எழுந்தார்கள். இந்த அற்புதத்தைக் கண்டு எல்லாரும் வியந்தார்கள். பக்தி சனத்குமாரரை வணங்கிக் கொண்டாடினாள்.

அப்போது நாரதர், "சனகாதி முனிவர்களே, இனிமேல் பாகவதத்தைக் கேட்பதால், யார் யார் பரிசுத்தமாவார்கள் என்பதைச் சொல்லி அருளவேண்டும்?" என்று கேட்டுக்கொண்டார்.

அந்த முனிவர்கள், "எப்படிப்பட்ட பாவத்தைச் செய்தவர்களும், 'ஸப்தாஹ' முறைப்படி பாகவதம் கேட்டால் நற்கதி அடைவார்கள்" என்று கூறிப் பின்வரும் வரலாற்றைச் சொல்லத் தொடங்கினார்கள்:

"முன் ஒரு காலத்தில் துங்கபத்திரையின் கரையில் ஒரு நகரம் இருந்தது. அங்கே வேதங்களையெல்லாம் கற்றுணர்ந்த ஆத்ம

தேவர் என்ற அந்தணர் ஒருவர் இருந்தார். அவர் மனைவி துந்துலி என்பவள் தன் இஷ்டம் போல் நடப்பவள். இருந்தாலும் இருவரும் சுகமாகவே காலங்கழித்து வந்தார்கள். ஆனால் அவர்களுக்குக் குழந்தைகளே இல்லை. எவ்வளவோ தர்மம் செய்தும் பலன் ஏற்படவில்லை.

"ஆத்மதேவர் ஒரு நாள் வருத்த மிகுதியால் வீட்டை விட்டுக் காட்டுக்குப் புறப்பட்டார். நடுப் பகலில் தாகம் ஏற்படவே, வழியில் ஒரு குளத்தில் இறங்கித் தண்ணீர் குடித்தார். பிறகு அதன் கரையிலே அமர்ந்து அழுதவண்ணம் இருந்தார். அப்போது ஒரு சந்நியாசி அங்கே வந்தார். ஆத்மதேவரை அவர் விசாரித்துக் காரணத்தைத் தெரிந்துகொண்டார். பிறகு, 'ஏன் உங்களுக்குக் குழந்தையின்மேல் இவ்வளவு ஆசை? அதனால் கஷ்டந்தானே விளையும்! எனக்குந்தான் ஏழு ஜன்மங்களாகக் குழந்தைகளே இல்லை. இந்த மாதிரி உலகப் பற்றையெல்லாம் விட்டுச் சந்நியாசம் ஏற்றுக்கொள்ளுங்கள்' என்றார்.

"அப்படியும், ஆத்மதேவர் குழந்தைதான் வேண்டும் என்று சொல்லவே, அவரிடம் சந்நியாசி ஒரு பழத்தைக் கொடுத்து, 'இதை உங்கள் மனைவிக்குச் சாப்பிடக் கொடுங்கள். அப்புறம் ஒரு வருஷம் விரதத்தோடு இருந்தால் நல்ல மகன் பிறப்பான்' என்று சொல்லிவிட்டுப் போனார்.

"அந்தணர் அப்படியே மனைவியிடம் பழத்தைக் கொடுத்து அதைச் சாப்பிடச் சொல்லிவிட்டு வெளியே சென்றார். அவளுக்குக் கர்ப்பந் தரித்துப் பிரசவ வேதனையை வேறு அநுபவிக்க விருப்பமில்லை. தன் தங்கையிடம் இதைச் சொன்னாள். அதற்குத் தங்கை, 'நான் இப்போது கர்ப்பவதியாக இருக்கிறேன். எனக்குப் பிறக்கும் குழந்தையை உனக்குக் கொடுத்து விடுகிறேன். அதற்காகக் கொஞ்சம் பணம் கொடுத்துவிடு; போதும். நான் பிரசவிக்கும் வரையில் நீ கர்ப்பிணி போல் வேஷம் போடு' என்று சொன்னாள்.

"துந்துலி மகிழ்ச்சியோடு தங்கைக்குப் பணம் கொடுப்பதாக வாக்களித்தாள். பிறகு அந்தப் பழத்தின் மகிமையைப் பரிசோதிப்பதற்காக அதை ஒரு பசுவுக்குக் கொடுத்தாள்.

"சில நாட்களுக்குப் பின் தங்கைக்குப் பிறந்த மகனைத் தன் மகன் என்று சொல்லித் தன் புருஷருக்கு மகிழ்ச்சியூட்டினாள். ஆத்மதேவரும் அந்தக் குழந்தைக்கு ஜாதகர்மம் முதலிய சடங்குகளைச் செய்தார். மூன்று மாதங் கழித்து அந்தப் பசுவுக்கும் தேவனைப்போல் அழகான ஓர் ஆண் குழந்தை பிறந்தது. ஆத்மதேவர் தம் குழந்தையைப் போலவே அதையும் வளர்த்து வந்தார். துந்துலியின் மகனுக்குத் 'துந்துகாரி' என்றும், பசுவின் மகனுக்குக் 'கோகர்ணன்' என்றும் அவர் பெயர் வைத்தார்.

"உரிய வயது வந்ததும் கோகர்ணன் எல்லாச் சாஸ்திரங்களையும் வேதங்களையும் கற்று நல்லொழுக்கத்தில் சிறந்து விளங்கினான். துந்துகாரியோ அதற்கு நேர் மாறாகத் தீய பழக்கமுள்ளவனாய் இருந்தான். கடைசியில் ஒரு நாள் அவன் தன் தாய் தந்தையரை அடித்துவிட்டு வீட்டிலுள்ள

பாத்திரங்களை வேசிகளுக்குக் கொடுத்தான். இதனால் ஆத்ம தேவர் வருத்தமுற்றிருப்பதைப் பார்த்த கோகர்ணன் 'மகன்மேல் கொண்ட பாசத்தை விட்டுத் துறவியாகி விடுங்கள்' என்று அவரிடம் சொன்னான். அவரும் அப்படியே துறவு பூண்டு காட்டுக்குப் போய்க் கடவுளைத் தியானித்து வந்தார்.

"அவர் போனபின், தாயைத் துந்துகாரி அடித்துத் துன்புறுத்தியதால், அவள் ஒரு நாள் இரவு கிணற்றில் விழுந்து இறந்தாள். கோகர்ணன் யோகாப்பியாசம் செய்துகொண்டே தீர்த்த யாத்திரை செய்யலானான். துந்துகாரி பல இடங்களில் திருடி வந்ததை அறிந்த வேசிகள், அவனால் தங்களுக்கு ஏதாவது தீங்கு நேருமோ என்று அஞ்சினார்கள். ஆகவே, தூங்கும்போது அவனைக் கொன்று அவன் சவத்தை ஒரு குழியில் போட்டுவிட்டார்கள். அவனிடமிருந்த பொருளையெல்லாம் எடுத்துக்கொண்டு தங்கள் தங்கள் வீட்டுக்குப் போய்ச் சேர்ந்தார்கள். துந்துகாரி ஒரு பேயாகி அலைந்தான்.

"கோகர்ணன் தீர்த்த யாத்திரைக்கு நடுவிலே தன் வீட்டுக்கு ஒரு நாள் வந்து இரவில் அங்கே தங்கினான். அப்போது பல வித பயங்கர உருவங்களுடன் துந்துகாரி அவன் எதிரே தோன்றினான். 'நீ யார்?' என்று விசாரித்ததும் துந்துகாரி அழவே, கோகர்ணன் தன்னிடமிருந்த தீர்த்தத்தை அவன்மேல் தெளித்தான்; அப்போது துந்துகாரி பாவம் நீங்கித் தான் யார் என்பதையும், நடந்த விவரங்களையும் அப்படியே சொன்னான்; 'இந்த நிலையிலிருந்து நீதான் என்னை மீட்கவேண்டும்' என்றும் கேட்டுக்கொண்டான்.

"கோகர்ணன் அன்றிரவு அவனைத் தேற்றி அனுப்பி, மறுநாள் பண்டிதர்களிடமும் பெரியோரிடமும் போய் நடந்ததைச் சொன்னான். துந்துகாரியை மீட்க என்ன வழி என்று கேட்டான். எவருக்கும் தெரியவில்லை. பிறகு சூரியனை வழி மறித்து இதற்குப் பரிகாரம் இல்லையா என்று கேட்ட போது, 'பாகவதத்தை ஸப்தாஹ முறைப்படி படித்தால் நல்லது' என்று பதில் வந்தது.

"கோகர்ணன் கிராம மக்களைக் கூட்டிப் பாகவதக் கதையைச் சொல்லலானான். துந்துகாரி அங்கிருக்கும் ஏழு கணு உள்ள மூங்கில் ஒன்றில் வாயு உருவில் இருந்தபடி அதைக் கேட்டான். ஒவ்வொரு நாள் ஆனதும் ஒரு கணுவாக ஏழு நாட்களில் ஏழு கணுக்களும் வெடித்தன. பிறகு துந்துகாரி தன் பேய் வடிவத்தை விட்டு, மஞ்சள் பட்டு அணிந்து, கிரீடகுண்டலங்களுடன் எல்லார் எதிரிலும் தோன்றிக் கோகர்ணனை வணங்கி, 'உன் தயவால்தான் நற்கதி அடைந்தேன். பாகவதத்தைக் கேட்டால் எல்லாப் பாவமும் போகும் என்பது நிச்சயம்' என்றான். பிறகு விஷ்ணு லோகத்திலிருந்து தனக்காக வந்த விமானத்தில் ஏறிச் சென்றான்."

பாகவதத்தின் மகிமையை இப்படிச் சொல்லி முடித்ததும், சனகாதி முனிவர்கள் அதைப் படிக்க வேண்டிய முறையையும் எல்லாருக்கும் உபதேசித்தார்கள்.

*இந்தக் கட்டுப்பாட்டைச் சர்க்கார் செய்ய முடியாது; நாமேதான் செய்துகொள்ள வேண்டும்.*

# உணர்ச்சிக் கட்டுப்பாடு

## டாக்டர் ஜே. ட்யூவிட் ஃபாக்ஸ்

நாம் சில நாட்களில் சுறுசுறுப்பு இல்லாமல் சோர்வுடன் இருக்கிறோம். சில நாட்களில் மிகவும் உற்சாகமாக இருக்கிறோம். சோர்வாக இருக்கும்போது பிறர்மேல் எரிந்து விழுகிறோம்; அநாவசியமாகக் கோபித்துக் கொள்கிறோம்.

உணர்ச்சி என்பது ஒவ்வொரு மனிதனின் மனோபாவத்திலும் விசித்திரமான அம்சமாக இருக்கிறது. உங்களுக்கும் உணர்ச்சி இருக்கிறது; எனக்கும் உணர்ச்சி இருக்கிறது. ஆனால் உங்கள் உணர்ச்சி என் உணர்ச்சியுடன் ஒத்திருக்க வேண்டிய அவசியமில்லை. ஒவ்வொரு மனிதனின் உணர்ச்சியும் தனித்தனியானது. சுற்றுப்புற நிகழ்ச்சிகளையும் சந்தர்ப்பங்களையும் பொறுத்தே தனி மனிதனின் உணர்ச்சி அமைகிறது.

நமக்குத் தெரியாமல் உணர்ச்சிகள் தோன்றுகின்றன; நாம் அறியாமலே அவை மாயமாக மறைந்தும் போகின்றன. உணர்ச்சி தோன்றுவதற்குச் சில சந்தர்ப்பங்களும் அநுகூலமாக இருக்கின்றன என்பதும் உண்மைதான். யாராவது நண்பர் ஒருவர் உங்களைப் பாராட்டினால், உங்களுக்கு மகிழ்ச்சியும் உற்சாகமும் ஏற்படுகின்றன. நீங்கள் எடுத்த காரியங்கள் சரியாக நடந்து கொண்டிருந்தால், உங்களுக்குச் சந்தோஷமாக இருக்கிறது. ஆனால் நண்பர் ஒருவர் உங்களிடம் கொஞ்சம் கடுமையாகப் பேசிவிட்டார் என்று வைத்துக்கொள்வோம்; நீங்கள் தவறு செய்யாதிருந்தபோதிலும், உங்களுக்கு வருத்தமும் கோபமும் ஏற்படுகின்றன.

உடலில் நரம்புகளுக்கு இருக்கும் சக்தியைப் பொறுத்தே உள்ளத்தில் உணர்ச்சிகளும் எழுகின்றன. நரம்பு சக்தி மிகுதியாக இருந்தால், நீங்கள் எப்போதும் உற்சாகத்துடனும் தைரியமாகவும் இருப்பீர்கள். உங்கள் உடல் நரம்புகள் தளர்ந்திருந்தால், நரம்பு சக்தியை எளிதில் இழந்து விடுவீர்கள். அந்தச் சமயங்களில்தான், நீங்கள் களைத்துச் சோர்வடைகிறீர்கள். அதனாலேயே நல்ல ஆரோக்கிய நிலையில் இல்லாதவர்கள் விரைவில் அலுப்பும் சலிப்பும் அடைகிறார்கள்.

இரவில் நெடுநேரம் விழித்துக் கொண்டிருந்தால், களைப்பு ஏற்படுகிறது. உங்கள் உடலில் உள்ள நரம்பு சக்தி முழுவதும் அன்றைய வேலைகளில் கழிந்துவிடுவதே இதற்குக் காரணம். மேலும் நரம்பு சக்தியைத் திரட்டிக்கொள்ள உடலுக்கு இன்னும் அவகாசம்

காப்பிரைட்: ஃப்ரீ இண்டியா (ஆங்கிலம்: 8-8-'53), ஜெனரல் பாட்டீர்ஸ் ரோடு, சென்னை-2.

கொடுக்கவில்லை என்றே இதற்குப் பொருள்.

நாம் ஒவ்வொருவருமே சில நாட்களில் மிகவும் உற்சாகமாக இருக்கிறோம்; வேறு நாட்களில் சோர்வாக இருக்கிறோம். நாள்தோறும் நம் உணர்ச்சிகள் எப்படி இருக்கின்றன என்பதைத் தவருமல் ஒரு டயரியில் எழுதி வரவேண்டும். இரண்டு, மூன்று மாதங்களுக்குப் பிறகு இந்த டயரியைப் பார்த்தால், நாம் உர்சாகமாகவும் தைரியமாகவும் இருக்கும் நாட்களும் களைத்திருக்கும் நாட்களும் விட்டு விட்டு இருந்தாலும், அவற்றில் ஓர் ஒழுங்கும் இருப்பதைக் காணலாம். களைத்திருக்கும் நாட்கள் ஒரே சீராக இருக்கும். அவற்றுக்கு இடையே உற்சாகமான நாட்களும் அமைந்திருக்கும். நம் உணர்ச்சிகள் ஒரு வகையில் சுற்றிச் சுற்றி வரும் வட்டமாகவே தோன்றுகின்றன. சில தினங்கள் உணர்ச்சி மிகுந்தும் சில தினங்கள் உணர்ச்சி குன்றியும் இப்படியே மாறிமாறித் தோன்றிக்கொண்டே இருக்கின்றன.

உற்சாகமாக இருக்கும் நாட்களுக்கு இடையே உள்ள வித்தியாசம் எப்போதும் ஒரேமாதிரியாக இருக்காது. ஆனல் பல மனிதர்களின் உணர்ச்சி வட்ட நாட்கள் சீராகவே அமைந்திருக்கின்றன. மூன்று வாரங்களுக்கு ஒரு முறை உற்சாகமான நாட்கள் வரலாம்; சில சமயம் நாலு அல்லது ஐந்து வாரங்களுக்கு ஒரு முறை உற்சாகமான நாட்கள் வரலாம். பெண்களின் விஷயத்தில் இந்த உணர்ச்சி வட்டம் அவர்கள் மாதவிடாய் ஆகும் காலத்தைப் பொறுத்து அமைந்திருக்கிறது. மாதவிடாய்க் காலத்திலும் அதற்கு முந்திய சில நாட்களிலும் பெண்கள் உற்சாகமற்றுக் களைத்திருப்பார்கள்.

நம்மிடம் உள்ள நரம்பு சக்தியைப் பொறுத்தே நம் உணர்ச்சியைக் கட்டுப்படுத்த முடியும் என்று நான் முன்பே சொல்லியிருக்கிறேன். நரம்பு சக்தியும் கிட்டத்தட்ட ஒரு குறிப்பிட்ட காலவரையறைக்குட்பட்டே ஏற்படுகிறது. புதிதாக நரம்பு சக்தி ஏற்படும் காலத்தில் இயற்கையாகவே நாம் தைரியமும் தன்னம்பிக்கையும் பெறுகிறோம். நம் நரம்பு சக்தியை விரைவில் அசட்டையாகச் செலவழித்துவிட்டால், உணர்ச்சி வட்டத்தின் விதிப்படி வரவேண்டிய சோர்வும் களைப்பும் முன்னதாகவே ஏற்பட்டுவிடும். நம் உடம்பில் அவ்வப்போது ஏற்படும் நரம்பு சக்தியைக் கவனமாகப் பயன்படுத்தினல், களைப்பும் சோர்வும் தோன்றும் காலத்தை எளிதில் சமாளித்துவிடலாம்.

ஒரே சமயத்தில் அதிகப் பளுவைச் சுமப்பதாக நீங்கள் கருதினல், அதாவது இரண்டு மூன்று காரியங்களைச் செய்யவேண்டி இருந்தால், பளுவைக் குறைத்துக் கொள்ளுங்கள். இரவில் நெடு நேரம் கண் விழித்துக்கொண்டு அரட்டை அடிப்பதோ சினிமா பார்ப்பதோ நல்லதல்ல. தூக்கம் கெடுவதால் இழந்த சக்தியை, உடல் மீண்டும் ஈடு செய்வதற்கு எடுத்துக்கொள்ளும் நேரம் குறைகிறது. இதன் பலனுக மறு நாள் முழுவதும் குறைந்த சக்தி கொண்டு நிறைய வேலை செய்ய நேரும்; அதனுல் விரைவில் களைப்பு உண்டாகும். நம் மனப்போக்கைப் பொறுத்தே நம் உணர்ச்சிகளும்

தோன்றுகின்றன. எனவே, எப்போதும் மனத்திருப்தியுடன் இருக்க முயலவேண்டும். இதற்கு என்ன செய்யவேண்டும்? நாம் உடுக்கும் உடைகளும் இதற்குக் காரணமாக அமையக்கூடும். நமக்குப் பிரியமான உடைகளை உடுத்துக்கொண்டிருக்கும்போது, 'நான் நன்றாகத்தான் இருக்கிறேன்' என்று நாமே சொல்லிக்கொள்வோம். நம் தலையைச் சரியாக வாரிக்கொள்ளாமல் அழுக்கு உடையை அணிந்துகொண்டால், நிச்சயம் இது நம் மனத்தையும் பாதிக்கும்.

நமக்கேற்படும் சுக துக்கங்களைப் பற்றி எண்ணுவதுமட்டும் அல்ல; நம் உணர்ச்சி நிலையைப்பற்றி எண்ணுவதுமே நம்மைப் பாதிக்கும். உங்கள் உணர்ச்சி எதோ ஒருவிதமாய்ச் சோர்ந்திருக்கலாம். 'ஐயோ, இப்படிச் சோர்ந்திருக்கிறோமே!' என்று எண்ணினீர்களானால், உங்கள் மனச்சோர்வு இன்னும் பலமாய்ப் போய்விடும். அப்படி இல்லாமல்,'இந்தச் சோர்வு நிலையானதல்ல; தைரியமும் நம்பிக்கையுமே எப்போதும் என் இயல்பு' என்று உங்களுக்கு நீங்களே சொல்லிக்கொள்ள வேண்டும். சோர்வு வரும் உணர்ச்சி வட்ட நேரங்களில் ஒன்றிப் போய்விடாமல் இப்படி நீங்கள் மனத்தைத் திடப்படுத்திக்கொண்டால், சுறுசுறுப்பைத் தரும் உணர்ச்சி வட்ட நேரம் சீக்கிரமாகவே வர உதவியாயிருக்கும்; இந்தச் சோர்வும் வர வரக் குறைந்துபோகும்.

## கொலை! கொலை!

ஒரு பெண்மணிக்குச் சங்கீதம் என்றால் வெகு பிரியம். ஆனால், பிடில், வீணையெல்லாம் அவளுக்குச் சரிப்பட்டு வராது. ஹார்மோனியம்தான் வாசிப்பாள். ஒரு நாள் வீட்டுக்குள்ளே வெகு குஷியாக இப்படி அவள் ஹார்மோனியம் வாசித்துக்கொண் டிருக்கும்போது, வாசல் கதவை யாரோ தட தடவென்று தட்டும் சப்தம் கேட்டது.

பெண்மணி மிக்க எரிச்சலோடு கதவைத் திறந்தாள். வாசலில் பல போலீஸ் ஜவான்கள் வந்து நிற்பதைக் கண்டு திடுக்கிட்டாள்.

"என்ன விஷயம்?" என்று பரபரப்புடன் கேட்டாள்.

"ஒன்றுமில்லை, அம்மா. யாரோ ஃபோனில் கூப்பிட்டு, இந்த வீட்டில் தியாகராஜர் என்ற ஒருவரை யாரோ கொலை செய்துகொண் டிருப்பதாகத் தகவல் கொடுத்தார்கள்" என்றார் போலீஸ்காரர்களின் தலைவர்.

## மருமகன் மகிழ்ச்சி

வாலிபன் இரைக்க இரைக்க ஓடி வந்து, "வந்தனம், டாக்டர். உங்கள் வைத்தியத்தால் நான் பெரும் பயன் அடைந்தேன்" என்றான்.

"என்ன இது? நீ ஒன்றும் என்னிடம் வைத்தியம் செய்துகொண்டதாக நினைவில்லையே."

"உண்மைதான். ஆனால், என் மாமா உங்களிடம் வைத்தியம் செய்துகொண்டார். நான்தான் அவருடைய வார்சு."

—'இல்லஸ்ட்ரேடட் வீக்லி அவ் பாகிஸ்தான்'



# தெய்வத் தாமரை

**காவியம், சிற்பம், ஓவியம் எல்லாக் கலைகளிலும் கீழ் நாட்டிலே விசேஷ இடம் பெற்றிருக்கும் இந்த மலரைப்பற்றிய ரசமான சில விஷயங்கள்.**

ஆசியாவில் மிகவும் சிறந்த மலர் தாமரை. ஆதி காலத்திலிருந்து இந்தியாவிலும் இலங்கையிலும் இலக்கியம், கலை முதலியவற்றில் தாமரை சம்பந்தமான பல விவரங்கள் இருக்கின்றன. வேதத்திலுள்ள தைத்திரீயப் பிராமணத்திலே, "தாமரையிலிருந்து தோன்றியவர்களில் அக்கினித் தேவனும் ஒருவன். பிரம்மாவும் அவலோகிதேசுவரருங்கூட அப்படியே" என்று வருகிறது. மகா விஷ்ணுவின் நாபித் தாமரையிலிருந்து பிரம்மா தோன்றினர் என்று மகா பாரதத்தில் படித்திருக்கிறோம். இதனால் 'பத்மநாபன்' என்ற ஒரு பெயர் மகாவிஷ்ணுவுக்கு வந்தது. இதே மாதிரி லட்சுமி தேவிக்கும் தாமரைக்கும் சம்பந்தம் உண்டு.

பொதுவாக, இந்து பௌத்த ஜைனக் கட்டிடங்களிலெல்லாம் தாமரை பொறித்திருப்பதைக் காணலாம். அது தெய்விகத்தின் சின்னமாக விளங்குகிறது; உயிர் நிலையானது என்பதையும், படைப்பு, காத்தல் இந்தத் தொழில்களையும் குறிக்கிறது. இந்தக் கருத்தோடுதான் மைத்திரேய புத்தர், காந்தார புத்தர் சிலைகளின் கையில் தாமரை ஏந்தியிருப்பதுபோல் சிற்பிகள் செதுக்கியிருக்க வேண்டும். ஸாஞ்சி, பார்ஹூத், அமராவதி, புத்த கயை, அநுராதபுரம், பொலன்னறுவை இந்த இடங்களில் உள்ள சிற்பங்களில் வட்ட வடிவமான அலங்காரங்களில் தாமரை இருப்பதைக் காணலாம். மேற்கு இந்தியாவில் பாறைகளைக் குடைந்து நிறுவிய

**எஸ். பி. குணதிலக**

மூலம்: ஸ்ரீலங்கா (தமிழ்; ஜனவரி'53), அரசாங்கப் பிரசார நிலைய அதிபர், கொழும்பு-1.



கொழும்புப் பொருட் காட்சியில் ஒரு தந்தச் சீப்பில் இருப்பது



தேகல் தொருவையில் இருப்பது



தம்புல்லையில் இருக்கும் ஒரு சித்திரம்

பௌத்த விஹாரங்களில் தூண், சட்டம், கூரை இவற்றில் தாமரை முத்திரையாக அமைந்திருக்கிறது. காந்தாரம், மதுரா முறையில் அமைந்த சிற்பங்களில் தண்டுடன் தாமரையைச் செதுக்கியிருக்கிறார்கள். தெய்வங்களின் ஆசனமாகவும் பீடமாகவும் தாமரை விளங்குகிறது. தாமரையில் இருக்கும் புத்த உருவம் புத்த பதவியின் உயர்ந்த நிலையைக் காட்டுகிறது.

“மத்திய கால ஆங்கிலக் கலையில் ரோஜா முக்கியமாக இருந்தது போல் கீழ்நாட்டுக் கலைகளிலெல்லாம், பார்த்தவுடனே கண்டு பிடிக்க முடியாத பல உருவங்களில் தாமரை மலர் சிறந்து விளங்குகிறது. எளிய மண் பாண்டம் முதலியவற்றில்கூட இதைக் காணலாம். வட்ட வடிவமான எல்லாப் பொருள்களிலும் இப்படித் தாமரையை அமைத்து அலங்கரித்திருக்கிறார்கள் நம் சிற்பிகள். தாமரை வட்டங்கள் 4, 8, 16 இப்படிப் பல இதழ்கள் கொண்டிருக்கும்” என்று பிரபல கலை நிபுணர் டாக்டர் ஆனந்த குமாரசுவாமி ஓர் இடத்தில் குறிப்பிட்டிருக்கிறார்.

கண்டியிலுள்ள தலத மாளிகை (தந்தகோபுரம்) என்ற கட்டிடத்தின் கிழக்கு அறைக்



அநுராதபுரத்திலுள்ள சித்திரம்

பத்மபீடம்



ஒரு முகமூடியில் காண்பது

கதவுக்கு மேல் பித்தளையில் செய்த ஒரு தாமரையும், மலராசனத்தின் மேலே கூரையில் தங்கத்தால் செய்து நடுவே ரத்தினம் பதித்த தாமரைப் பூவும் தலை கீழாகத் தொங்குகின்றன. கட்டிடங்களிலும், சந்தனக்கல், உலோகக் கூஜா, தட்டு இவைகளிலும் இந்த வேலைப்பாட்டைக் காணலாம். எகிப்தில் சூரியனுக்கு 'ரா' என்று பெயர். அவன் கையில் தாமரை மலர் ஏந்தியிருப்பதைச் சிற்பங்களில் காணலாம்.

பரத நாட்டியத்தில் தாமரை உலகத்தையும் அழகையும் உருவகப்படுத்துகிறது. லட்சுமியும் அன்னங்களும் அமைந்த தாமரைக் குளம் சந்தான விருத்தியைக் காட்டுகிறது. தாமரை மலரைப் பூஜையின்போது நாம் உபயோகிக்கிறோம். புதிய மர வேலைப்பாடு, ஆபரணம் இவைகளிலும் தாமரைப் பூவைக் காணலாம். பிரிட்டிஷ் காமன்ஸ் சபையார் சமீபத்தில் இலங்கைப் பிரதிநிதிகளிடம் அளித்த செங்கோலில் இப்படி ஒரு தாமரை உருவைத்தான் அமைத்திருக்கிறார்கள்.

## பக்தரின் யோசனை

ஞாயிற்றுக்கிழமைகளில் அமெரிக்க சர்க்கார் சேனைகளும் புரட்சிக்காரர் சேனைகளும் போரிட்டுக் கொண்டிருந்தது ஒரு பிரபல பாதிரிக்குப் பிடிக்கவில்லை. அவர் நல்ல தெய்வபக்தர். அப்போது ஜனாதிபதியாக இருந்தவர் லிங்கன். அவரிடம் அந்தப் பாதிரி போனார். "நம் கர்த்தரின் ஓய்வு நாளில் இப்படிப் போரிடலாமா?" என்று முறையிட்டார்.

"நீங்கள் சொல்வது அத்தனையையும் என் சர்க்கார் முற்றும் அங்கீகரிக்கிறது" என்றார் லிங்கன்.

"இதைக் கேட்க எனக்கு மிகவும் சந்தோஷமாயிருக்கிறது" என்று சொல்லித் திரும்பினார் பாதிரி.

"இருங்கள். ஒரு விஷயம். ஞாயிற்றுக்கிழமையன்று போரிடும் இந்த அநியாய வழக்கத்தை ஒழிப்பதற்கு உங்கள் செல்வாக்கைப் பயன்படுத்தி இன்னும் ஒரு காரியம் நீங்கள் செய்யவேண்டும்" என்று சொன்னார் லிங்கன்.

"அதென்ன, ஜனாதிபதி அவர்களே?" என்று கேட்டார் பாதிரி.

"ஒன்றும் அப்படிப் பிரமாதமில்லை. புரட்சிக்காரத் தளபதிகள் இந்த ஞாயிற்றுக்கிழமைகளில் நம் போர் வீரர்களைச் சும்மா இருக்கும்படி விடச் செய்யுங்கள். அவ்வளவுதான்" என்றார் ஜனாதிபதி லிங்கன்.

—எம்மானுவேல் ஹெர்க்ஸ்

[இதோ சில கேள்விகள். எங்கே உங்களுக்த விடை தெரிகிறதா பாநங்கள். பிறது 62-ஆம் பக்கத்து விடையுடன் ஒப்பிட்டுக்கொள்ளுங்கள்.]

1. தமிழ் மாதப் பெயர்களில் குறைந்த எழுத்துக் கொண்டது எது?

2. உலகில் பல இடங்களில் 'கம்யூனிஸம்' என்ற கொள்கை பரவியதற்கு மூலகாரண புருஷர் கார்ல் மார்க்ஸ். ருஷியா, ஜெர்மனி, இங்கிலாந்து, அமெரிக்கா இந்த நாலில் ஒன்று கார்ல் மார்க்ஸ் பிறந்த நாடு. அதைக் குறிப்பிடுவீர்களா?

3. ஆங்கிலக் காலண்டருக்கும் தமிழ்ப் பஞ்சாங்கத்துக்கும் சம்பந்தம் எதுவும் இல்லை. ஆயினும் அநேகமாக ஒவ்வொரு வருஷமும் ஜனவரி 14-ஆம் தேதி ஒன்றும் எப்ரல் 13-ஆம் தேதி ஒன்றுமாக இரண்டு தமிழ்ப் பண்டிகைகள் வருகின்றன. அவை எவை தெரியுமா?

4. இந்தியா, ஈரான், ஈராக், ஸயாம் இவைகளுக்கு வழங்கும் வேறு பெயர்கள் என்ன? இவைகளில் சில சமீப காலத்துப் பெயர்களாகவும் இருக்கும்; பழங்காலப் பெயராகவும் இருக்கும்.

5. வ. வே. சு. ஐயர் அகால மரணம் அடையக் காரணமாயிருந்தது குற்றாலம் நீர்வீழ்ச்சியா? பாபநாசம் நீர்வீழ்ச்சியா?

6. 'டிண்டிம சாஸ்திரி'யின் கதையை எழுதியவர் யார்?

7. கனவில் கண்ட காதலனைக் கண்டுபிடித்துக் கடிமணம் புரிந்துகொண்ட புராண கன்னிகை யார்?

8. நம் நாட்டுப் பழங்கால வீரரில் பலர் பல தொழில்களில் தேர்ந்திருந்தார்கள். அவர்களில் இருவர் சண்டையில் மட்டும் அல்ல, சமையலிலும் திறமை வாய்ந்திருந்தார்கள். இந்த இரண்டு இதிஹாஸ புருஷர்களின் பெயர்களையும் சொல்ல முடியுமா?

9. "மாணிக்கம் கட்டி வைரம் இடைக்கட்டி ஆணிப் பொன்னால் செய்தவண்ணச் சிறுதொட்டில்..." என்று தொடங்கும் கவியைக் கட்டியவர் யார்?

10. காபி, டீ இந்த இரண்டில் எதில் அதிகமான காஃபீன் இருக்கிறது?

11. "மருந்து மாத்திரைகள் அடங்கிய சீசாக்களுக்குள் பஞ்சை அடைக்கிறார்களே. இதனால் மாத்திரையை எடுக்கும்போதும் தொல்லையாயிருக்கிறது; எடுத்த பின் மறுபடியும் பஞ்சை அடைப்பதும் தொல்லையாயிருக்கிறது. பஞ்சை கெட்டி மூடியிலே ஒட்டிவிட்டார்களானால், இந்தத் தொல்லை இராதே" என்கிறார் ஒருவர். இந்தத் தொல்லை அவசியந்தானா? இவர் சொல்லுவதுதான் பரிகாரமா?

# புத்தகசாலைக் கதை

ஸ்ரீமதி சித்ரா போஸ்

**புத்தகங்களும் புத்தகசாலைகளும் இன்று உலகெங்கும் வியாபகமாயிருக்கின்றன. இவைகளின் வரலாறு ஒரு ரசமான கதை. உலகில் சில பெரிய புத்தக சாலைகள் வளர்ந்த விவரத்தை இங்கே காணலாம்.**

'லைப்ரரி' என்ற வார்த்தை 'லிபர்' என்ற லத்தீன் வார்த்தை அடியாகப் பிறந்தது. 'லிபர்' என்றால் புத்தகத் தொகுதி என்று பொருள். புத்தகங்களைச் சேகரித்து வைக்கும் இடம் என்ற அர்த்தம்கொண்ட 'ஸாங்க்ஷ்னு' என்ற வார்த்தையால் சீனக் காரர்கள் புத்தகசாலையைக் குறிப்பிடுவார்கள். எழுத்து, காகிதம், பேனா, மை இவைகள் தெரியாத மிகப் பழங்காலத்திலேகூடப் புத்தகசாலைகள் இருந்ததற்கு அறிகுறிகள் இருக்கின்றன. கல்லிலோ மரத்திலோ செதுக்கிய சில குறிகளே முதல் எழுத்துக்கள்; முதல் புத்தகம் களிமண்ணினால் செய்தது; முதல் புத்தகசாலை (லைப்ரரி) ஒரு கோவில்; முதல் புத்தகசாலை அதிபர் ஓர் அர்ச்சகர்.—இப்படி நாம் ஊகிக்கலாம். பாபிலோன் நகரத்தின் மண்மேடு ஒன்றுக்கடியில் இந்தமாதிரி புத்தகசாலை ஒன்றைப் புரொஃபஸர் ஹில்ப்ரெக்ட் என்ற அமெரிக்க மேதாவி ஒருவர் கண்டுபிடித்தார். இது கிறிஸ்து பிறக்க 5000-ஆண்டுகளுக்கு முன்னால் இருந்தது. 2500 களிமண் தகடுகள் இதில் இருந்தன. விஷய வாரியாகப் பிரித்து இவைகளைக் களிமண் அலமாரிகளில் அந்தக் கால மக்கள் அடுக்கியிருந்தார்கள்.

இதைப்போன்ற இன்னொரு புத்தகசாலையை அஸீரியாவில் கண்டுபிடித்தார்கள். இதிலிருந்த களிமண் புத்தகங்களைப் பிரிட்டிஷ் மியூஸியத்தில் வைத்துப் பாதுகாத்து வருகிறார்கள்.

கல் சுவர், மரக் கட்டை, களிமண் தகடு, செங்கல் இவைகள் புத்தகங்களாக இருந்து வந்த காலத்துக்குப் பிறகு, 'பேப்பிரஸ்' என்ற ஒரு வகைச் செடியின் தண்டு, எழுதும் சாதனமாக இருந்தது. பதம் செய்த கன்றுக்குட்டியின் தோலும் ஆட்டுத்தோலும் எழுதும் சாதனமாக வந்த பிறகு, புத்தகங்கள் தோன்றத் தொடங்கின. கி. மு. நாலாம் நூற்றாண்டிலேயே எழுத்துக்கள் உபயோகத்தில் இருந்திருக்கின்றன. எகிப்து எழுத்துக்களில் எழுதிய பேப்பிரஸ் ஏடு ஒன்று இன்றும் பாரிஸிலுள்ள 'பிப்ளியோதெக் நேஷனேல்' என்ற தேசியப் புத்தகசாலையில் இருக்கிறது.

காப்பிரைட்: அமிர்த பஜார் பத்திரிகா (ஆங்கிலம்: 1-2-'53), கல்கத்தா.

தற்காலப் புத்தகசாலை 19-ஆம் நூற்றூண்டின் ஆரம்பத்தில்தான் உருவாகத் தொடங்கியது.

ஜனநாயக வளர்ச்சி, காகிதம், மை, அச்சு யந்திரம் இவைகள் தோன்றியது, பல எழுத்தாளர்களும் படிப்பவர்களும் உண்டானது, பல வகைக் கலைகளின் வளர்ச்சி, மனிதர் விவகாரத்தில் எழுத்துக்கு ஏற்பட்ட செல்வாக்கு இவைகளே தற்காலப் புத்தகசாலைக்கு அடிப்படைகளாகும். புகழ் பெற்ற தற்கால உலகப் புத்தகசாலைகளெல்லாம் சமூக, பொருளாதார, அரசியல் மாறுதல்களின் பலனாகத் தோன்றிய வைகளே.

**தேசீயப் புத்தகசாலை:** பிரெஞ்சு நாட்டின் 'லா பிப்ளியோதெக் நேஷனேல்' என்ற தேசீயப் புத்தகசாலை பதினேராம் லூயியின் காலமான 1480 - இல் ஸ்தாபிதமாயிற்று. இதற்கு முன் இது அரசர்களின் சொந்தப் புத்தகசாலையாக இருந்தது. பொதமக்களின் உபயோகத்துக்கென்று ஐரோப்பாவில் முதல் முதலில் 1612-இல் திறந்துவிட்ட புத்தகசாலை 'போட்லியன்.' ஆனல் அரசர்களுக்கே சொந்தமான பாரிஸ் புத்தகசாலை, இதற்கு முன்பே, அரசர் தயவு பெற்ற சில மாணவர்களுக்கு மட்டும் பயன்பட்டு வந்தது.

பாரிஸ் புத்தகசாலையைப் பயன்படும் ஸ்தாபனமாகச் செய்த பெருமை அப்பெக்னன் என்பவரைச் சேர்ந்தது. 1741-வரை இவர் இதன் அதிபராக வேலை பார்த்தார். பிரபுக்கள் தயவினலோ செல்வாக்கினலோ மட்டுமே இதில் படிக்கலாம் என்றிருந்த தொல்லைகளை அடியோடு இவர் ஒழித்தார்; படிக்க விரும்புகிறவர்கள் எல்லாரும் சுலபமாக இதைப் பயன்படுத்தச் சாதகமான அரசர் உத்தரவு ஒன்றை இவர் 1735-இல் பிறப்பித்து வைத்தார். புத்தகங்களைச் சௌகரியமான வேறொரு கட்டிடத்துக்கு மாற்றி, புத்தக ஜாபிதாக்களையும் இவர் தயாரித்துவைத்தார்.

அடுத்தபடியாக இந்தப் புத்தகசாலையின் வளர்ச்சிக்குக் காரணமாக இருந்தவன் நெப்போலியன் சக்கரவர்த்தி. இதற்கு அரசாங்கம் கொடுத்துவந்த கொடைத் தொகையை இவன் அதிகரித்தான். புத்தகம் இரவல் வாங்குவோர், 'டெபாஸிட்' கட்ட வேண்டும் என்ற சட்டத்தைக் கடுமையாக அநுசரிக்கும்படி செய்தான். இவைகளால் புத்தகசாலைக்கு நிறையப் பணம் கிடைத்தது; புத்தகங்களும் நிறைய வாங்க முடிந்தது. உபயோகமான எல்லாப் புத்தகங்களும் தன் நாட்டுத் தேசீயப் புத்தகசாலையில் இருக்க வேண்டும் என்று அவன் விரும்பினன்.

1818-க்குள் இதில் இருந்த புத்தகங்கள் எட்டு லட்சம். பிரெஞ்சுப் புரட்சிக்குப் பிறகு இது அரசருக்குச் சொந்தம் என்ற நிலை மாறித் தேசீயப் புத்தகசாலை ஆகிவிட்டது.

19-ஆம் நூற்றூண்டின் மத்தியில் புத்தகசாலைக்கு இருந்த கட்டிடம் போதவில்லை. 1854-இல் புதுக் கட்டிடத்துக்கும், புத்தக அலமாரிகளுக்கும் திட்டம் போடத் தொடங்கினர்கள்.

"தேசீயப் புத்தகசாலைக்கும் பாரிஸிலுள்ள வேறு பெரிய புத்தகசாலைகளுக்கும் நண்பர்கள்" என்ற ஒரு சங்கம் இதன் அபிவிருத்திக்கு

நிறைய உதவி செய்தது. முதல் உலக யுத்தத்துக்குப் பின் பொருளாதார மந்தத்தால் இதற்கு நிறையப் பணக் கஷ்டம் வந்துவிட்டது. இந்தச் சங்கத்தார் தங்கள் உடல் ரத்தத்தை ஆஸ்பத்திரிகளுக்கு விற்று இதற்குப் பணம் சம்பாதித்தார்கள்.

இங்கிலாந்திலுள்ள 'ஆஸ்லிப்', வாஷிங்டனிலுள்ள காங்கிரஸ் லைப்ரரி இவைகளைப் போலவே இதுவும் ஒரு பெரிய தேசியப் புத்தகசாலை. இங்கே ஆராய்ச்சியாளர் முதலியவர்களுக்கு வேண்டிய உதவி நிறையக் கிடைக்கும். பிரான்ஸுக்குள்ளேயே இருக்கும் புத்தகசாலைகள் ஒன்றுக்கொன்று புத்தகங்கள் கடன் வாங்கிக் கொள்ளும் விவகாரத்தையும், வெளிநாட்டுப் புத்தகசாலைகள் ஒன்றுக்கொன்று புத்தகம் கடன் வாங்கிக்கொள்ளும் விவகாரத்தையும் இந்தப் புத்தகசாலைதான் கவனிக்கிறது. இந்தப் புத்தகசாலையின் அதிபர்தான், பிரான்ஸின் வேறு பொதுஜன வாசகசாலைகளுக்கும் தலைவர். கல்வி மந்திரியின் அதிகாரத்தில் இருக்கும் வாசகசாலைகளுக்கெல்லாங் கூட இவர்தான் டைரெக்டர்.

பிரான்ஸில்தான் புத்தகக் காப்பிரைட் முதல் முதலில் 1527-இல் ஏற்பட்டது. இப்போது இந்தப் புத்தகசாலையில் 60 லட்சம் புத்தகங்களும், 1,55,000 கையெழுத்துப் பிரதிகளும், 4,50,000 மெடல்களும் நாணயங்களும், 50,00,000 சித்திரங்களும் செதுக்கு வேலைகளும், 5,00,000 சஞ்சிகைகளும் 4 லட்சம் தேச படங்களும் இருக்கின்றன.

**ருஷியாவின் தேசீயப் புத்தக சாலைகள்:** ருஷியாவில் உள்ள பல புத்தகசாலைகளுக்குள்ளும் 'கொசுதார்ஸ்வென்னஜ பப்ளிக்னஜ பிப்ளியோதெகா' என்ற லெனின் கிராடிலுள்ள புத்தகசாலைதான் மிகப் பழமையானது. இதுதான் முன்னால் ஸெயின்ட் பீட்டர்ஸ் பர்க்கில் இருந்த 'இம்பீரியல் பப்ளிக் லைப்ரரி.' காதெரின் என்ற சக்கரவர்த்தினி இதை 18-ஆம் நூற்றாண்டில் ஸ்தாபித்தாள்.

போலந்தைச் சேர்ந்த கவுண்ட் ஜாலுஸ்கி என்பவரிடம் 4 லட்சம் புத்தகங்களையும் கையெழுத்துப் பிரதிகளையும் கொண்ட புகழ் பெற்ற ஒரு புத்தகசாலை இருந்தது. சர்ச்சு சம்பந்தமான மடங்களிலிருந்து இவர் இவற்றைச் சேகரித்திருந்தார். இவற்றையெல்லாம் இவர் தம் நாட்டுக்குக் கொடுத்துவிட்டார். 1794-இல் போலந்தை ஜயித்த ருஷியர்கள் இந்தப் புத்தகங்களையெல்லாம் ஸெயின்ட் பீட்டர்ஸ்பர்க்குக்குக் கொண்டு போனார்கள். அவர்கள் ஆரம்பிக்க நினைத்த லைப்ரரிக்கு இவைகளே அடிப்படையாயின. இவற்றுள் 2,60,000 புத்தகங்களே அங்கே போய்ச் சேர்ந்தன. மற்றவைகள் போக்கு வரத்துக் கஷ்டத்தால் வழியில் தொலைந்து போய்விட்டன. இவைகளோடு டுப்ரோவிஸ்கி என்ற ஒருவர் சேர்த்து வைத்த புத்தகங்களும் சேர்ந்தன. பிரெஞ்சுப் புரட்சியின் போது இவர் பிரான்ஸில் இருந்த ருஷியத் தூதுவர் கோஷ்டியில் ஒருவராக இருந்தார். புரட்சியின்போது ஸெயின்ட் ஜெர்மெயின் மடமும் 'பேஸ்ட்டில்' என்ற ஜெயில் கோட்டையும் நெருப்புப் பற்றி எரிந்தபோது இவர் அவற்றிலிருந்த பல நூறு அருமையான புத்தகங்களையும்

கையெழுத்துப் பிரதிகளையும் கைவசப்படுத்திக் கொண்டார். புரட்சிக்குப் பிறகு இவர் பிரான்ஸை விட்டு வெளியேறித் தம் தாய் நாடு திரும்ப நேர்ந்தது. அங்கே தாம் சம்பாதித்த புத்தகங்களையெல்லாம் ருஷிய அரசாங்கத்துக்கு அதிக விலைக்கு விற்று இவர் நிறையப் பணம் சம்பாதித்தார்.

19-ஆம் நூற்றாண்டில் ருஷியாவின் மேல் நெப்போலியன் படையெடுத்தபோது, ருஷியாவிலிருந்து 1,50,000 புத்தகங்கள் ஸ்லெட்ஜ் என்ற வண்டிகளில் மறுபடியும் பாரிஸுக்குத் திரும்பின. கடைசியில் 1814-இல்தான் ருஷிய தேசீயப் புத்தகசாலையைத் திறக்க முடிந்தது.

19-ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதி வரையில் புத்தகசாலை சரிவர நடக்கவில்லை. 1849-இல் மாடஸ்ட் கார்ப் என்பவர் இதன் டைரெக்டர் ஆன பிறகுதான், இதற்கு நல்ல காலம் பிறந்தது. இவர் இதைப் பல பகுதிகளாகப் பிரித்தார்; ஜாபிதா எடுக்கும் வேலைக்கு முதல் ஸ்தானம் கொடுத்தார்; அரசாங்கப் பணக் கொடையை அதிகப்படுத்தினார்; பல அருமையான புத்தகங்களை வாங்கிச் சேர்த்தார்; பிரிட்டிஷ் மியூஸியத்தில் இருப்பது போல் வட்ட வடிவமாகப் புதுமாதிரி வாசகசாலை (ரீடிங் ரூம்) அமைத்தார்; கட்டிடத்தின் உட்பகுதியையும் வெளிப் பகுதியையும் அலங்காரப்படுத்தினார்; பத்திரிகைகள் வாயிலாகவும் வேறு வகையிலும் விளம்பரப்படுத்தி இதன் பெருமையையும் உபயோகத்தையும் பொது மக்கள் அறிந்து பயனடையச் செய்தார். 1913-இல் இதில் 30 லட்சம் உருப்படிகள் இருந்தன.

உலகத்தையே ஆட்டி வைத்த ருஷியப் புரட்சி காரணமாக இதிலும் பல மாறுதல்கள் ஏற்பட்டன. அரச வம்சத்தாரிடமிருந்தும் மதசம்பந்தமான ஸ்தாபனங்களிலிருந்தும் பறிமுதல் செய்த புத்தகங்களும் இதில் சேர்ந்தன. போலந்துக்குச் சுதந்தரம் கிடைத்தவுடன், ஜாலுஸ்கி சேகரித்த புத்தகங்களை அது திரும்பப் பெற்றுக் கொண்டது. 1930-இல் ருஷியப் புத்தகசாலையில் 48 32,948 அச்சுப் புத்தகங்களும் 33,11,000 கையெழுத்துப் பிரதிகளும் இருந்தன. புரட்சிக்குப் பிறகு மாஸ்கோ ருஷியாவின் பிரதான நகரமாகி விட்டபடியால், ஸெயின்ட் பீட்டர்ஸ்பர்க்கில் இருந்த புத்தகசாலை புதுப் பெயரோடு மாஸ்கோவுக்கு மாறிவிட்டது. 1862-இல் இது மாறிய போது 28,512 புத்தகங்களே இருந்தன. 1917-இல் 10 லட்சம் புத்தகங்கள் இருந்த இதில் இப்போது ஒரு கோடியே 40 லட்சம் புத்தகங்களும் 25 லட்சம் கையெழுத்துப் பிரதிகளும், 10 லட்சம் துண்டுப் பிரசுரங் (லீஃப்லெட்) களும் இருப்பதாகச் சொல்லுகிறார்கள்.

ருஷியாவெங்கும் இந்தப் புத்தகசாலை சம்பந்தமான ஸ்தாபனங்கள் இருக்கின்றன. 1949-இல் 15 லட்சம் பேர் இதற்கு வந்தார்கள்; 70 லட்சம் புத்தகங்கள் கடனாகக் கொடுக்கப்பட்டன. இன்று, எந்தப் புத்தகசாலை உலகத்தில் பெரியது என்ற விஷயத்தில், வாஷிங்டனிலுள்ள காங்கிரஸ் புத்தகசாலைக்குப் போட்டியாக இருப்பது இது ஒன்றுதான்.

**லண்டன் பிரிட்டிஷ் மியூஸியம்:** லண்டனில் உள்ள பிரிட்டிஷ்

மியூஸியம் என்ற புத்தகசாலை உலகத்தில் மிகப் பெரியது என்று சொல்ல முடியாது. ஆனால், இது மிகச் சிறந்த புத்தகசாலைகளுள் ஒன்று. இது 1753 - இல்தான் ஸ்தாபிதமாயிற்று. என்றாலும், இது ஆரம்பித்தது எழாம் ஹென்றியின் காலத்திலேயே. 1753-இல் தாவர விஞ்ஞானியும் வைத்தியருமான ஸர் ஹேன்ஸ் ஸ்லோன் என்பவர் தம்மிடமிருந்த மெடல்கள், நாணயங்கள், பழம் பொருள்கள், முத்திரைகள், சித்திரங்கள், புத்தகங்கள் எல்லாவற்றையும் நாட்டுக்கு நன்கொடையாகக் கொடுத்துவிட்டார். பழைய புத்தகசாலையோடு விலை மதிப்பில்லாத இவை சேர்ந்தவுடன் அது புத்துயிர் பெற்றது. முதலில் அது மான்டேகு ஹவுஸ் என்ற கட்டிடத்தில் இருந்தது. இடம் போதாதபடியால் அதற்காகவே ஒரு கட்டிடம் கட்டி 1847-இல் அங்கே மாற்றிவிட்டார்கள். ஆனால் அது விரைவாகப் பெரியதாகிக்கொண்டே வந்தபடியால், இடம் போதவில்லை; அங்கே வந்து படிப்பவர்களின் தொகையும் அதிகரித்துக்கொண்டே வந்தது.

இத்தாலியிலிருந்து வந்து லண்டனில் அடைக்கலம் புகுந்த அன்டோனியோ பானிஸி என்பவர் அங்கே உதவி அதிபராக இருந்தார். 1854-இல் எஞ்சினீர்களின் உதவியால் வட்டவடிவான வாசகசாலை (ரீடிங் ரூம்), எஃகு அலமாரிகள் இவைகளைக் கொண்ட ஒரு புதுக்கட்டிடத்தை இவர் சிருஷ்டித்தார். இதுவே இன்றைய புத்தகசாலைகளுக்கு மாதிரியாக விளங்குகிறது.

புத்தகசாலைக்கு இவர் செய்த சேவை காரணமாக இவர் பெயர் இன்னும் நினைவில் இருக்கிறது. இப்போதிருக்கும் கட்டிடத்துக்கு 1857-இல் புத்தகசாலை மாறியது. பார்லிமெண்ட் அப்போது நன்கொடை ஒன்று வழங்கியது. மறுபடியும் இடம் போதாமல் போகவே, இதில் இருந்த தாவர விஞ்ஞானப் பகுதியை மட்டும் 1881-85-இல் தென் கென்ஸிங்டனுக்குக் கொண்டு போய்விட்டார்கள்.

இப்போது இதில் 50 லட்சம் அச்சுப் புத்தகங்கள், 60,000 கையெழுத்துப் பிரதிகள், மூன்றாம் நூற்றாண்டிலிருந்து தொடங்கும் ஒரு லட்சம் 'சார்ட்டர்'கள் இவையெல்லாம் இருக்கின்றன. இங்கேயுள்ள அலமாரிகளின் மொத்த நீளம் 55 மைல். இங்கேயுள்ள கீழ்நாட்டுப் புத்தகங்கள் 1,16,000; கையெழுத்துப் பிரதிகள் 16,200.

**காங்கிரஸ் புத்தகசாலை:** சூனியமான சூழ்நிலையிலிருந்து ஒரு பெரிய சமுதாயத்தை உண்டாக்கப் புத்தகசாலை எவ்வளவு அவசியம் என்பதற்கு இது ஓர் எடுத்துக்காட்டாக இருக்கிறது. 1800-1802-இல் இதை ஜெஃபர்ஸன் என்ற அமெரிக்க ஜனாதிபதி ஸ்தாபித்தார். 1814-இல் சுதந்தரப் போரின் கடைசி நாட்களில் இதுவும் தாக்கப்பட்டதால் 3000 புத்தகங்களே மிஞ்சின. 1851-இல் இதில் உள்ள புத்தகங்களின் எண்ணிக்கை 55, 000 ஆகப் பெருகியிருந்தது. அந்த வருஷம் திடீரென்று நெருப்புப் பிடித்ததால் பாதிக்கு மேல் புத்தகங்கள் அழிந்துவிட்டன. அதற்குப் பின் இதன் வளர்ச்சிக்குத் தடை ஒன்றும் நேரவில்லை. 1897-இல் ஒரு புதுக் கட்டிடம் கட்டி முடிந்தது. 40 லட்சம் புத்தகங்களோடு புத்தகசாலை இதற்கு மாறியது. அதே

வருஷம் புத்தகசாலையை அங்கீகாரம் செய்யும் சட்டம் ஒன்றை அமெரிக்கச் சட்ட சபை நிறைவேற்றியது. புத்தகசாலை அதிபருக்கு உட்பட்ட 'காப்பிரைட் ரிஜிஸ்திரார்' பதவி ஒன்றையும் சட்ட சபை சிருஷ்டித்தது. அன்று முதல் இது அமெரிக்காவின் காப்பிரைட் . புத்தகசாலை ஆகிவிட்டது. புத்தகங்களும், 'பாம்ஃப்ளெட்'களுமாக இதில் இன்று 90 லட்சம் உருப்படிகள் இருக்கின்றன. தவிர ஒரு கோடியே 19லட்சத்து 70ஆயிரம் கையெழுத்துப் பிரதிகளும், 19 லட்சத்து 81 ஆயிரம் தேச படங்களும் இயற்கைக் காட்சிகளும், 11,955 அசையும் சினிமாப் படச்சுருள்களும், 1,23,134 கிராமஃபோன் தட்டுகளும், 9,36,412 போட்டோ நெகட்டிவ்களும் போட்டோக்களும், 5,75,083 அழகிய சித்திரங்களும் இதில் இன்று இருக்கின்றன. இதிலுள்ள அலமாரிகளின் நீளம் 414 மைல்; இங்கே 1,500 பேர் வேலை செய்கிறார்கள்.

உலகத்தில் எங்கே பிரசுரமானாலும் உபயோகமான புத்தகங்களை வாங்கிச் சேர்க்க இந்தப் புத்தகசாலையினர் தவறுவதில்லை. அதற்காகவே புத்தகசாலை உத்தியோகஸ்தர்கள் வெளி நாடுகளுக்குப் போய் வருவார்கள். குருடர்களுக்குச் சேவை செய்வது இந்த அரிய சேவைகளுள் ஒன்று.

## திருட்டுக் கதை

சார்லஸ் வான் லோன் என்ற அமெரிக்கக் கதாசிரியர் பல வருஷ காலம் சில்லறைப் பத்திரிகைகளுக்கே எழுதி வந்தார். அவருடைய கதைகளைக் கௌரவமான பெரிய பத்திரிகைக்காரர்கள் அங்கீகரிக்கவேயில்லை.

ஒரு சமயம் அவருடைய ஒரு கதையை வேறு யாரோ ஒருவர் திருடி, 'தி ஸாட்டர்டே ஈவினிங் போஸ்ட்' என்ற பிரபல பத்திரிகைக்கு அனுப்பிவிட்டார். அது 'ஜம்' என்று வெளி வந்துவிட்டது.

ஆசிரியர் லோனின் நண்பர் ஒருவருக்கு அப்போது 'போஸ்டி'ன் பத்திராசிரியராயிருந்த ஜார்ஜ் ஹொரேஸ் லாரிமர் என்பவர் பரிசயமானவர். அவர் இந்தக் கதையைப் 'போஸ்'டில் பார்த்ததும், லாரிமருக்கு ஒரு கடிதம் எழுதினர் : "ஆமாம், இந்தக் கதையை நீங்கள் லோனிடம் நேரேயே வாங்கியிருக்கலாமே. இப்படி ஏன் செய்தீர்கள்?'' என்று அதில் கேட்டார். அதுமுதல் ஆசிரியர் லோனின் கதைகளைப் பத்திராசிரியர் லாரிமர் நேரடியாகவே வாங்கிக் கொள்ளத் தொடங்கிவிட்டார். 'போஸ்ட்' பத்திரிகைக்கும் லோனுக்கும் நீண்ட காலத் தொடர்பும் ஏற்பட்டுவிட்டது.

—அலெக்ஸாண்டர் லின்டே

# காட்ஜூ பேட்டி

**'மாக்னஸ்'**

**இந்தப் புனைபெயருடன் எழுதுகிறவர், இந்தியாவிலே மிகச் சிறந்த ஆங்கிலத் தினசரி ஒன்றின் ஆசிரியர். ஆங்கிலேயரே வியக்கும்படி ஆங்கிலம் எழுதும் மிகச் சில இந்தியருள் ஒருவர். இதைக் 'கற்பனைப் பேட்டி' என்று அவர் குறிப்பிடுகிறார். ஆனால், உண்மைப் பேட்டி போலவே இது தோன்றுகிறது.**

டாக்டர் காட்ஜூ நல்ல மனுஷர். அதற்கேற்றபடி அவருக்கு நல்ல எண்ணமும் ஏராளமாக இருக்கிறது. அவருடைய ஆப்த நண்பர் ஒருவர், "அவர் உத்தியோகம் செய்து சம்பளம் வாங்கினாலும் மகரிஷி; இல்லறத்தைக் கடைப்பிடித்தாலும் துறவி" என்று சொல்லியிருக்கிறார். தூக்குத் தண்டனையிலிருந்து பல பேரைத் தப்ப வைத்து அந்த வழியில் கொஞ்சம் பணமும் அவர் சம்பாதித்திருக்கிறார். பஞ்சாயத்து ராஜ்யத்தைப் பற்றிப் பிரசாரம் செய்யத் தொடங்கி அப்படியே மந்திரியாகிவிட்டார். பரத்துவாஜ ஆசிரமத்துக்குப் போய் மீதி நாளை அமைதியாகக் கழிக்கவேண்டுமென்று பார்த்தார். ஆனால் அவரை ஒரிஸ்ஸா கவர்னராக நியமித்துவிட்டார்கள். எல்லாரும் கைவிட்ட அந்த மாகாணத்தில், மறந்துபோன தெய்வந் தேவாதியையெல்லாம் புனருத்தாரணம் செய்துவிட்டுக் கல்கத்தாவில் கவர்னர் மாளிகைக்கு வந்து சேர்ந்தார். அங்கே அல்லல் படும் மக்களுக்கு நல்லுபதேசம் செய்து அவர்களைத் தேற்றிவந்தார். அதன் பலனாக மத்திய சர்க்காரில் உள்நாட்டு மந்திரி பதவி கிடைத்தது. அவர் ஆத்மிகத் துறையில் ஈடுபட்டு விடுவாரோ என்று எல்லாரும் எண்ணிக்கொண்டிருக்கும் போது, உத்தியோகமும் வருமானமும் மேலே மேலே உயர்ந்து வந்தன.

**சம்பளம் வாங்கும் சாமியார்**

**சங்கர்ஸ் வீக்லி (ஆங்கிலம்: 25-1-'58), புது டில்லி.**

கானன் டாயில் மாதிரி

பல பண்புகள் நிறைந்த இந்தியாவில் தாம் முழுக்க முழுக்க இந்தியர் என்று காட்ஜூவே சொல்லிக் கொள்கிறார். பல பாஷைகள் பேசும் ஒரு ராஜ்யம் என்றால் எப்படி விநோதமாக இருக்குமோ அதேமாதிரிதான், இவர் விஷயமும் விநோதமாக இருக்கிறது. இவர் பிறந்தது ஒரு ராஜ்யம்; வளர்ந்ததோ இன்னொரு ராஜ்யம்; இவர் உருவானது வேறு ஒரு ராஜ்யம்; இவர் பாட்டனார் பெண் கொண்ட ராஜ்யத்தை விட்டு மற்றொரு ராஜ்யத்திலிருந்து இவர் பெண் கொண்டார்; மற்றுமுள்ள பல ராஜ்யங்களில் உத்தியோகம் பார்த்திருக்கிறார். தென்னாட்டினர் தம்மை மறந்து விடப் போகிறார்களே என்பதற்காக அடிக்கடி அங்கும் போய்வருகிறார். ஹோமர் என்ற கிரேக்கப் புலவரை ஏழு நகரத்தார் தம் ஊரைச் சேர்ந்தவர் என்று சொல்லிப் பெருமை கொள்வார்களாம். அதேமாதிரி இந்தியாவில் பல ராஜ்யங்களில் வாழ்வோர் காட்ஜூவைத் தம் தம் ராஜ்யத்தைச் சேர்ந்தவர் என்று சொல்லிக் கொண்டாடுவார்கள்.

அவரை நான் முதல்முதலாகப் பேட்டி கண்டது அலாகாபாது-லக்னௌ எக்ஸ்பிரஸில் தான். ரெயில் வண்டியில் தமக்காக 'ரிஸர்வ்' செய்திருந்த 'அப்பர்-பெர்த்' (மேல் ஆசனம்) ஒன்றை எனக்குக் கொடுத்துவிட்டு 'லோயர் பெர்த்(கீழ் ஆசனம்)தில் தாம் உட்கார்ந்துகொண்டார். அப்போது இந்திய தேசிய ராணுவத்தைச் சேர்ந்தவர்கள்மீது டில்லியிலுள்ள செங்கோட்டையில் வழக்கு விசாரணை நடந்து வந்தது. அவர்கள் சார்பாகக் காட்ஜூ வாதாடிக் கொண்டிருந்தார். அவரைப் பார்த்தால் வாழ்வில் வெற்றி கண்டவர் என்றே தோன்றியது.

ராஜாஜியின் அடிச்சுவட்டில்

"இனிமேல் என்ன வேண்டிக் கிடக்கிறது! வக்கீல் தொழில் என்றாலே அபரதண்

டம். அப்படி எவ்வளவு பணம் கிடைத்தாலும் கடைசியில் வாழ்வே வெறிச்சென்றுதான் தோன்றுகிறது. நான் புலாபாய் தேசாயியோடு பேசிக்கொண்டிருந்தபோது அவரும் அப்படித்தான் சொன்னார்'' என்றார் காட்ஜூ.

''விஷயம் பிரமாதமாக இருக்கிறதே! போனது போகட்டும். இனிமேல் வாழ்க்கையில் எதாவது விசேஷம் ஏற்படலாமோ இல்லையோ?'' என்று சொல்லிவைத்தேன். இன்னும் பிரிட்டிஷார் நாட்டைவிட்டுப் போகாத சமயம் அது.

''இருக்கலாம்'' என்று அவர் ஒருவாறு ஆமோதித்தாலும், பின்னால் நிலைமை எப்படி இருக்கும் என்று அவருக்கு நிச்சயமாக வில்லை.

''இத்தனை வருஷகாலம் வக்கீலாக இருந்திருக்கிறீர்களே! வழக்கின்போது எதிர் வக்கீலுக்குச் சவால் விடுவது, சட்ட நுணுக்கமுள்ள ரசமான சம்பவம் இப்படி ஏதாவது நடந்திருக்குமே'' என்றேன்.

''சில சமயம் இப்படி நேர்ந்திருக்கிறது. சில வழக்கு ஜயிக்கும்; சில தோற்கும். இருந்தாலும் மொத்தத்தில் அந்தத் துறையிலே ஒன்றுமில்லை என்பது தான் என் அபிப்பிராயம்'' என்றார்.

காட்ஜூ அடிக்கடி பரத்துவாஜ ஆசிரமத்தைப்பற்றி எழுதிவருவார். ரமண மகரிஷியின் அருள் நோக்கு ரீதியிலே பேசுவார். பஞ்சாயத்து ராஜ்பமும் அவருக்குச் சலித்துவிட்டது. துறவறம் பூண்டு விடுவாரோ என்றுகூடத் தோன்றியது. பரம்பொருளைத் தவிர வேறு எதன்மேலும் பற்று இராத ஒரு நிலையில் இருந்தார் அவர்.

மேலே பேச்சோடு பேச்சாக, ''உங்கள்மேல் எனக்கு எவ்வளவு கோபம் தெரியுமா? ஹிந்துஸ்தானி தேசபாஷையாக வேண்டும் என்பதை ஆதரித்து நீங்கள் எழுதியிருந்த கட்டுரையைப் படித்ததும் எனக்கு எரிச்சல். நானும் பதிலுக்கு ஏதாவது எழுதிவிடலாமா என்று தான் பார்த்தேன். ஆனால் உடனே அதை அடக்கிக்கொண்டு சும்மா இருந்துவிட்டேன்'' என்றார்.

''நல்ல வேளை, நான் தப்பினேன்!'' என்றேன்.

''எனக்கு இதுதான் புரியவில்லை; தெற்கேயிருந்து வந்த ஆசாமி நீங்கள். சம்ஸ்கிருதம் எவ்வளவு உபயோகமாக இருக்கிறது என்று உங்களுக்குத் தெரியவில்லையே! அபாரமான பாஷையாயிற்றே அது! தேசிய பாஷை யென்றால் அதைத்தான் சொல்ல வேண்டும். உங்கள் ஸ்தானத்தில் இருந்தால் நான் நிச்சயமாக அதைத்தான் ஆதரிப்பேன்'' என்றார்.

''சரி; உங்கள் அபிப்பிராயத்தை யெல்லாம் விளக்கி ஒரு கடிதம் எழுதித் தாருங்களேன்'' என்றேன். அவர் அப்படியே அசைக்க முடியாத காரணங்களைக் காட்டிச் சம்ஸ்கிருதத்தின் மகத்துவத்தை நிரூபிக்கும் வகையில் ஒன்று எழுதித் தந்தார். நான் உடனே ''சம்ஸ்கிருதம் காதுக்கு இனிமையாக இருக்கிறது. அதை ஆதரிக்கத்தான் வேண்டும்'' என்றேன்.

அடுத்த தரம் அவரைப் பேட்டி கண்டபோது நடந்த விசேஷத்தைக் கேளுங்கள்:

"இதோ பாருங்கள், சம்ஸ்கிருதத்தில் நம் அரசியல் திட்டத்தின் மொழிபெயர்ப்பை. இதைப் பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன, சொல்லுங்கள்" என்று சொல்லி, அதன் பிரதியை அவரிடம் கொடுத்தேன். அவர் இடி இடி என்று சிரித்தார். கொட்டாவி விட்டுக்கொண்டே, "நான் அன்றைக்கு ஏதோ சொன்னேன். அதைப் பிரமாதமாக எடுத்துக் கொண்டுவிட்டீர்களே! வாழ்க்கையில் எதையும் நிரந்தரமாகக் கொண்டுவிட முடியாது. சம்ஸ்கிருதத்தை ஆதரிக்கிறேன் என்று ஏதோ சொல்லிவைத்தேன். அதனால் எனக்குச் சம்ஸ்கிருதம் தெரியும் என்று அர்த்தமா என்ன? பள்ளிக்கூடத்தில் என்றைக்கோ படித்தது; அவ்வளவுதான். இருந்தாலும் மொத்தத்தில் இந்தியா முழுவதற்கும் பொதுப்பாஷையாக அதை வைத்துக் கொள்ளலாம் என்றுதான் எனக்குப் படுகிறது" என்றார்.

இப்படிச் சொல்லி அவர் மறுபடியும் சிரித்தார். கடைசியில் அவருடைய கட்சியும் தோற்றது, என்னுடைய ஹிந்துஸ்தானிக் கட்சியும் தோற்றது. இனிமேல் அதைப்பற்றிப் பேசியே பயனில்லை.

காட்ஜூ அதுமுதல் பதவி வகிப்பவர் ஊர்வலத்தில் ராஜாஜியின் அடிச்சுவட்டைப் பின்பற்றி வருகிறார். ஆத்மிக வளர்ச்சியோடு உள்நாட்டு மந்திரி பதவியும் வகிப்பதென்றால் அப்படிச் செய்துதானே ஆகவேண்டும்!

நான் துணிச்சலாகவே, "எப்படி இருக்கிறது இந்த உத்தியோகம்?" என்று கேட்டு வைத்தேன்.

"ஒரு கோட்டைக் கழற்றி விட்டு இன்னொரு கோட்டைப் போட்டுக்கொள்கிற மாதிரி இருக்கிறது. வக்கீல் தொழிலில் பழகியவன் தானே நான்; எனக்கு இதென்ன பிரமாதம்!" என்றார்.

"வேலையில் கடுமையாகவும் அதே சமயம் கனிவாகவும் எப்படி இருந்து சமாளிக்கிறீர்களோ அது தான் தெரியவில்லை."

"மனுஷ்ய தர்மம் என்ற ரீதியில் பார்த்தால் எல்லாம் சாத்தியம். பார்லிமெண்டில் ஏதாவது கடுமையாகப் பேசி முடித்ததும் நான் ஒன்று செய்வேன், பார்த்திருக்கிறீர்களோ? மெதுவாக நழுவி எதிர்க் கட்சி அங்கத்தினர் இருக்கும் இடத்துக்கு வருவேன். அங்கே எனக்குத் தெரிந்த பெண் அங்கத்தினர் யாராவது இருந்தால் அவர்களோடு பேசிக்கொண்டிருப்பேன். இடைவேளையில் சிற்றுண்டியின்போது கோபாலனை முதுகில் தட்டிக் கொடுப்பேன். ஹரீந்திரநாத் சட்டோபாத்தியாயாவின் ஜேபியில் கையை விட்டு அவர் எழுதியிருக்கும் துக்கடாக் கவிதைகளை யெல்லாம் எடுப்பேன். சியாமாபிரஸாத் முகர்ஜியோடு தமாஷாக ஏதாவது பேசுவேன். காங்கிரஸ் அங்கத்தினர்களில் முக்கியமான ஆசாமிகளையும் நான் மறப்பதில்லை. ஒவ்வொருவராக வந்து பார்ப்பேன்."

"ராஜாங்க சபையில் தான் இன்னும் பிரமாதமாக இருக்கிறதே உங்கள் வேலை?" என்றேன். அவருடைய முகத்தில் தோன்றிய சந்தோஷத்தைப் பார்க்க வேண்டுமே!

மெதுவாகப் பத்திரிகைத் தொழிலைப்பற்றிப் பேச்சு வந்தது. "நான் கட்டுரைகள் எழுதி வரு

கிறேன்; தெரியுமோ இல்லையோ?'' என்றார்.

''என் தெரியாமல்? பெரிய தினசரிப் பத்திரிகைகளுக்கு இலவசமாகவேகூட விஷயதானம் செய்கிறீர்கள் என்றும் தெரியும். நிறைபப் பேர் அவைகளைப் படிப்பார்கள் என்று தெரிந்துதான் நீங்கள் அப்படிக் கொடுக்கிறீர்கள்; அதுவும் தெரியும்'' என்றேன்.

''கதைகளும் எழுதுகிறேனே; உங்களுக்குத் தெரியாதா?''

எனக்கு இது அதிசயமாகத்தான் இருந்தது. அதுவரை அவர் கதை எழுதியதாக எனக்குத் தெரியாது.

''இந்த உத்தியோகத்தில் இராத பட்சத்தில் நானும் ஒரு கானன் டாயில் ஆகவோ ஷெர்லாக் ஹோம்ஸ் என்ற துப்பறிபவனாகவோ இருந்திருப்பேன். எனக்கு அதுதான் ரொம்பப் பிடித்திருக்கிறது. எத்தனை கிரிமினல் வழக்குகளில் ஆஜராகியிருக்கிறேன்! அதையெல்லாம் கதை கதையாக எழுதி வருகிறேனே! சிவில்வழக்குகளைக்கூடத் தொடர்கதை போல் எழுதி வருகிறேனே, தெரியுமா? எங்கள் உள் நாட்டு இலாகாவுக்குக் கேட்பானேன்; எவ்வளவோ விஷயம் இப்படிக் கிடைக்கும்.''

''பிரமாதமாக இருக்கிறதே! நீங்கள் பத்திரிகைத் தொழிலில் ஈடுபட்டால் அது எவ்வளவோ முன்னேறும்'' என்றேன்.

அவர் கண்களில் தோன்றிய உற்சாகத்தைப் பார்க்க வேண்டுமே: ''சுத்த அபத்தம்.''

''எது?''

''பத்திரிகைத் தொழில்தான். அதுவும் இந்தியப் பத்திரிகைகளை எல்லாம் கொளுத்திப்போட்டால் ஒன்றும் மூழ்கிவிடாது'' என்றார் பின்னும் குதூகலமாக.

''இதென்ன? அச்சுச் சட்டம், தடுப்புக் காவல் சட்டம் சம்பந்தமாக ஏதாவது சொல்லப்போகிறீர்களோ?'' என்று திடுக்கிட்டுக் கேட்டேன்.

''அதெல்லாம் இல்லை. பத்திரிகைகளை எதற்கு என்றுதான் கேட்கிறேன். அவைகளில் கண்டதையும் போடுகிறார்கள். அமெரிக்கா, மடகாஸ்கர், சந்திரலோகம் இப்படி எதை எதைப்பற்றியோ பிரமாதப் படுத்துகிறார்கள். தலையங்கங்களோ கடைசிவரை என்ன விஷயம் என்று தெரியாதபடி அமைகின்றன; முடிவில் விஷயத்தைத் தெளிவாக்கும் போது படிப்பவர்களுக்கு அசிரத்தை ஏற்பட்டுவிடுகிறது'' என்றார்.

''இதற்கு ஏதாவது வழி சொல்லுங்களேன்'' என்று பணிவாகக் கேட்டேன்.

''வக்கீல் தொழிலில் எப்படிச் செய்கிறேனோ அதையேதான் இந்த விஷயத்திலும் கையாள வேண்டும். நான் வழக்கில் வாதாட ஆரம்பிக்கும்போது முக்கியமான விஷயங்களைச் சுருக்கமாக எடுத்துச் சொல்வேன். பிறகு அவைகளையேதிரும்பத் திரும்பக் கடைசிவரையில் ஆணியறைந்தாற்போல் கேட்பவரின் மனத்தில் பதியும்படி சொல்லிவருவேன். பத்திரிகைத் தலையங்கங்களும் இதே ரீதியில் அமைய வேண்டும்'' என்றார்.

''வந்தனம்'' என்றேன்.

''இருந்தாலும் நீங்கள் எழுதுவதை நான் படிப்பதில்லை. ஏனென்றால் என்னைப் பாராட்டித்தான் எழுதவீர்கள்'' என்றார்.

அதுமுதல் நான் அவர் அபிப்பிராயத்தை ஆதரித்ததுமில்லை; அவரைப் பாராட்டியதுமில்லை.

'ஆனந்த மட' நாவலின் வர்ணனைகளுக்கு ஆதாரமானது இதுதான்.

# காட்டிலே கண்ட சிற்பம்

**காளிதாஸ் தத்தர்**

மேற்கு வங்காளத்தில் 24 பர்க்கனுவின் தெற்குப் பகுதியில் காடு அடர்ந்து பாழடைந்த ஊர் ஒன்று இருக்கிறது. முன்னால் அதற்குச் சத்ரபோகம் என்று பெயர். இப்போது அதற்கருகே ஆதிகங்கை என்ற ஓர் ஆறு ஓடுகிறது.

ஒரு காலத்தில் சத்ரபோகம் பிரபல வைஷ்ணவ க்ஷேத்திரமாக விளங்கியது. 15, 16-ஆம் நூற்றாண்டில் இது பெரிய வியாபார ஸ்தலமாகவும் இருந்ததாகச் 'சண்டிகானம்' என்ற பழைய நூலிலிருந்து தெரிகிறது.

முஸ்லிம்கள் வங்காளத்தில் வந்து ஆட்சி புரியுமுன்னேயே இது பழைய நகரங்களில் ஒன்றாக இருந்தது மட்டும் நிச்சயம். சமீபத்தில் இங்கே கண்டெடுத்த சிற்பங்களில் பல கி. பி. 10, 11-ஆம் நூற்றாண்டுகளில் ஆட்சி செலுத்திய பாலர், சேனர் என்ற அரச வம்சத்தாரின் காலத்தில் செதுக்கியவை. தென்னாட்டுச் சிற்பங்களில் இருப்பதுபோல் இவற்றில் அரிய வேலைப்பாடுகளைக் காணலாம். குபேரன் உருவத்தின் தலை உடைந்துவிட்டாலும் மற்றப் பாகங்களிலிருந்து அதன் சிற்பச் சிறப்பு வெளியாகிறது. கருடன் உருவத்தின் மூக்குமட்டும் உடைந்திருக்கிறது. ஆனால் மொத்தத்தில் இது நன்றாக இருக்கிறது. லட்சுமண சேன மன்னன் காலத்துச் செப்புச்சாசனம் இரண்டு கோவிந்தபூரில் கிடைத்துள்ளன. அவற்றில் சத்ரபோகத்தைப் பற்றிய விவரத்தைக் காணலாம். பின்னால் சுல்தான் ஹோஸேன் ஷாவின் காலத்தில், ராமசந்திர கான் என்ற இந்து அதிகாரி இந்தப் பகுதியில் ஆட்சிப் பொறுப்பைக் கவனித்து வந்தான். இந்தச் சமயத்

கருடன்

காப்பிரைட்: ப்ரபாஸி (வங்காளி; ஜனவரி '53), கல்கத்தா.

தில்தான் ஸ்ரீ கிருஷ்ண சைதன்யர் என்ற மகானும், ரூப கோஸ்வாமி, ஸநாதன கோஸ்வாமி என்ற வைஷ்ணவ பக்தர்களும் தோன்றினார்கள்.

இங்கே திரிபுரசுந்தரி என்ற காளியின் இடிந்த கோயில் ஒன்றும் இருக்கிறது. சாக்த சம்பிரதாயத்தைச் சேர்ந்தவர்களும் இங்கே வாழ்ந்தார்கள் என்பது இதிலிருந்து தெரிகிறது. சமீபத்தில் கருநிற நரசிம்மமூர்த்தி சிலை ஒன்றும் சிவலிங்கமும் இங்கே கிடைத்தன.

16-ஆம் நூற்றாண்டில் முகுந்தராம் சக்கரவர்த்தி என்ற சாக்த கவிஞர் எழுதிய 'கவி கங்கண சண்டி' என்ற பிரபல காவியத்திலிருந்து, இந்த ஊரின் எல்லை, இதிலிருந்த சிவன் கோயில், விஷ்ணு கோயில் முதலியவற்றின் விவரங்கள் தெரிகின்றன. அம்புலிங்கேசுவரர் என்பது இந்த ஊர்ச் சிவபெருமானின் பெயர்.

ஸ்ரீ கிருஷ்ண சைதன்யர் நாலு நூற்றாண்டுகளுக்கு முன் ஜகந்நாதரைத் தரிசிக்கப் போகும் வழியில் ஒரு நாள் இரவு இங்கே தங்கி நாமசங்கீர்த்தனம் செய்தார். அப்போது அந்தப் பகுதியின் மண்டலாதிகாரியாக இருந்த ராமசந்திர கான் அவரைத் தரிசிக்கச் சென்றான். சைதன்யர் தம்மை மறந்து ஜகந்நாத ஸ்வாமியை நினைந்து உருகிக் கண்ணீர் வடித்துக்கொண்டிருந்தார். ராமசந்திர கான் அவரை எப்படித் தேற்றுவது என்று புரியாமல் அன்று முழுவதும் அவரோடு இருந்து தானே பணிவிடை புரிந்தானும். அப்போது வங்காளத்துச் சுல்தானுக்கும் ஒரிஸ்ஸா மன்னனுக்கும் மனஸ்தாபம். இதனால் வங்காளத்திலிருந்து யாரும் ஒரிஸ்ஸா போகக் கூடாதென்று தடைவிதித்திருந்தார்கள்; ஒரிஸ்ஸாவிலிருந்தும் எவரையும் வர அநுமதிப்பதில்லை. ஆனால் சைதன்யரின் பக்திப் பெருக்கைப் பார்த்ததும் ராமசந்திர கான் தானே முன் நின்று அவர் ஒரிஸ்ஸா புறப்படுவதற்கு வேண்டிய ஏற்பாடுகளெல்லாம் செய்து கொடுத்தான்.

முஸ்லிம் ஆட்சியின் பிற்காலத்தில் இந்த இடம் பாழாகி, இங்கே காடு சூழ்ந்தது. கிழக்கிந்தியக் கம்பெனி ஆட்சி தலையெடுக்கும் போது 'சந்நியாசிக் கலகம்' என்ற முதல் இந்திய சுதந்தர யுத்தம் மூண்டது. இந்தக் காட்டில் கிடைத்த பழைய சிற்பங்களின் விவரங்களைக் கொண்டுதான் பிரபல வங்க நாவலாசிரியர் பங்கிம் பாபு 'ஆனந்த மட'த்தில் உள்ள வருணனைகளை எழுதியிருக்கிறார் என்று சொல்லலாம்.

சென்ற நூற்றாண்டில் இதன் அருகில் கிழக்கிந்தியக் கம்பெனித் துரைகள் சிலர் நீலி பயிரிட்டு வியாபாரம் செய்து வந்தார்கள். அந்த வியாபாரம் நின்றதும் அவர்கள் வாழ்ந்த பங்களாக்கள் கவனிப்பாரற்றுப் பாழடைந்து வருகின்றன.

## அரசியல் கண்ணீர்

அரசியல்வாதி ஒருவன் கண்ணிலிருந்து நீர் பெருகினால், யாருடைய தண்ணீர்த் தீர்வையோ உயரப் போகிறது என்று அர்த்தம். —ரோனல்டு கோல்மான்

கிரிமினல் சட்டத்தின் விபரீதப் போக்கு மாறாதா?

# எதிரி மாப்பிள்ளையா?

ஏ. வி. பார்வே

பல வருஷங்கள் கிரிமினல் வக்கீலாக இருந்து அநுபவப்பட்டவன் நான். ஆகவே, பொதுவாக இந்தியாவில் கிரிமினல் கோர்ட்டு நடவடிக்கைகளில் எனக்கு நல்ல பழக்கம் உண்டு. இது சம்பந்தமாகச் சட்டவிதிகளில் உள்ள சில குறைபாடுகளையும் விபரீதங்களையும் இங்கே எடுத்துக் காட்ட விரும்புகிறேன்.

பிரிட்டிஷாருக்கு முன் மொகலாயர்களும் மகாராஷ்டிரர்களும் ஆண்ட காலத்தில் சட்ட விதிகளை இப்போது இருப்பது போல் வகுக்கவில்லை. அங்கங்கே முஸ்லிம் நீதிபதிகளான காஜிகளும் இந்து நியாயாதிபதிகளும் தம் தம் யுக்தியைக் கொண்டு இயற்கையோடு ஒட்டிய முறையில் நீதி வழங்கி வந்தார்கள். கிராமங்களில் இருந்த பஞ்சாயத்தார், சில்லறை வழக்குகளைக் கவனித்துக் கொண்டார்கள். வக்கீல்கள் என்று வாதிப்பதற்குத் தனியாக அப்படி யாரும் இல்லை. சாட்சியம் என்றால் இன்னபடி இருக்கவேண்டும் என்று யாரும் வகுத்து வைக்கவும் இல்லை. இதனால், சில சமயம் குற்றஞ் சாட்டப்பட்டவர்கள் தாங்கள் நிரபராதிகள் என்பதை நிரூபிக்கப் பல சோதனைகளுக்கு ஆளாக வேண்டியிருந்தது.

பிரிட்டிஷ் ஆட்சி ஏற்பட்டதும் எல்லாம் மாறிவிட்டன. கிரிமினல் சட்டம், சாட்சியச் சட்டம் இவைகளையெல்லாம் வகுத்துவைத்தார்கள். இவை ஒழுங்காகவும் பத்ததியாகவும் இருந்தாலும், இயற்கைக்குப் பொருந்தாதபடி இருந்தன. அப்போதுதான் சில தந்திரசாலிகளான சட்ட நிபுணர்கள் தலையெடுத்தார்கள். இவர்கள் ஜனங்களுக்கு யுக்தி சொல்லிக் கொடுத்துச் சட்டத்தின் சிக்கல்களிலிருந்து அவர்களை மீட்டுவிட்டார்கள். பிரிட்டிஷாருடைய இந்த நீதி நிர்வாக முறையில் பிரிட்டிஷ் மக்களின் இயற்கையே பிரதிபலிக்கிறது, இங்கிலாந்தில் இந்தத் 'தனி மனித சுதந்தர'த்தைப் போற்றி வந்தார்கள்; இருந்தாலும், இதில் ஒரு குறை இருந்தது. யார்மேலாவது வாதி ஒருவன் குற்றஞ்சாட்டி வழக்குத் தொடுத்தால் அவனுக்குச் சாதகமாக இராமல், எதிரிக்கு அதிகச் சௌகரியம் இருக்கும்படி இந்தப் பிரிட்டிஷ் முறை அமைந்துவிட்டது.

இதனால் ஒவ்வொரு குற்றத்தையும் கூடியவரை

ஆதாரம்: ஹரிஜன் (ஆங்கிலம்), வர்தா.

நேரில் பார்த்ததாகச் சாட்சிகள் விட்டு நிரூபித்தாக வேண்டி இருக்கிறது. ஒரு கொலைகாரனே திருடனே பத்துப்பேர் பார்க்கும்படி கொலை செய்தோ திருடியோ இருக்கிறன் என்று நிரூபித்தாக வேண்டுமென்றால், அதைவிட அசட்டுத்தனம் வேறு உண்டா? இந்தக் குற்றங்களைச் செய்பவன், கூடியவரை யாரும் பார்க்காதபடிதானே செய்வான்? இப்படிச் செயற்கையாக அமைந்த ஓர் அர்த்தமற்ற பழக்கம்-நேராகப் பார்த்தவரின் சாட்சியம் வேண்டும் என்ற சட்ட விதி-காரணமாகப் போலீஸார் பொய்ச் சாட்சிகளைத் தயார் செய்யவேண்டிய நிலை ஏற்பட்டு விடுகிறது. ஆனல் குறுக்கு விசாரணையின்போது இது அம்பலமாகி, அசல் கொலையாளியும் பக்காத் திருடனும் தப்பித்துக்கொண்டு விடுகிறர்கள். சமீபத்தில் ஓர் இளம் பெண்ணை ஒருவன் கற்பழித்துக் கொன்ற வழக்கில் அவன்தான் இதைச் செய்தான் என்பது சந்தேகத்துக்கு இடம் இராமல் நிரூபிக்கப்படவில்லை; அதனல் ஹை-கோர்ட்டார் அவனை விடுதலை செய்துவிட்டார்கள். 'துஷ்டர்கள் பத்துப்பேர் தப்பினலும் நல்லவன் ஒருவனுவது வீண் துன்பப்படாமல் மீண்டால் போதும்' என்று வாயால் பிரமாதமாகச் சொல்லிவிடலாம். ஆனல் ஆய்ந்தோய்ந்து பாராமல் நீதிபதிகள் இந்த விதியைப் பிரயோகித்தால், அசல் குற்றவாளிகள் தண்டனை இல்லாமல் தப்புவதுதான் மிச்சம்.

சுயராஜ்யம் வந்த பிறகும் இந்தியா, பிரிட்டிஷ் ரீதியான செயற்கை நீதி முறையையே கடைப்பிடித்து வருகிறது. இதனல் எதிரிக்கு எல்லா விதமான அநுகூலமும் பிராஸிக்யூஷன் தரப்பாருக்குப் பலவிதப் பிரதிகூலமும் ஏற்பட்டுவிடுகின்றன. எதிரி ஆணையிட்டுக் கூற வேண்டிய அவசியமுமில்லை; அவன் குறுக்கு விசாரணைக்கு ஆளாக வேண்டியதுமில்லை. தனக்குப் பிடித்தவர்களைப் பொய்ச்சாட்சிகளாகப் போட்டுவிட்டால் அவன் கவலை விட்டது. ஃபிரெஞ்சு, அமெரிக்க நீதி முறைப்படி எதிரி ஆணையிட வேண்டியிருக்கும்; குறுக்கு விசாரணைக்கும் ஆளாக வேண்டியிருக்கும் என்றுதான் எனக்குக் கவனம். அவன் சாட்சியம் பொய் என்று ருஜுவாகிவிட்டால், கோர்ட்டில் பொய் சொன்னதற்காக அவன் மேல் வழக்குத் தொடருவார்கள்.

இப்போது நம் நாட்டில் வழங்கிவரும் நீதி நிர்வாக முறையில் எதிரியைக் கோர்ட்டாரும் சர்க்காரும் 'மாப்பிள்ளை' மாதிரி நடத்துகிறர்கள். வக்கீல்களின் தந்திர சாமர்த்தியங்களாலும் அவர்கள் சொல்லிக் கொடுக்கும் யுக்திகளைக் கேட்டுக்கொண்டும் சட்ட விதிகளில் உள்ள செயற்கைக் குறைபாடுகளை அவன் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்கிறன். கோர்ட்டுக்கு வெளியேயுள்ள எல்லாருக்கும் அவன் நிச்சயமாகக் குற்றவாளி என்றுதான் படுகிறது. ஆனல் அவன் நிரபராதி என்று கோர்ட்டார் அவனை விடுவித்து




—'அமிர்தபஜார் பத்திரிகா'




—'பம்பாய் கிராணிக்கிள்'

# புதுமாதிரி ஸினிமா

★

**வெறும் படம் அல்ல, தத்ரூபமாய்த் தோன்றும் காட்சியை அளிக்க வல்ல இந்தப் புதிய ஸினிமா - அல்ல அல்ல, *ஸினிரமா* - பற்றிய விவரத்துக்கு ஆதாரம் 'லெட்டர் ஃப்ரம் அமெரிக்கா' என்ற பிரசுரத்தில் அலிஸ்டேர் கூக் என்பவர் எழுதியுள்ள ஒரு கட்டுரை.**

சமீபத்தில் ஒரு நாள் இரவில் நியூ யார்க் நகரத்து மக்கள் சிலர் புதுமையான ஸினிமா ஒன்று பார்த்தார்கள். அது ஸினிமா உலகிலேயே புரட்சிகரமான மாறுதலைச் செய்யப்போகிற ஒன்று. அதற்குப் பெயர்தான் 'ஸினிரமா' என்பது. இந்த **ஸினிரமா** என்ற பெயரை நன்ருக மனத்தில் பதித்து உருப் போட்டு வையுங்கள். ஏனென்ருல், 'டெலிபோன்' என்ற வார்த்தையைப் போலவே இந்த வார்த்தையும் இன்னும் ஐந்து வருஷத்துக்குள் உலகெங்கும் பரவி விடப்போகிறது.

இந்த **'ஸினிரமா'**க் காட்சிக்குரிய திரைக்கு 'ஸைக்ளோரமா' என்று பெயரிட்டிருக்கிருர்கள். அந்தத் திரை 64 அடி அகலமும் 23 அடி உயரமும் இருக்கிறது; அதாவது, சாதாரணமான ஸினிமா திரையைப்போல் ஆறு மடங்கு பெரியது. ஒரே திரைதான். ஆனல் அதில் படத்தை இடுவதற்காக, மூன்று பிரிவு உடையதாக அதைப் பாவிக்கிருர்கள்: ஒன்று நடுமத்தி; மற்ற இரண்டும் இரண்டு பக்கவாட்டுகள்.

இந்த ஸினிரமாவுக்குத் தேவையான படத்தை ஒரே காமிராவிலே தனித்தனியே மூன்று ஃபிலிம் சுருள்களில் எடுக்கிருர்கள். இப்படி மூன்றிலும் எடுக்கும் படங்களை மறுபடியும் திரையிடும்போது, மூன்றும் துளிக்கூட அப்படி இப்படி நகராமல் ஒன்றின்மீது ஒன்று வெகு கணக்காகப் பதிந்து ஒரே உருவமாகும்படி ஏற்பாடு செய்திருக்கிருர்கள். இப்படித் திரையிடுவதற்கான ப்ரொஜக்டர் கருவிகள் சற்று அசைந்தாலும் படம் கோணலாகிவிடுமே; அப்படியாகாதிருப்பதற்காக, அந்த ப்ரொஜக்டர் கருவிகளை ஸிமெண்ட் போட்டுக் கட்டி வைக்கிருர்கள்.

ஸினிரமா தியேட்டர்களில் விளக்குகள் அணைகின்றன; ப்ரொஜக்டர்கள் வேலை செய்யத் தொடங்குகின்றன. அப்போது நீங்கள் காண்பதென்ன? படக்காட்சியையா? இல்லை; வெனிஸ் நகரக் காட்சி யென்ருல், அந்த நகரத்துக்கே நீங்கள் போய்விடுகிறீர்கள். அந்த நகரில் ஸான் மார்க்கோ ப்ளாஸா என்னுமிடத்தின் அழகான தூண்களும், நேர்த்தியான வாசல்களும், பளிச்சிடும் ஒளியும் உங்களிடம் தத்ரூபமாய் வந்துவிடுகின்றன; அங்குள்ள புருக்கள் சிறகடித்து உங்கள் முகத்திலே

# ஸினிரமா

★




**ஸி**னிரமா திரை ஏறக்குறைய அரை வட்டமாக வளைந்திருக்கிறது. நூற்றுக்கணக்கான ப்ளாஸ்டிக் ரிப்பன்களை இணைத்து உருவாக்கியது இந்தத் திரை. சப்தம் நுழைந்து வெளிவருவதற்காக ஏராளமான சன்னத் துவாரங்கள் அந்த ரிப்பன்களில் அமைந்திருக்கின்றன. மூன்று ப்ரொஜக்டர்களில், தனித்தனியாக மூன்று ஃபிலிம் சுருள்களைப் போட்டு, ஏககாலத்தில் மூன்றையும் ஓட்டி, திரையில் மூன்று பிம்பங்களும் ஒன்றோடொன்று இழைந்து விழும்படி செய்கிறார்கள். மற்றொரு ஃபிலிம் தனியாக அதே சமயத்தில் ஓடிச் சப்தத்தை வெளியிடுகிறது. காட்சி நிகழும்போது, படத்தின் இயக்கத்துக்கு ஏற்றபடி, ஒன்றுக்குப் பின் ஒன்றாகப் பல மைக்ரபோன்களுக்குச் சப்தத்தை மாற்றிக்கொண்டே போகிறார்கள். திரையிலே படகு ஓடுகிறதென்றால், அந்தப் படகு இருக்கும் இடத்திலிருந்தே சப்தம் புறப்பட்டு நம்மிடம் வரும்!

இந்தப் பக்கத்தில் இருக்கும் படத்தில் இலக்கமிட்டுக் காட்டியுள்ள பகுதிகளின் விவரம்: (1) படம் பிடிக்கும்போது, படகுகளின் சப்தத்தைப் பதிய வைக்க ஆறு மைக்ரபோன்கள் வேலை செய்கின்றன; (2) காமிரா மூன்று ஃபிலிம் எடுக்கிறது; (3) தனித்தனியான மூன்று ஃபிலிம்கள்; (4) ஆறு மைக்ரபோன்களிலிருந்தும் வரும் சப்தத்தை ஒரே 'டேப்'பில் பதித்துக் கொள்கிறார்கள்; (5) சப்தத்தைப் பதித்துவிடும் மாக்னடிக் ஸவுண்ட் ரெக்கார்டர்.

வந்து மோதிவிடும்போல் பறக்கின்றன. அப்படி அவை வந்து தங்களை எங்கே மோதிவிடுமோ என்ற பயத்தினல் சிலபேர் உண்மையிலேயே தங்கள் தலையைச் சட்டென்று கவிழ்த்துக் குனிந்து கொள்கிருர்கள்.

மலைக் குன்றின்மீது ஏறும் கம்பி ரெயில் வண்டி ஒன்றில் சிலர் சவாரி செய்யும் காட்சியைத்தான் முதல் படமாகத் திரையிட்டார்கள். அதில் அப்படி ஒன்றும் விசேஷமில்லை. ஆனல், படம் பார்த்துக்கொண்டிருந்த சபையோர் எல்லாருக்கும், தாங்களே அந்த மலை ரெயில் வண்டியில் உட்கார்ந்திருப்பது போல் ஒரு தோற்றம் உண்டாயிற்று. செங்குத்தான மலைமீது அது ஏறிக்கொண்டே சென்று, கடைசியில் திடீரென்று தலை குப்புற அடித்துக்கொண்டு அதப் பாதாளத்தில் விழுந்தது. அவ்வளவுதான்; படம் பார்த்துக்கொண்டிருந்த ஒரு வாலிபப் பெண் அப்படியே மூர்ச்சை போட்டுவிட்டாள்.

1895-இல் முதல் முதலாகப் பாரிஸ் நகரில் ஸினிமா காட்சி நடந்துகொண்டிருந்தபோது, இதே போல்தான் ஒரு நிகழ்ச்சி நிகழ்ந்தது. அந்தக் காட்சியில் ஏதோ ஒரு ரெயில்வேஸ்டேஷனுக்குள் ரெயில் வண்டி ஒன்று கடகடவென்று ஓடி வந்தது. அப்போது, தியேட்டரில் உட்கார்ந்திருந்த பல வேதாந்திகளே, சட்டென்று தங்கள் தங்கள் நாற்காலிகளை விட்டு எழுந்து ஓடத் தொடங்கிவிட்டார்கள்.

அந்த நியூயார்க் நகர ஸினிரமா காட்சியில் மலை ரெயில் சவாரிக்குப் பிறகு, விமானப் பிரயாணக் காட்சி ஒன்றைக் காட்டினர்கள். அந்த விமானம் மிக உயர்ந்த சில மலைச் சிகரங்களைச் சுற்றி வலம் வந்தது; ஸான் ஃப்ரான்ஸிஸ்கோ விரிகுடாவில் உள்ள தங்க வாசல் பாலத்துக்குள் புகுந்து வெளியே வந்தது. தியேட்டரில் இருந்த அத்தனை பேருக்கும் தாங்களே விமான சவாரி செய்வதுபோல் இருந்ததே யொழிய, கேவலம் படம் பார்ப்பதுபோல் தோன்றவே யில்லை.

நீளம், அகலம், பருமன் இப்படி மூன்று பரிமாணங்களும் உடைய கன உருவப் படத்தைத் தாங்கள் தயாரித்துவிட்டதாக ஸினிரமா நிபுணர்கள் சொல்லிக்கொள்ள வில்லை. மனிதனுக்கு முன்புறம் உள்ள எல்லாப் பொருள்களும் ஏறக்குறைய அரை வட்ட வளையமாக அவன் கண்ணுக்குத் தென்படுகின்றன இல்லையா? இந்த உண்மையைத்தான், ஸினிரமா நிபுணர்கள் தங்கள் காட்சிக்குப் பயன்படுத்திக் கொள்கிருர்கள். ஸினிரமா திரை மிகப் பெரியது. அதை ஒரே சமயத்தில் நீங்கள் முற்றும் பார்க்க முடியாது. அந்தத் திரையில் உங்கள் கடைவிழிக்குத் தென்படும் பொருள்களெல்லாம், பிரத்தியட்ச வாழ்க்கையில் உங்களுக்கு அப்படித் தென்படுபவை போலவே தோன்றுகின்றன.

இந்த ஸினிரமா காட்சியின் மூலம், நீங்கள் லண்டன், கெய்ரோ, பாங்காக் முதலிய நகரங்களுக்கெல்லாம் போய், இது வரையில் கண்டறியாத காட்சிகளையெல்லாம் நேருக்கு நேரே காண்பதுபோல் கண்டுவிடலாம். அந்த இடங்களின் வாசனை ஒன்றைத்தான் மோந்து பார்க்க முடியாது. மற்றப்படி எல்லாம் தத்ரூபமாகவே தோன்றும்.

# அந்நியரின் சிலை

ஜதுநாத் சர்க்கார்

போலித் தேசபக்தியால் நடக்கும் ஒரு மூடத்தனத்தை இங்கே கண்டிக்கும் இந்தப் பெரியார், இந்திய சரித்திர ஆராய்ச்சியில் பெருங் கீர்த்தி பெற்ற நிபுணர். இவர் நூல்கள் பிரசித்தமானவை.

சுமார் இருநூறு வருஷகாலம் இந்த நாட்டின் நிர்வாகத்தைக் கவனித்து நம் நாடு முன்னேற அநேக ஐரோப்பியர்கள் பாடுபட்டிருக்கிறார்கள். சில பேர் தம் வாழ்நாளில் பெரும் பகுதியை இந்தியாவுக்குத் தொண்டு புரிவதிலேயே கழித்திருக்கிறார்கள். நாம் இன்று இந்தியர்கள் என்று பெருமையோடு சொல்லிக்கொள்ள ஒவ்வொரு வகையில் அவர்கள் துணை புரிந்திருக்கிறார்கள். இப்படி உதவிய அந்நியரின் சிலைகளைப் பொது இடங்களிலிருந்து அப்புறப் படுத்துவானேன்? சும்மா நம் கண்ணை மூடிக்கொண்டு விட்டால் பழைய சரித்திர உண்மைகளை மறைத்துவிட முடியுமா? ஒரு கையில் பட்டாக் கத்தியும் இன்னொன்றில் பேனாவும் வைத்துக் கொண்டு பஞ்சாபிகளைப் பார்த்து, "இதில் எதற்கு அடங்கி நடக்கப் போகிறீர்கள்?" என்று திமிருடன் கேட்பதுபோல் நிற்கும் ஜான் லாரன்ஸ் என்ற ஆங்கிலேயனின் சிலையைப் பார்த்தால் இந்தியர்களுக்குக் கோபந்தான் வரும்; அதேமாதிரி கர்னல் நீல் சிலையைப் பார்த்தாலும் எல்லாருக்கும் பற்றி எரியத்தான் எரியும்; இல்லை என்று சொல்லவில்லை. சிப்பாய்க் கலகத்தின்போது இந்தப் பாவி அலாகாபாதிலிருந்து கான்பூர் நோக்கிப் படையெடுத்துச் செல்லும் வழியில் தென்பட்ட இந்தியர்களையெல்லாம் ஒருவர் விடாமல் தூக்கிலிட்டுக் கொண்டே போனான். சண்டையிலே காயமுற்ற ஐரோப்பியர்களை டோலியில் தூக்கிச் சென்ற ஆட்கள் எல்லாருங்கூடக் கடைசியில் அலறிப் புடைத்துக்கொண்டு மூலைக்கு ஒருவராக ஓட்டம் பிடித்தார்கள். இதனால் அப்புறம் ஐரோப்பியர் பாடுதான் திண்டாட்டமாகிவிட்டது. ஆனால் இதற்காக அந்நியர் எல்லாருடைய சிலைகளையுமே, அவர்கள் அந்நியர் என்பதற்காக வெறுப்பது தான் விநோதமாக இருக்கிறது. நாகரிகத்தில் முன்னேறிய ஒரு நாடு என்றால், பழைய சரித்திரச் சின்னங்களைப் பாதுகாத்து வைப்பதுதான் ஒழுங்கு. இவற்றை ஒழிப்பதால், சரித்திரத்தை அழித்துவிட முடியாது. ஆகவே, இந்த மாதிரி அந்நியரின் சிலை அல்லது மீர்ஜாபர் போன்ற தேசத் துரோகிகளின் சிலை ஏதாவது இருந்தால், அந்த ஆசாமிகளின்

காப்பிரைட்: மாடர்ன் ரெவ்யூ (ஆங்கிலம்: பிப்ரவரி '53), கல்கத்தா.

வரலாற்றை நன்ருக ஆராய்ந்து பார்க்க வேண்டும். அதை என் எடுக்கவேண்டும் என்பதற்கு அந்த அந்த ராஜ்ய சர்க்கார் தக்க ஆதாரம் காட்ட வேண்டும்.

இந்தமாதிரி சிலகளைப் பாழ்படுத்தும் தேசிய வெறியர்களை அடக்கிச் சமாளிக்க ராஜ்ய சர்க்காருக்குச் சக்தி இராவிட்டால், அதற்கு நிர்வாகம் நடத்தத் திறமை போதாது என்றுதான் அர்த்தம். மொத்தமாக எடுத்துக் கொண்டால், நம் ஜனங்களில் பெரும்பாலோர் சாதுக்கள்; அவரவர் கஷ்டப்பட்டு உழைத்து, ஏதோ தம் வயிற்றுப் பிழைப்பைக் கவனித்துக்கொண்டு போகிறவர்கள்தான். அரசியல் தேர்தலில் கலந்துகொண்டு பெயர் எடுக்க வேண்டும் என்ற எண்ணமோ, இந்த மாதிரி உபயோகமற்ற தேசாபிமானமோ அவர்களுக்குத் துளிக்கூட இல்லை.

டாக்காவில் நடந்த ஒரு சம்பவத்தைப் பாருங்கள்; அங்கே வக்கீல்கள் சங்கத்தின் தலைவர்களாக இருந்த பல பேரின் உருவப் படங்களை எடுத்து எங்கோ மூலையில் போட்டு விட்டார்களாம். அந்தத் தலைவர்கள் இந்துக்கள்; ஆகவே, 'அந்நியர்' என்பதுதான் பாகிஸ்தான் மக்களின் வாதம். அந்த வக்கீல்களில் பலர், கிழக்கு வங்காளத்து ஏழை மக்களுக்காக அரும்பாடுபட்டவர்கள்; வக்கீல் தொழில் அந்தக்காலத்தில் அவர்களாலேயே சோபித்தது என்று சொல்ல வேண்டும். இதேமாதிரி பாரிஸால் நகரத்துச் சுடுகாட்டில் இந்துக்களின் பெயர் பொறித்திருந்த சமாதிகளை யெல்லாம் தூக்கி எறிந்து பாழாக்கிவிட்டார்கள்.

கிழக்கு வங்காள சர்க்கார் தூண்டி இப்படி யாரோ செய்ததாக நான் சொல்லவில்லை. ஏதோ சில காலிகள் செய்த வேலை இது. இந்துஸ்தான், பாகிஸ்தான் இந்த இரண்டு நாடுகளும் ஒன்ருேடொன்று ஒட்டிக்கொண்டிருக்கும் இரட்டைக் குழந்தைகள் மாதிரி. ஒன்று தும்மினுல் இன்னென்றின் மூக்கிலும் குறுகுறுப்பது போல், அங்கு ஒன்று நடந்தால் அதற்கு உடனே இங்கே பதிலுக்குச் சிலர் ஏதாவது செய்துதானே வைப்பார்கள்!

புதிதாகச் சுதந்தரம் பெற்ற போதையில் தலை கிறுகிறுக்கத்தான் செய்யும். பிரெஞ்சுப் புரட்சிக்காரர் தம் நாட்டிலுள்ள பழைய பிரபுக்களையெல்லாம் விரட்டியடித்ததும் இத்தாலியின்மேல் படையெடுத்தார்கள். அப்போது இத்தாலிக்கு அரசர் யாருமே இல்லை. ரோமாபுரியைப் போப் ஆண்டு வந்தார். 1800 வருஷத்துக்கு முன் ரோமாபுரியை ஆண்ட ஜூலியஸ் ஸீஸர் பழைய கால் (பிரெஞ்சு) வீரனை வெர்ஸிங்கடரிக்ஸ் என்பவனை வென்று அவனைத் தூக்கிலிட்டானும். அதற்குப் பழி வாங்க இந்தச் சமயத்தில் போப்பைப் பிடித்துத் தூக்கிலிட வேண்டுமென்று பாரிஸ் நகரத்துப் பாமர மக்கள் ஆர்ப்பாட்டம் செய்தார்கள் என்ருல் பாருங்கள்! இந்த மாதிரி அசட்டுக் காரியங்களால் அவர்கள் பெயர் கெட்டதுதான் மிச்சம்.

போன வருஷம் நடந்த ஒரு சங்கதியைக் கேளுங்கள்; இது என் உறவினர் ஒருவர் சொன்னது: கல்கத்தாவிலுள்ள பார்க் தெரு மூலையில் அவர் ஏறிய பஸ்

வெகுநேரம் நின்றிருந்ததாம். அப்போது, அங்கே குதிரையில் சவாரி செய்வதுபோல் இருக்கும் அவுட்ரம் என்ற ஆங்கிலேயரின் சிலையின்மேல் சில முஸ்லிம் சிறுவர்கள் செருப்பை வீசி வீசி எறிந்துகொண்டிருந்தார்களாம். வங்காளி பாபு ஒருவர் கை தட்டி இந்தச் சிறுவர்களை உற்சாகப்படுத்திக் கொண்டிருந்தாராம். அப்புறம் இவர்களுக்கு ஏதோ காசுகூடக் கொடுத்தாராம். இந்த மாதிரி ஒரு தேசாபிமானத்தை என்னவென்று சொல்வது? அதில் அந்த மனுஷருக்கு ஒரு திருப்தி!

இதேபோல் ஒரு சம்பவம் எழுபது வருஷங்களுக்கு முன் நான் பள்ளிக்கூடத்தில் படித்துக்கொண்டிருந்தபோது நடந்தது. ஒரு நாள் காலை லக்னௌவிலிருந்து ஷியா பிரிவைச் சேர்ந்த ஒரு முஸ்லிம் கிழவன், அவுட்ரம் உட்கார்ந்திருக்கும் குதிரையின்மேல் ஏறி, "அடே! நீதானே எங்கள் நவாபு வஜித் அலிஷாவிடமிருந்து அயோத்தியைப் பிடுங்கிக்கொண்டாய்?" என்று சொல்லி, தன் கிழிந்த செருப்பால் அவுட்ரம் சிலையை அடித்துக்கொண்டிருந்தான். அவுட்ரமின் கையிலிருந்த கத்தியை எப்படியோ கஷ்டப்பட்டுத் திருகிக் கோணலாக்கிவிட்டான்; இதனால் 1856-இல் அவுட்ரம் அயோத்தியைக் கிழக்கு இந்தியக் கம்பெனி ஆட்சியின் கீழ்க் கொண்டு வந்ததை மாற்றி வெற்றி கண்டுவிட்டதாக அந்தக் கிழவனுக்கு எண்ணம், பாவம்! அந்தக் காலத்தில் இப்படி ஒரு மடையன் செய்ததை இந்தக் காலத்துச் சர்க்கார் செய்தால் நாலு பேர் பார்த்துச் சிரிக்க மாட்டார்களா?

அவுட்ரம் சங்கதியை எடுத்துக்கொள்வோம். அவர் நேர்மைக்கும் தீரத்துக்கும் பெயர் போனவர். இந்தியர்களுக்காக அரும்பாடு பட்டவர். சிந்துவை வென்று கிழக்கிந்தியக் கம்பெனியின் ராஜ்யத்தோடு ஸர் சார்லஸ் நேபியர் இணைத்துக்கொண்டதை மகா மோசம் என்று அவுட்ரம் அப்போதே கண்டித்தார். ஆகவே, அந்த யுத்தத்தினால் கிடைத்த தொகையில் 30,000 ரூபாயைத் தமக்குக் கொடுத்தபோது அதை ஏற்றுக் கொள்ள அவுட்ரம் மறுத்துவிட்டார். தாம் தளபதியாக இருந்தும் ஒரு சமயம், ஹாவ்லாக் என்ற சாதாரண அதிகாரி ஒருவரிடம் முழு அதிகாரத்தையும் அவுட்ரம் ஒப்பித்துவிட்டு அவன் கீழ் உத்தியோகம் பார்த்தார். அதனால் லக்னௌவிலிருந்த ஆங்கிலப் படையை மீட்ட பெருமை ஹாவ்லாக்குக்குக் கிடைத்தது.

வாலிபப்பருவத்தில் ராணுவத்தில் அவுட்ரம் வேலை பார்த்து வந்தபோது கான்தேஷ் பகுதியில் வாழ்ந்த பில்லர் என்ற முரட்டு மலை ஜாதியாரிடையே ஐந்து வருஷம் இருந்து பழகிக் கஷ்ட ஜீவனம் நடத்தி வந்தார். கொலையும் கொள்ளையும் நடத்திவந்த அவர்களைக் குடியும் குடித்தனமுமாக அமர்த்தி விவசாயத்தில் ஈடுபடும்படி செய்தார். பில்லர்களைச் சூறையாடி வந்த புலிகளை (சுமார் 250-க்குமேல்) வேட்டையாடிக் கொன்றார். 'ஒரு புலி எவனையாவது கொன்றால் அதை எப்படியாவது உடனே கொன்றாக வேண்டும். இல்லாவிட்டால்

செத்தவன் பிசாசு அதன் மேல் ஏறிக்கொண்டு நாட்டையே அழித்துவிடும்' என்று பில்லர்களுக்குள் ஒரு நம்பிக்கை நெடுநாளாக உண்டு. ஆகவே, இந்தமாதிரி எவனாவது புலி அறைந்து செத்தான் என்றால், உடனே அவர் புறப்பட்டுப் போய் அதைக் கொன்று, அவன் உறவினர் எதிரே கொண்டு போடுவது வழக்கம். இதனால் அவர்கள் மனசுக்கு ஓர் ஆறுதல் ஏற்படும். இப்படி அவர்களுடைய சுகதுக்கங்களில் கலந்துகொண்டதால், அவரை அவர்கள் தெய்வமாகவே கொண்டாடினார்கள்.

இன்று அந்தப் பில்லர்களுக்கு நம் சர்க்கார் இப்படி ஏதாவது அநுகூலம் செய்ய முன்வருமா? அஸ்ஸாம் எல்லையில் வாழும் மலை ஜாதியினரான நாகர்களுக்கும் ஏதாவது உருப்படியாகச் செய்யப்போகிறார்களா? அல்லது தூய ஹிந்தியில் சேத் கோவிந்த தாஸ் (நம் பார்லிமெண்ட் அங்கத்தினர்கள் ஹிந்தியில் பேசும்போது இவர் அதை அடிக்கடி திருத்துவார்) சொல்லிக்கொடுத்தபடி துண்டுப் பிரசுரம் அச்சிட்டு, விமானத்திலிருந்து இந்தப் பழங்குடிகளின் தலைமேல் அவற்றை வீசப்போகிறார்களா? அவுட்ரம் செய்ததைவிட அபாரமாகத்தான் இருக்கும் நம் சர்க்காரின் இந்தச் செயல்!

சிந்துவில் மீர் என்ற அரசவம்சத்தை நேபியர் வலுச்சண்டைக்கு இழுத்தபோது அவுட்ரம் அதை எதிர்த்து வாதாடவே வெள்ளையர்களுக்கு அவரிடம் வெறுப்பு. அப்போது இந்தியாவில் பிரிட்டிஷ் ஜட்ஜுகளும் மாஜிஸ்திரேட்டுகளும் சாட்சிகளான இந்தியர்களை நூறு மைல்களுக்கு அப்பாலுள்ள தம் முகாமுக்கு வரவழைத்து அலைக்கழிப்பது வழக்கம்; பாவம், இந்தச் சாட்சிகள் எழெட்டு மாதம் வந்து காத்திருந்தும் வழக்கை எடுத்துக்கொள்ளாமல் வேறு காலங் கடத்தி வந்தார்கள், இந்த வெள்ளையர்கள். இதை அவுட்ரம் வன்மையாகக் கண்டித்தார். கவர்னர்-ஜெனரல் கானிங் பிரபு அயோத்தியில் இருந்த எல்லாத் தாலுக்தார்களின் சொத்துக்களையும் பறிமுதல் செய்ய உத்தரவிட்டார். அவர்களில் ஏதோ சில பேர்தான் சிப்பாய்க் கலகத்தில் ஈடுபட்டார்கள். அதற்காகப் போய் எல்லாரையுமே இப்படித் துன்புறுத்துவது தவறு என்று அவுட்ரம் எடுத்துச் சொல்லி இந்தியர்களுக்கு நியாயம் கிடைக்கும்படி செய்தார்.

ஆகவே, ஜேம்ஸ் அவுட்ரம் போன்றவர்களின் சிலைகளைப் பாதுகாத்துக் கௌரவிக்க வேண்டியது நம் கடமையாகும்.

## அப்பா எங்கே ?

"உன் அப்பா எங்கே, தம்பி?"

"அவர் எனக்கு நீந்தக் கற்றுக் கொடுத்துக் கொண்டிருந்தார். அது முதல் அவரைக் காணவேயில்லை."

—'ஆல்ப் ஃபார் அல்லா', ஸ்வீடன்.

**இயற்கைக் காட்சிகளிலே இணையற்று விளங்கும் இமயத்தை எத்தனைபேர் எத்தனை விதமாய் வர்ணித்தாலும், அதைப் படிப்பதில் நமக்குச் சலிப்பேற்படாது. ஒவ்வொரு தடவையும் அது புதுமையாய்த்தான் இருக்கிறது.**

கே. ஏ.

இமாலயத்தில் கௌரீ சங்கர சிகரத்தை எட்டிவிட்டால், உலகத்தின் முடியை எட்டி விட்டதாக அர்த்தம். அதனால் இதை எப்படியாவது எட்ட வேண்டுமென்ற ஆவல் உலகத்தின் பல பாகத்தில் உள்ளவர்களைப் பிடித்திருக்கிறது. 30 வருஷ முயற்சி இன்னும் பயன் தரவில்லை. கௌரீ சங்கர சிகரத்தை முதல் முதல் கண்டுபிடித்த மனிதன் ராதாகிருஷ்ணன் என்னும் இந்தியனே. இதன் உயரம் மூன்று மைல்கள். இதன் உச்சியைக் காண நான்கு தடவை பலர் முயன்றூர்கள். முயற்சியில் சிலர் உயிர் இழந்தார்கள்; சிலர் தப்பினூர்கள். கண் கவரும் இயற்கைக் காட்சிகளும், புராண இதிகாசங்களை ஆதாரமாகக் கொண்ட பல புண்ணிய ஸ்தலங்களும் இதைச் சுற்றிலும் இருக்கின்றன.

பதரிநாத் என்னும் க்ஷேத்திரத்தைப்பற்றிக் கேள்விப்படாத இந்தியர் இருக்க முடியாது. பதரிநாத் மலைச்சிகரத்தின் உயரம் 23,210 அடி. இதன் உச்சிக்கு யாரும் போனதில்லை. வழியில் 10,400 அடி உயரத்தில் ஒரு விஷ்ணு கோவில் இருக்கிறது. இங்கே பதரிநாதர் எழுந்தருளியிருக்கிறூர். இந்தக் கோயில் ஸ்ரீநகரம் என்னும் பள்ளத்தாக்கில் ஸ்ரீநகருக்குப் போகும் வழி

காப்பிரைட்; பிரஜா மத (கன்னடம்) பெங்களூர்.

யில் இருக்கிறது. இது புண்ணிய க்ஷேத்திரம் மட்டும் அல்ல; அரசியல் முக்கியத்துவமும் பெற்றது. இதற்கப்புறம் இரண்டு மைல் தூரத்தில் நம் நாட்டின் எல்லை முடிந்து விடுகிறது. இந்தியாவும் சீனமும் சந்திக்கும் இடத்தில் பதரிநாத் இருக்கிறது. பௌத்தர்களாகிய சீனர்களுக்கும் இது யாத்திரை ஸ்தலமாக விளங்குகிறது. பதரிநாதர் கோயிலை ஸ்தாபித்தவர் ஆதிசங்கராசாரியர். பனிக்காற்றின் மோதலினால் இந்தப் பழைய கோயில் இடிந்து விட்டது. பிற்காலத்தில் இந்தக் காலக் கோயில் மாதிரி இதைக் கட்டியிருக்கிறார்கள். இங்கே விஷ்ணு பாதத்திலிருந்து பீஷ்ம கங்கையும் அதன் உபநதிகளும் தோன்றிப் பெருகுகின்றன. இவை அலகநந்தா நதியில் சேருகின்றன. கோவிலின் பக்கத்தில் ஒரு புஷ்கரணி இருக்கிறது. இதில் முழுகிப் பதரிநாதரைச் சேவிப்பது மிக விசேஷமென்று பக்தர்கள் கருதுகிறார்கள். தங்கப் பாத்திரங்களிலேயே தினந்தோறும் பதரிநாதருக்கு நைவேத்தியம் செய்கிறார்கள்.

இந்தக் கோயிலின் அருகே ஜோஷி மடம் இருக்கிறது. இது சிருங்கேரி சாரதா பீடத்தின் கிளையே. பதரிநாதர் கோயில் இந்த மடத்தைச் சேர்ந்தது. இன்றும் சரி; பதரிநாதர் கோயிலுக்குத் தென்னாட்டினரே அர்ச்சகர்களாய் இருக்கிறார்கள். இவர்கள் மலையாளத்து நம்பூதிரிகள்; பூஜை முறைகள் எல்லாம் தென்னாட்டு வழக்கப்படியே வெகு விமரிசையாக நடைபெறுகின்றன.

இந்தக் கோயிலுக்குப் போவது மிகக் கஷ்டம். கடினமான வழி. உடம்பை மரத்துப்போகச் செய்யும் குளிர். நாலடி நடந்தால் உட்கார வேண்டியிருக்கும். ஆனால் சுற்றிலும் உள்ள ரமணீயமான இயற்கைக் காட்சி, ஒரே நொடியில் களைப்பை மாற்றிவிடும்.

பதரிநாத்துக்குப் போகுமுன் ஜன்மோத்ரி, கங்கோத்ரி, கேதார்நாத் ஆகிய மூன்று புனித ஸ்தலங்களையும் தரிசிப்பது முறை. பதரிநாத்தைவிட உயரம் கேதார்நாத். ஆனால் முதலில் கேதார்நாத் தரிசனம் பெற்றுப் பிறகு பதரிநாத்துக்கு வருவதே மிகப் புண்ணியம் என்கிறார்கள்.

ஜோஷி மடத்துக்கும் பதரிநாத்துக்கும் இடையில் தபோவனமும் ரிஷிகேசமும் இருக்கின்றன. இங்கே கீழ்ப்பகுதியில் மகிமை வாய்ந்த தவசிகள் இருக்கிறார்களாம். பதரிகாசிரமம் 10-ஆம் நூற்றாண்டுமுதல் பிரசித்தி பெற்றது. தபோவனத்துக்கும் பதரிகாசிரமத்துக்கும் இடையில் கணக்கற்ற கோயில்களைக் காணலாம். வழியில் அலகநந்தா நதி ஓடுகிறது. இங்கே உள்ள கோயில்களின் விக்கிரகங்கள் எல்லாம் மூளியாக இருக்கின்றன. இங்கிருந்து மூன்று மைலில் கோபேசுவரர் கோயில். கேதாரநாதரைத் தரிசித்தால் கோபேசுவரரைப் பார்க்க வேண்டியதில்லை. ஒரே அச்சு. ஆனால் கோபேசுவரர் பின்னமாய் விட்டார். இங்கேயிருந்து கொஞ்ச தூரம் முன்னேக்கிச் சென்றால் விஷ்ணுப் பிரயாகை இருக்கிறது. சுவேத கங்கை, அலகநந்தா, சரஸ்வதி ஆகிய மூன்று நதிகளும் இங்கே ஒன்று சேருகின்றன. பாகீரதி நதியும் இந்த இடத்துக்கு அருகிலேயே கங்கையுடன் சேரு

கிறது. விஷ்ணுப் பிரயாகையைச் சுற்றிலும் பெரிய பெரிய காடுகள் இருக்கின்றன. இதனால்தானே என்னவோ, இந்த இடத்துக் கோயில்களுக்குள் யவனர்கள் புகவில்லை. தேவஸ்தானங்கள், விக்கிரகங்கள் எல்லாமே பூர்ணமாய் இருக்கின்றன.

பதரிகாசிரமத்திலிருந்து இறங்கி வரும் வழியில் 6,000 அடி உயரத்தில் புராதனமான கோயில்கள் காணப்படுகின்றன. அவற்றில் பாண்டுகேசுவரர் கோயில் ஒன்று. அவை கிரேக்கபாணியில் அமைந்திருக்கின்றன.

ஹநுமான் சட்டி என்னுமிடத்திலிருந்து ஒரு மைல் தூரத்திலே பதரிநாதர் கோயில் தெரிகிறது. சமீபத்தில் அலகநந்தா நதிக்கரையில் கிடைத்த புத்த விக்கிரகம் ஒன்றையும் பதரிநாதர் கோயிலில் பிரதிஷ்டை செய்திருக்கிறார்கள். அதனால் இந்த ஸ்தலம் இந்து, பௌத்தம் இரு சமயத்தாருக்கும் யாத்திரை ஸ்தலமாக விளங்குகிறது. பர்லாங்குக்கு ஒரு புண்ணிய ஸ்தமொக விளங்கும் இமயத்தின் பகுதியில் பதரிகாசிரமத்தில் கால் வைத்தவுடன் பாபியும் சாது ஆவான். சூழ்நிலை அப்படிப் பட்டது. பதரிகாசிரமத்தில் கண்ணனுடைய விக்கிரகத்துக் கருகே உத்தவர் என்ற பக்தரின் விக்கிரகமும் இருக்கிறது.

பதரி, கேதார்நாத் ஸ்தலங்களுக்கு முன்வாயில் ஹரித்வாரம். இதற்கு மூன்று மைல் தூரத்தில் கனகல தீர்த்தம் என்ற ஸ்தலம் இருக்கிறது. இது தக்ஷயாகம் நடந்த இடம்; தாக்ஷாயணி, யாக குண்டத்தில் குதித்த இடம். இதை 'ஸதீகுண்டம்' என்கிறார்கள். இங்கிருந்து 30 மைலில் ரிஷிகேசம் இருக்கிறது. புனிதத் தன்மையிலும் இயற்கை வனப்பிலும் மற்ற எந்த இடத்தையும் மிஞ்சும் இந்த இடத்தில் பல ரிஷிகள் தபோவனம் அமைத்துக் கொண்டார்கள். ஆனால் தற்காலத்தில் பல கபட சந்நியாசிகள் இங்கே தோன்றிப் பஞ்ச மகா பாதகங்களையும் நடத்தி வருகிறார்கள்.

ரிஷிகேசத்தில் சதுர்ப்புஜ லக்ஷ்மீநாராயண மூர்த்தி எழுந்தருளியிருக்கிறார். இதற்கப்புறம் கங்கைக் கரையோரத்தில் அடிக்கொன்று வீதம் பல ஸ்தலங்கள் இருக்கின்றன. கமலேசுவர ஸ்தலத்தில் ஸ்ரீராமர் வசித்த பொழுது கமலேசுவர லிங்கத்தை ஸ்தாபித்தாராம். இன்னும் முன்னேறினால் கர்ணப்பிரயாகையைக் காணலாம். இங்கே கர்ணன் தவம் செய்ததாகச் சொல்லுகிறார்கள்.

பதரிநாத்தில் விருத்தபதரி, ஆதிபதரி, த்யானபதரி, பவிஷ்ய பதரி, யோகபதரி, விசாலபதரி என்ற ஆறு கோயில்கள் இருக்கின்றன. கடைசியில் இருக்கும் விசாலபதரியே பிரசித்தி பெற்ற பதரிநாத தேவாலயம். ஆறுமாதம் பனி மூடிவிடுவதால் மற்ற ஆறு மாதங்களில் மட்டுமே இவருக்குப் பூஜை நடக்கிறது.

கைலாசத்துக்கும் மானஸ சரோவரத்துக்கும் போகிறவர்கள் இதற்கப்புறம் வேறு வழியில் போக வேண்டும். ஜோஷிமடத்துக்கு அரை மைல் தூரத்தில் ராமாநுஜாசாரியர் ஸ்தாபித்த மடம் ஒன்று இருக்கிறது.

பதரிநாராயண விக்கிரகம் லக்ஷ்மியுடன் சேர்ந்து இருக்கிறது. இதன் உயரம் ஓர் அடி. சிம்மாசனத்தின்மேல் அமர்ந்திருக்கிற

பாவனையில் உள்ள இந்தச் சதுர்ப் புஜ மூர்த்திக்குச் சாத்தியிருக்கும் நவரத்தினாபரணங்களையும் விலை மதிப்பற்ற கிரீட, ஹாரங்களையும் வேறு எந்த மகாராஜாக்களிடமும் காண முடியாது. சர்வாபிஷேக அலங்காரம், மங்களாரத்தி முதலிய விசேஷங்கள் இந்தப் பதரிநாத மூல விக்கிரகத்துக்கு மட்டுமே நடக்கின்றன.

ரிஷிகேசத்துக்குச் சுமார் மூன்றரை மைல் தூரத்தில் லக்ஷ்மண ஜூலா இருக்கிறது. இது லக்ஷ்மணர் தவம் செய்த இடமாம். மிக மனோகரமான பள்ளத்தாக்கு. மிக உயர்ந்த மலைகளின் இடையில் நெருக்கமான பள்ளத்தில் வெகு கஷ்டத்துடன் இங்கே கங்கை ஓடுகிறது.

இங்கே லக்ஷ்மணர் ஆலயம் இருக்கிறது. முக்தியை விரும்புகிறவர்கள் இங்கே கங்கையில் குதித்து உயிரை விடுகிறார்கள்.

ஹரித்வாரத்துக்குப் புராண காலத்தில் மாயாவதி என்று பெயர். கேதார்நாத்துக்கு இது திட்டிவாசல். இந்தக் கோயிலையும் பனி காரணமாக வருஷத்தில் ஆறேழு மாதங்களே திறந்திருப்பார்கள்.

கேதார்நாத்தின் வட பகுதியைப் புராண காலத்தில் கேதார காண்டம் என்று சொல்வார்கள். பதரிகாசிரமக் கோயில்களைப் போல் இங்கும் ஐந்து கேதாரநாதர் கோயில்கள் இருக்கின்றன. கேதார நாதர், மத்திய மகேசுவரர், துங்க நாதர், ருத்திரநாதர், கல்பேசுரர் என்பவை ஐந்து மூர்த்திகளின் பெயர்கள். நாரதசிலா, நரசிம்ம சிலா, வராகசிலா, கணேச சிலா, குபேரசிலா, மற்றும் தேவப் பிரயாகை, கர்ணப் பிரயாகை, விஷ்ணுப்பிரயாகை இவற்றின் நடுவில் கேதார, பதரிநாதர்கள் கோயில் கொண்டிருக்கிறார்கள்.

கைலாசம், மானஸ சரோவரம், கந்தமாதன மலைத்தொகுதிகளுக்கு இடையில் அமைந்த இந்தப் பிரதேசம் இவையெல்லாம் ஆரியர் நாகரிகத்துக்குப் பிறப்பிடமாய்த் திகழ்கின்றன. புராதன தேவாலயங்களும் புண்ணிய க்ஷேத்திரங்களும் இதற்குச் சான்றாக இருக்கின்றன. இதற்கப்புறம் வெளுத்த பாகீரதி நதியும் கறுத்த அலகநந்தா நதியும் ஒன்று சேரும் காட்சி அதி அற்புதமானது.

இதற்குப் பின் தேவப்பிரயாகை இருக்கிறது. ராவணனைக் கொன்ற பின், ராமன் இங்கே தவம் செய்ததாக ஐதிகம். மலைகளின் இடையில் மனத்தைக் கவரும் ரீதியில் ராமர் கோயில் அமைந்திருக்கிறது. பிறகு பாகீரதியும் யமுனையும் தோன்றும் இடம் 15,000 அடி உயரத்தில் இருக்கிறது. பாகீரதியுடன் ஜான்னவியும் ஜடை கங்கையும் சேருகின்றன. இந்தக் காட்சியைக் கண்டவர்கள் இதை மறக்க முடியாது.

பின்பு ஜனகாசிரமமும் கமலேசுவரர் கோயிலும் இருக்கின்றன. இந்தக் கோயிலை ஆதிசங்கரரின் சிஷ்யராகிய பத்மப்பிரபர் கட்டினாராம். மந்தாகினியும் அலகநந்தாவும் இங்கே கூடுகின்றன. இதற்கருகில் அகஸ்தியாசிரமம் இருக்கிறது. இங்கிருந்து கேதார்நாத்துக்குப் போகும் வழியில் குப்தகாசியும் உத்தரகாசியும் இருக்கின்றன. சந்திரசேகரர், அர்த்தநாரீசுவரர் கோயில்களும், பிரசித்தி பெற்ற காளிகோயிலும் அருகே இருக்கின்றன. காளி

கோயிலில் துர்க்கை, லக்ஷ்மி, சரஸ்வதி ஆகியோரின் அழகிய வடிவங்கள் இருக்கின்றன.

நாராயணகோடி என்னுமிடத்தில் அழகிய லக்ஷ்மீநாராயணரைக் காணலாம். கேதாரநாதர் கோயிலுக்கு ஏழு மைல் தூரத்தில் கௌரிகுண்டம் இருக்கிறது. மலைமகள் சிவபெருமானை மணந்த இடம். பிரம்மா புரோகிதர். இங்கே ஓர் அக்கினி குண்டம் இருக்கிறது. பார்வதி கல்யாணத்தன்று எரியத் தொடங்கிய புனித நெருப்பு இன்றும் இங்கே எரிந்து கொண்டிருப்பதாக ஐதிகம்.

இங்கே கணக்கற்ற வெந்நீர் ஊற்றுக்கள் இருக்கின்றன. குளிரில் இதில் ஸ்நானம் செய்வது வெகு சுகமாக இருக்கும். இங்கிருந்துகேதார்நாத்துக்குப்போகும் வழி பனி மூடிப் பளிங்குத்தரை போல் இருக்கும். ஆனால், அடி மேல் அடி வைத்து நடக்க வேண்டும்.

சுற்றிலும் பனி மூடிய நூற்றுக் கணக்கான சிகரங்கள். நாற்புறமும் அழகிய பள்ளத்தாக்குகள். சூரிய வெளிச்சம். கணக்கற்ற நீர் வீழ்ச்சிகள். அருவிகளும் நதிகளும் அப்படியே. தேவதாரு மரங்களின் கம்மென்ற வாசனை. ஒரே பனி மயம். காலின் கீழே நீரோட்டம். இவற்றையெல்லாம் பார்க்கும் போது மனிதன் அணுமாத்திர மென்று தோன்றும். கேதாரநாதர் கோயிலின் அருகே நின்று கவனித்தால், 23,000 அடி உயரம் உள்ள சிகரம் தென்படும். அதில் ஒரு புறம் மந்தாகினி நீர் வீழ்ச்சி. இது கங்கையைச் சிரத்தில் அணிந்த சிவபெருமானைப்போலவே தோன்றுகிறது. இந்த நீர்வீழ்ச்சியில் ஒரு குகையில் பிரம்மா தவம் செய்ததாகச் சொல்லுவார்கள். இன்னொரு புறம் மகாபந்தம் என்ற வழி.

பாண்டவர்கள் உயிருடன் சுவர்க்கம் போக எண்ணி இந்த வழியிலேயே போனார்களாம். ஆதி சங்கரர் தம் 32-ஆம் வயதில் இந்த வழியாகவே சொர்க்கம் போனதாகத் தெரிகிறது. கேதாரநாத்திலிருந்து பதரிநாத்துக்குக் காட்டு மார்க்கமாகப் போனால் 22 மைல் தான். முன் காலத்தில் காலையில் கேதாரநாதருக்குப் பூஜை செய்த அர்ச்சகர்களே மாலையில் பதரிநாதருக்கு இந்த வழியாகப் போய்ப் பூஜை செய்வார்களாம். சுற்று வழி 101 மைல்.

இந்தக் கோயிலுக்கு மேலே இயற்கை அன்னையின் கோயில் இருக்கிறதாம். சிவபெருமான் இங்கே எருமையின் மேல் அமர்ந்திருக்கிறாராம். பதரிநாத்தில் நடப்பதுபோல் இங்கே பூஜை நடப்பதில்லை. யாத்திரிகர்களே பூஜை செய்யலாம்.

இங்கிருந்து பதரிநாத்துக்கு வரும் வழியில் நின்று பார்த்தால், கேதாரநாத், பதரிநாத், கங்கோத்ரி, திரிசூலம், துரோணசலம், நந்தாதேவி ஆகியவற்றின் சிகரங்களைக் காணலாம்.

இங்கே ஒரு புறம் ராவணன் தவம் செய்த இடம். மற்றொரு புறம் ஹரிஹரர் கோயில், சற்றுக் கீழே வந்தால் கோபேசுவரத்தைக் காணலாம். இங்கே அடர்ந்த காட்டையும் விசித்திரமான பட்சிகளையும் மிருகங்களையும் காணலாம்.

கோபேசுவரத்தில் கோபிநாதர் கோயிலும் ஈசுவரர் கோயிலும் இருக்கின்றன. இங்கே பிரசித்தி பெற்ற பரசுராமருடைய கோடரி

இன்னும் இருக்கிறது. இதன் கனம்தான் எவ்வளவு! இந்தக் காலத்து மனிதர் குறைந்த பட்சம் 15 பேராவது சேர்ந்தால்தான் இதைத் தூக்க முடியும்!

கீழே இறங்கி வந்தால் கருடகங்கை இருக்கிறது. இங்கே கருடன் மகா விஷ்ணுவைக் குறித்துத் தவம் செய்தானும். இங்கிருக்கும் குளத்தில் ஸ்நானம் செய்து அதிலிருந்து கல் எடுத்து வருவது யாத்திரிகர்களின் வழக்கம். இந்தக் கல் இருக்கும் இடத்தில் தேள், பாம்பு முதலிய விஷ ஜந்துக்கள் அணுக மாட்டா என்று சொல்கிறார்கள். இன்னும் கீழே வந்தால் ஜோஷி மடம். இதை ஜோதிர் மடம் என்பதும் உண்டு. இங்கே நரசிம்ம சாளிக்கிராமத்தைச் சங்கரர் பிரதிஷ்டை செய்திருக்கிறார். இதற்குச் சிறிது தூரத்தில் ஓர் அரச மரம் இருக்கிறது. அதன் வயது 1000 வருஷமாம். அதற்கு அருகே இருக்கும் குகையில் சங்கரர் தவம் செய்தாராம். அந்த மடம் சங்கரர் ஸ்தாபித்த நான்கு மடங்களில் ஒன்று.

புண்ணிய ஸ்தலங்கள் நிறைந்த இமாலயத்தில் பார்த்த இடத்திலெல்லாம் நம் முன்னோருடைய நாகரிகத்தின் அடிச்சுவடு நிறைந்திருக்கிறது. இத்தகைய இமயத்தின் உயர்ந்த உச்சியாகிய கௌரீ சங்கர (மௌனன்ட் எவரஸ்ட்) சிகரத்தில் மனிதன் வெற்றிக் கொடி நாட்டும் காலம் வெகு தூரத்தில் இல்லை.

## கண்டு பிடித்தான்!

மாமா பரிசு கொடுத்த கைக் கடிகாரத்தை மருமகன் தன் சிநேகிதர்களுக்கெல்லாம் பெருமையோடு காட்டினான். அது 'டிக்-டிக்' என்று ஒலித்துக் கொண்டேயிருந்த வரையில் சிறுவர்களுக்கு ஆச்சரியந்தான். ஆனால், திடீரென்று அது என்னவோ நின்றுவிட்டது. என்ன கோளாறோ அதைக் கண்டு பிடித்தே தீர்வது என்று மருமகன் தீர்மானித்தான். கடிகாரத்தின் பின்புற மூடியைத் திறந்தான். கோளாற்றைக் கண்டுபிடித்தே விட்டான். கடிகாரத்துக்குள் ஒரு சிறு சொக்கான் பூச்சி செத்துக் கிடந்தது.

ஓடினான் மாமாவிடம். "மாமா, மாமா! கடிகாரம் ஓடவில்லை; எஞ்சினீர் செத்துப் போனார்" என்று இரைக்க இரைக்கக் கூறினான்.

—அர்னால்டு பர்கூன்

# விஞ்ஞான ஸமுதாயம்

## ஹக்ஸிலியின் ஆசைச் சித்திரம்

**கலைஞர்களும் தத்துவ சாஸ்திரிகளும் காணும் கற்பனை உலகங்களைப் போலவே, விஞ்ஞானப் பற்றுள்ளவரும் சிலவற்றைச் சித்திரித்திருக்கிறார்கள். அவைகளுள் ஒன்று இது. இந்த வரிசையை 'மஞ்சரி'யில் தொடர்ந்து எழுதி வருகிறவர் அன்பர் ரா. ஸ்ரீ. தேசிகன்.**

ஹக்ஸிலியின் குடும்பம் மிகச் சிறந்த அறிவாளிகள் நிரம்பிய குடும்பம். பண்டித புத்திரன் என்றால், அறிவில்லாத முட்டாள் என்ற தவறான அபிப்பிராயம் நம்மிடையே உலாவி வருகிறது. இந்த அபிப்பிராயத்தைப் பொய்யாக்குகிறது சான்றோர் தோன்றிய ஹக்ஸிலியின் குடும்பம். "துப்பாக்கி வயிற்றில் பீரங்கி பிறந்தது" என்று என் தகப்பனார் அடிக்கடி சொல்லுவார். இது இந்தக் குடும்பத்துக்கு மிகவும் பொருந்தும்.

'ஹக்ஸிலி' என்ற சொல் நம் மனத்தில் ஒலிக்கும்போது, பல ஹக்ஸிலிகள் நம் அகக்கண் முன் நிற்கிறார்கள். இந்த ஜூலியன் ஹக்ஸிலி, டி. ஹெச். ஹக்ஸிலியின் (T. H. Huxley) பேரன். இலக்கிய உலகத்திலும் தத்துவ உலகத்திலும் ஒரு சிகரமாய் விளங்கும் ஆல்டஸ் ஹக்ஸிலியின் உடன்பிறந்தோன்.

ஜூலியன் ஹக்ஸிலி 1887-ஆம் ஆண்டு பிறந்தார். ஈட்டன் (Eton) பள்ளியிலும் ஆக்ஸ்வோர்ட் காலேஜிலும் படித்தார். 1910-1912 வரையில் பாலியல் காலேஜில் பிராணி நூல் (Zoology) ஆசிரியராய் இருந்தார். 'உயிரின் விஞ்ஞானம்' என்ற நூலை இவரும் வெல்ஸூம் சேர்ந்து எழுதினார்கள்.

ராக்லன் பிரபு (Lord Raglan), டன்சனி பிரபு (Lord Dunsany), ஜூலியன் ஹக்ஸிலி முதலியோர்கள், 'நான் சர்வாதிகாரியாயிருந்தால்' என்ற தலைப்பின் கீழ்த் தம் தம் கருத்துக்களை வெளியிட்டிருக்கிறார்கள். ஜூலியன் ஹக்ஸிலி கண்ட கனவை ஆராய்வோம்.

சர்வாதிகாரியாய் வந்தால், நம் விரோதிகளை அழிக்கும் உணர்ச்சி தான் மனத்தில் எழும் என்பார்கள். இப்படி எழுவது இயல்புதான்; ஆனால் நல்ல உணர்ச்சிகளும் பொங்கி எழலாம் அன்றோ? மனிதனின் இயல்பு பலவிதம் என்பதில் யாதோர் ஐயமுமில்லை. இயற்கையாய் அவன் அடைந்த ஆற்றலுக்குத் தகுந்தபடி அது வேறுபடலாம். இயற்கையாய் அடைந்த சுபாவத்தை அது பொறுத்திருக்கிறது. பொருளாதாரம், சமுதாயப் பண்பு, வளர்கிற சூழ்நிலை எல்லாம் மனிதனின் இயல்பை உருவாக்குகின்றன.

கிறிஸ்துவர்கள் கடவுளைச் சர்வாதிகாரியாகக் கருதினார்கள். அவன் வகுத்த சட்டத்தை மறுப்பவர்களை மிலேச்சர்களாகக் கருதினார்கள். உலகத்தை ஒரு குடைக்கீழ் ஆண்ட கிறிஸ்தவ மடத்தின் ஆதிக்கத்தில் இது நிகழ்ந்தது. நாசி ஜெர்மனியிலும் பாசிஸ்ட் இத்தாலியிலும் இதே நிலையைப் பார்த்தோம். ருஷியாவிலும் இதே நிலைதான் இப்போதும் இருந்து வருகிறது. போல்ஷிவிக் கொள்கைக்கு விரோதமாய் எவரும் செல்லுவதற்கில்லை. அப்படிச் சென்றால், சிறைவாசமோ மரண தண்டனையோ, எது கிடைக்குமோ அறியோம்.

"19-ஆம் நூற்றாண்டு ஜனநாயகத்திலும் சுதந்தரமில்லை என்று சொல்லிவிடலாம். வோட்டுரிமை இருந்தென்ன? அதவும் பயனில்லை" என்கிறார் ஹக்சிலி.

"என்னுடைய தத்துவம் இதுவே. விஞ்ஞான உலகில் எப்படி மக்கள் இன்புற்று வாழலாம் (Scientific Humanism) என்பதுதான் என் கனவாகும். தெய்வந்தான் எல்லாவற்றையும் ஆட்டி வைக்கிறது என்ற கொள்கை முன்பு இருந்தது. தெய்வங்கூட மனிதனுக அமைத்துக் கொண்ட ஒரு மூல காரணமாகும். அந்த மூல காரணத்திலும் பல முரண்பாடுகள் நிகழக்கூடும். நியூட்டன் கண்ட தத்துவத்திலிருந்து ஐன்ஸ்டீன் கண்ட தத்துவத்துக்கு நம் மனம் தாவுமானால், உலகத்திலேயே ஒரு பெரும் மாறுதல் ஏற்படும் என்பதில் சந்தேகமில்லை. 'கடவுளில்லை; மனிதன்தான் தன் செயலுக்குப் பொறுப்பாளி' என்ற தத்துவத்தை நாம் மேற்கொண்டால், எத்தனையோ மாறுதல்கள் நமக்குத் தென்படும். மரணத்துக்கு அப்பால் ஒரு வாழ்வு விரிகிறதென்று சொல்லுகிறார்களே, அதில் எனக்கு நம்பிக்கை இல்லை. நம் அறிவுக்கு எட்டுகிற வாழ்க்கையை எப்படி நல்வாழ்வு ஆக்கிக்கொள்ளலாம் என்பதே என் நோக்கம்" என்று இவர் தொடங்குகிறார்.

"ஆண்டவன் இந்த நிலையில் என்னை வைத்திருக்கிறான் என்ற நிலை மாறவேண்டும். யந்திரங்கள் நமக்கு அடிமைகளாய் வேலை செய்யக் காத்திருக்கிற நிலையில் நாம் உடல் வருந்தி ஏன் வேலை செய்யவேண்டும்? நம் அறிவைக் கொண்டு, நாமே எல்லாவற்றையும் வகுப்போம். அறிவைக் கொண்டு என்றால், உணர்ச்சிக்கு இடமில்லை என்று கருதவேண்டாம். எத்தனையோ யுகங்களாய்க் கொஞ்சங் கொஞ்சமாய்ப் பிரகிருதியில் சேதனம் தோன்றி விரிவு அடைந்துகொண்டு வருகிறது. வருங்காலத்தில் அது இன்னும் எப்படி விரிந்துகொண்டு போகுமோ தெரியாது. ஆனால் நான் மனித முன்னேற்றத்தில் நம்பிக்கை வைக்கிறவன். மனித இயல்பை நம் அறிவுகொண்டு மாற்றலாம். உலகத்தை நம் விஞ்ஞான அறிவுகொண்டு நன்றாய்ச் சமைத்தல் வேண்டும்.

"நமக்குத் தேவையானதை அமைத்தல் நம் கடன். நாம் மிக ஆர்வத்துடன் விரும்பினோமானால், உலகத்தை நம்முடைய நன்மைக்காக முற்றும் மாற்றிக்கொள்ள முடியும்.

"உலக இன்பத்துக்கு ஏற்ற அஸ்திவாரம் வேண்டும். தனி மனிதன் தன் அறிவைக் கொண்டு அருஞ்செயல் ஆற்றுவானானால்,

அதில் அவன் தருக்கடையக் கூடும். ஆனால் பொதுவாய்ப் பார்க்கும்போது தனி மனிதனாயிருக்கையில், அவன் சுயநலம் உள்ளவனாகத் தோன்றுகிறான். சமுதாய மனிதனாயிருக்கும்போதோ அவனிடத்தில் சுயநலம் அற்றுப் போய்த் தனக்கென்று வாழாப் பேரறிவாளனாக அவன் திகழ்கிறான்.

"சேர்ந்து வாழும் தன்மைதான் வேண்டும். விண்ணில் சஞ்சரிக்கிறோம்; தரைமீது ஆணை செலுத்துகிறோம்; தண்ணீர் அடியிலும் உலாவுகிறோம்; இயற்கையின் சக்திகளை வசமாக்கிவிட்டோம். ஆனால் சேர்ந்து வாழும் கலையை அறவே மறந்துவிட்டோம்.

"தொழிலைச் சேர்ந்து நடத்தினால், போட்டி வெறி மறைந்து போய்விடும். போட்டி நின்றால், பத்திரிகைகளின் ஆதிக்கம் குறைந்து போய்விடும். ஆனால் பத்திரிகை இல்லாமல் மனிதன் வாழ முடியாது. பொதுவான ஒரு பத்திரிகைக் கழகம் வேண்டும். அதை நடத்துவதற்கு ஒரு மத்திய கவுன்சில் இருந்தால் போதும். ஆனால் அதில் எல்லாவித அபிப்பிராயங்களுக்கும் இடம் தரவேண்டும். அப்படி அபிப்பிராயத்தை வெளியிடுவதில்தான் மனித முன்னேற்றம் நிலை பெற்றிருக்க முடியும்.

"சினிமா, ரேடியோ, பத்திரிகை எல்லாவற்றிற்கும் இடமுண்டு. போலீஸ்காரரும் நல்லதை நாடி உபதேசம் செய்யலாம்.

"பொருளாதாரத் துறையிலும் மனிதன் ஆற்றக் கூடிய அருஞ்செயல்கள் உண்டு. பொருள் உற்பத்தித்தொழில், வழங்கும் தொழில் இவைகளில் நாம் ஈடுபடவேண்டும். அவைகளின் பயனைத்தான் கருதவேண்டும்; பணம் பெரிதல்ல. பணம், மதிப்பை அளக்கக்கூடிய கருவியே தவிர வேறில்லை. நாணயமென்பது ஒரு ரகசியமான சமாசாரம் அல்ல; அது தொழிலைத் தகுந்த நிலையில் வைப்பதற்கேற்ற கருவியே தவிர வேறில்லை. சர்வதேச வியாபாரம், ஏற்றுமதி, இறக்குமதி இவைகளைக் கவனிக்க ஓர் இலாகா வேண்டும்.

"தேசமாகிய இல்லத்தின் வரவு செலவு (House Keeping of the Nation)பற்றிய கணக்கைப்பார்க்க ஒரு முறை வேண்டும். அதன் வரும்படி என்ன? எங்கிருந்து பணம் வருகிறது? மாதம் மாதம் வரவு செலவுப் பட்டியலும் தயார் செய்து கொடுக்கவேண்டும்.

"கொலைக் கருவியான ஆகாயப் படையை நீக்கிவிட வேண்டும். அகில தேசத்து ஆகாயவிமானங்கள் பொதுஜனப் போக்குவரத்துக்கு உதவவேண்டும்.

"தேச முன்னேற்றத்தின் வழியாகவே, அகில தேச அமைப்பு வரவேண்டும். சர்வ தேசப் போலீஸ் இலாகா ஒன்றை அமைக்கவேண்டும்.

"படிப்பு சம்பந்தமாக ஆராய்ச்சி செய்வது உத்தமம். வைத்தியம், விவசாயம், தொழில் இவைகளைக் கவனிக்க ஆராய்ச்சிச்சாலைகள் அமைப்பது நலம். குடி அதிகமானால் தேசத்துக்கு நாசமேற்படும். அதை ஒரு முறைக்குக் கொண்டு வர வேண்டும். 'புற்றீசல்போலப் புலபுலெனக் கலகலெனப் புதல்வர்களைப் பெறு'வதில் பயனில்லை. கர்ப்பத்தடை வேண்டும். இது அரசியல் பிரச்னையாகும்.

"நிலத்தைத் தனித்த மனிதனின் விருப்பத்துக்கு விட்டுவிடக் கூடாது. சமுதாயத்தின் முன்னேற்றத்துக்கு அநுகுணமாக

அமைத்துக்கொள்ள வேண்டும். அதற்கென்று ஒரு தனி இலாகா (The Land Trust) வேண்டும். சட்டிட அமைப்புக் கழகம் தேவை. நகர அமைப்புக்கும் ஒரு கழகம் தேவை. சமுதாய விஞ்ஞானக் கழகத்தின் மூலம் எல்லாம் நடைபெறவேண்டும்.

"வெறும் எட்டு ஞானம் மட்டும் போதாது. ஞானம் செயல் வடிவமாக மாறத் தொழிற்சாலைகள் அவசியம் வேண்டும்" என்கிறார் ஹக்சிலி. இது உண்மையே.

உதாரணமாக, ரஸாயனம் படித்த பிள்ளைகள் குமாஸ்தாக்களாகப் போய்விடுகிறார்கள். அவர்கள் படிப்புக்கேற்ற தொழிற்சாலைகள் ஏற்பட்டால் எத்தனையோ நன்மைகளை அளித்தே தீரும்.

மேலும் அவர் சொல்வதாவது: "சுகாதார நிலையங்கள் வேண்டும். வைத்தியர்களிடத்தில் போட்டி நின்று போவது மிகவும் நன்மை தரும். சிறிய வட்டத்திலுள்ள வைத்தியசாலை மாகாண வைத்திய சாலையோடு தொடர்பு வைத்துக் கொள்ளவேண்டும். மாகாண வைத்தியசாலையில் நோய்களைக் கூர்ந்து சொல்லும் அறிவாளிகள் இருப்பார்கள். பொறுக்கியெடுத்த தேசிய டாக்டர்களும் இருப்பார்கள்.

"ஜனத்தொகை இலாகாவும் ஒத்துழைக்கவேண்டும். முதல் தரமான நூறு ஆண் குழந்தைகளுக்கும், முதல்தரமான நூறு பெண் குழந்தைகளுக்கும், பதினைந்து வயதிலிருந்து பதினேழு வயது வரையிலுள்ள முதல்தரமான நூறு ஆண் பெண்களுக்கும், முதல்தரமான நூறு கிழவர் கிழவிகளுக்கும் பரிசு வழங்க வேண்டும்."

மண விஷயங்களில் இந்த ஆசிரியர் கொண்ட கருத்துக்கள் நோக்கத் தகுந்தவை: "ஒரு வருஷம் வரையில் ஆணும் பெண்ணும் சேர்ந்து வாழவேண்டியது. அதற்குள் குழந்தைகள் தோன்றாமல் போனால், இந்த இருவரும் பரஸ்பர சம்மதத்தின்மேல் பிரிந்து போய்விடலாம். விபசாரத்தில் பிறந்த குழந்தைகளுக்கு உரிமை உண்டு. விபசாரம் குற்றமாகாது. ஆனால் விபசாரத்தை வியாபாரமாகச் செய்கிறவர்களைத் தடுக்கச் சட்டம் கொண்டுவர வேண்டும். விபசாரத்தால் வருகிற நோய்களை அடியோடு மாய்த்துவிடவேண்டும். சமூகம் வளமாய் இருக்க வேண்டும் அல்லவா?

"இப்போது தகப்பன் தன் மரண சாசனத்தில் பிள்ளைகளுக்குச் சொத்து ஒன்றுமே வைக்காமல் இருக்கலாம். குழந்தைகள் பெற்றோர்களை அண்டிப் பிழைப்பதால் தகப்பன் சொல்லுகிற தொழிலையே அவர்கள் ஏற்றுக்கொள்ள நேரிடுகிறது. சொத்தில் ஒரு பாகத்தை, படிப்பதற்கும் வயதான நிலையில் உதவுவதற்கும் தனியாய் ஒதுக்கி வைப்பதைக் கட்டாயமாக்கும் சட்டம் ஒன்று பிறக்கவேண்டும். இதோடுகூட இலவசப் படிப்புக்கும் வேண்டிய சட்டம் வகுக்கவேண்டும். சில மாதா கோயில்களையும் பொதுக் காரியத்துக்குப் பயன்படுத்திக் கொள்ளலாம். குடும்பப் பிரச்னையை தீர்க்கக்கூடிய இலாகாக்கள் (Courts of Domestic Relationships), ஆரோக்கிய இலாகாக்கள் (Health Centres) இவைகளை நிறுவ வேண்டும்.

"ஓய்வு நேரத்தை எவ்விதமாய்ப் பயன்படுத்திக் கொள்வது? வெறும் வெட்டிப் பொழுதில் அதைப் போக்காமல் தேசசேவைக்

குப் பயன்படுத்திக்கொள்ளலாம். பாதை வகுப்பது, தரிசு நிலத்தைச் சாகுபடிக்குக் கொண்டு வருவது, இந்த அலுவல்களில் மாந்தர்கள் ஈடுபடலாம். ஆண்களும் பெண்களும் இரண்டு வருஷம் கட்டாய தேச சேவை செய்தே தீரவேண்டும். அவரவர்கள் இன்பமாய்ச் செய்கிற தொழில்களை ஏற்படுத்திக் கொடுப்பது நலம். நகரத்தை அலங்கரிக்கவோ, நகரசபைக் கட்டிடத்தைக் கட்டவோ, ரெயில்வே ஸ்டேஷனை அமைக்கவோ மக்கள் முன் வரலாம். விளையாட்டு உணர்ச்சியோடு அந்தத் துறைகளில் இறங்கலாம். நாடகக் கம்பெனியார்கள், கிராமங்கள்தோறும், தொழிற்சாலைகள் தோறும் சென்று இன்பத்தைத் தரலாம்.''

"கலை என்பது தனித்து நிற்காமல், சமுதாயத்தை ஒட்டியிருந்தால் நலமாயிருக்கும்'' என்கிறார் ஹக்ஸிலி. ரஸ்கின், மாரிஸ் இருவரும் இதே நோக்கமுள்ளவர்கள் தான். கலைப் பண்போடு வாழ்க்கையை நோக்குவது நலம். அரசியல் கட்டிடங்களையும் கலைப் பண்போடு சமைக்கலாம். ['நம் சென்னைச் சட்டசபை', கலைப் பண்போடு அமையவில்லை' என்று கசின்ஸ் சொன்னது இங்கே நமக்கு நினைவு வருகிறது.] கவர்ன்மெண்டில் ஓவியப் புலவர்கள் இலாகா ஒன்று இருக்கவேண்டும். அந்த நிலையில் கலைக்கு இடமில்லை என்று கலைஞர்கள் வருந்தவேண்டியதில்லை.

"கடவுள் என்ற சொல் மனிதனுடைய நிராதரவைக் காட்டுகிறது. மனிதனுக்குப் புறம்பான ஒரு தெய்வ வழிபாடு வேண்டாம். சமுதாய மதம் ஒன்றிருந்தால் போதும்'' என்கிறார் ஹக்ஸிலி.

பௌதிக சாஸ்திர விளைவைக் கொண்டு ஒரு சமுதாயத்தை இவர் நிறுவப் பார்க்கிறார். இவர் படைத்த உலகம் இந்திரிய சுகம் தரும். இந்திரியத்துக்கு எட்டாமல் அப்பாலுள்ள பேரின்ப வாழ்வைப்பற்றி இவர் கவலைப்படவில்லை. கலையும் ஒரு விதத்தில் இந்திரிய சுகமே என்றாலும் அதற்குங் கூட முற்றுப்புள்ளி போடவேண்டும் என்கிறார் இவருடைய சகோதரர் ஆல்டஸ் ஹக்ஸிலி. ஆனால் இந்திரிய சுகத்திலே இன்பமில்லை என்று புத்தர் காட்டிவிட்டார்.

மரணத்துக்கப்பால் ஒரு வாழ்வு உண்டா என்ற சர்ச்சையை மனிதன் செய்து பார்க்கவேண்டும். ஆத்ம ஆராய்ச்சிச்சாலைகளுக்கும் மனிதத் திட்டத்தில் ஓரிடம் உண்டு. ஹக்ஸிலியின் நூலில் இதைப்பற்றி ஒன்றுமில்லை. இது ஒரு பெருங்குறை அல்லவா?

## உபத்திரவமும் உபசாரமும்

இரவு வெகு நேரம் வரைக்கும் வம்பளந்து விட்டு விடை பெற்ற விருந்தாளி, "உங்களை வெகு நேரம் விழித்திருக்கச் செய்துவிட்டேனே? அதுதான் பயமாயிருக்கிறது'' என்றார்.

வீட்டுக்காரர், "அதெல்லாம் ஒன்றும் பரவாயில்லை. எப்படியிருந்தாலும், நாங்களெல்லாம் சற்று நேரத்தில் விழித்தெழ வேண்டியவர்கள்தானே'' என்று பதிலளித்தார்.

—ஏட்ரியன் ஆண்டர்ஸன்

சோற்றுப் பசியைவிட மிக்க விசித்திரமான மற்ருெரு பசி உண்டு; அதுதான்—

# புகழ்ப் பசி

அனந்தகோபால் சேவ்டே

எங்கள் மாகாணத்தில் ஒரு தலைவர் சிறையிலிருந்து விடுபட்டார். தம்முடைய வரவேற்புக்கு முன்னேற்பாடு செய்யும்படி அவர் முன்னமே செய்தி அனுப்பிவிட்டார். நகரத்தில் அவருடைய காரியஸ்தர் ஒருவர் இருந்தார். அவர் அங்கங்கே டெலிபோன் செய்து பத்திரிகையாளரையும் கார்களையும் பூமாலைகளையும் மக்கள் கூட்டத்தையும் சிறைவாசலில் குவித்துவிட்டார். தலைவருக்கு 2,001 ரூபாய் அடங்கிய ஒரு பை சமர்ப்பிக்கப்பட்டது. எங்கும் ஒரே ஜயகோஷம். படங்கள் பத்திரிகைகளில் வெளிவந்தன. இவ்வளவுக்கும் செலவு யாருடையது என்கிறீர்கள்? எல்லாம் அந்தத் தலைவருடையதுதான்!

அவர்தான் பாவம், என்ன செய்வார்! இது ஜனநாயக காலம். தானே டமாரம் அடித்தாலொழிய, ஒருவனை யாரும் கவனிப்பதில்லை. பத்திரிகைகளில் வெளிவரும் செய்தி முழுவதையும் உண்மை என்று நம்புகிற மக்களே அதிகம். ஜவாஹர்லால் நேருவைப் போல, இவரும் எங்கள் மாகாணத்தில் பெரிய தலைவர் என்று மக்கள் சொல்கிறார்கள் என்றால், இந்தத் தலைவர் இவ்வளவும் செய்யத்தானே வேண்டியிருக்கிறது.

மற்ருெரு தலைவருடைய உண்மைக் கதையைக் கேளுங்கள், அவர் சிறையில் நோய்வாய்ப்பட்டபொழுது தம் சொந்தப் பத்திரிகையில் - ஒவ்வொரு பெரிய தலைவருக்கும் ஒவ்வொரு சொந்தப் பத்திரிகை கட்டாயம் இருக்கும் - தமது படத்தோடு ஒரு செய்தி வெளியிட்டார்:

"நாட்டுக்காக உடல் பொருள் ஆவியைத் தத்தம் செய்த மாபெருந் தலைவர் திருவாளர்... இப்பொழுது சிறையில் படை நோயால் பெரிதும் வருந்துகிறார்."

பத்திரிகையில் இந்தச் செய்தி வெளிவந்ததோடு நிற்கவில்லை. சர்க்காருக்குத் தந்திமேல் தந்திகள் பறந்தன. நோயாளியான தலைவரை விடுவிக்க வேண்டும் என்று மக்கள் கிளர்ச்சி செய்தார்கள். சர்க்காரும் அவரை ஆபத்தான அரசியல் கைதி என்று கருதாமல் விடுதலை செய்துவிட்டார்கள்.

உடனே அந்தத் தலைவர் வீட்டுக்குத் தந்தி அடித்தார்: "நோயாளி என்ற காரணத்தால் என்னைத் திடீரென்று விடுவித்து விட்டார்கள். நாளைக் காலை வண்டியில் வருகிறேன். வரவேற்புக்கு ஏற்பாடு செய்யுங்கள்."

இதற்குமேல் கேட்க வேண்டுமா? வரவேற்புக்குத் தட

மூலம்: ஸரிதா (ஹிந்தி: பிப்ரவரி '58), புது டில்லி.

புடலான ஏற்பாடுகள் நடந்தன. தலைவரே உத்தரவிடும்போது உள்ளூர்க் காங்கிரஸ் கமிட்டி அங்கத்தினர்கள் என்ன தான் செய்ய முடியும்? 'அவருக்கு உடல் நிலை எப்படி இருக்கிறதோ?' என்று வீட்டிலுள்ள உறவினர்கள் கவலைப்பட்டார்கள். "ஊர்வலம் வந்தால் அவருடைய உடல் நிலை பின்னும் கெட்டுப் போகுமே!" என்று அவர்கள் வருத்தத்தோடு சொல்லவே, ஒரு ஸ்டேஷன் முன்னதாகவே அவரை வண்டியிலிருந்து இறக்கி, வீட்டுக்குக் கொண்டுவரத் திட்டம் போட்டார்கள்.

ஜங்ஷனுக்கு முன் ஸ்டேஷனிலேயே தம் கார் நிற்பதைக் கண்ட தலைவர், "நான் இங்கே இறங்கவே மாட்டேன். பெரிய ஸ்டேஷனில் பொது மக்கள் என் வரவுக்காக ஏராளமாகக் காத்திருப்பார்கள். அவர்களை ஏமாற்ற என்னால் முடியாது" என்றார்.

பெரிய ஸ்டேஷனில் வரவேற்புக் கமிட்டியார், சுமார் இரண்டாயிரம் பேர் அடங்கிய ஒரு பெரிய கூட்டத்தைத் திரட்டி வைத்திருந்தார்கள். முன் ஸ்டேஷனிலேயே தலைவர் இறங்கப் போவதாகத் தெரிந்ததும், அவர்களுக்குக் கோபம் வந்துவிட்டது. கூட்டமும் உடனே கலைந்து போயிற்று. தலைவரிடம் பற்றுள்ள சிலர் மட்டும் சிறிய ஸ்டேஷனை நோக்கி வேகமாக ஓடினார்கள்.

தலைவரோ ஜாம் ஜாம் என்று பெரிய ஸ்டேஷனில் வந்து இறங்கினார். அப்போது அங்கே கூலிக்காரர்களையும் கூடைக்காரர்களையும் தவிர வேறு யாரும் இல்லை. அவர் கோபத்தோடு ஒரு கூலிக்காரனைப் பார்த்து, "என்னப்பா, மக்கள் எங்கே?" என்று கேட்டார்.

"மக்களா? மக்கள் என்றால் என்ன?"

"மக்கள் தெரியாதா? ஜனங்கள் கூட்டம்!"

"அதுவா? எவனோ தலைவன் வருவான் என்று ஜனங்கள் ஒரே கூட்டமாக இருந்தார்கள். அப்புறம் அவன் ஏமாற்றி விட்டானாம்!"

தலைவரால் பதிலே சொல்ல முடியவில்லை; சினத் தீ பற்றி எரிந்தது. அவருடைய காரும் வரவில்லை. அதனால் பேசாமல் ஒரு ஜட்காவில் ஏறிக்கொண்டு வீட்டுக்குப் போனார்.

இதுபோலவே தங்கள் பிரசங்கங்களைத் தாங்களே எழுதிப் பத்திரிகைக்கு அனுப்பும் தலைவர்களும் உண்டு.

புகழ் பெறும் இந்தப் பசி, சிலரை வேடிக்கையான வேலைகளெல்லாம் செய்விப்பதுண்டு. ஒரு தலைவரின் சித்தப்பா-மிகவும் வயதானவர்-சில நாள் நோய்வாய்ப்பட்டிருந்து இறந்துவிட்டார். இந்த மாதிரியான சாவு வீடுகளில் ஒரு சாதாரண சம்பவம். ஆனால் அந்தத் தலைவர் எனக்கு ஒரு விந்தையான கடிதம் எழுதியிருந்தார்: "நேற்று இரவு ஒன்றரை மணிக்குச் சித்தப்பா இறைவனடி சேர்ந்த செய்தியைக் கேட்டு உங்களுக்கு மிகவும் வருத்தமாக இருக்கும். வருத்தம் உண்டாவது இயல்புதான். ஆனால் இறைவனுடைய திருவுளப்படிதானே எல்லாம் நடக்கும். ஆதலால் ஆறுதலோடு இருப்பது தான் நல்லது. நீங்கள் இதற்காக எனக்கு உபசாரம் சொல்வதற்கு வர விரும்புவீர்கள். ஆனால் நீங்கள் இதற்காக உங்கள் பொழுதை

வீணாக்காமல், அந்தப் பொழுதைத் தேசத்துக்குத் தொண்டு செய்வதிலே பயன்படுத்தும்படி வேண்டிக்கொள்கிறேன்.''

ஓர் ஊரில் இலக்கிய மகாநாட்டுக்கு உள்ளூர் ஸேட் ஒருவரை வரவேற்புத் தலைவராக்கினார்கள். அவருக்குத் திருமகளின் அருள் பூரணமாக இருந்ததே தவிர, கலைமகளின் அருட்பார்வைக்கு அவர் இலக்காகவே இல்லை. மகாநாட்டின் காரியதரிசி அவருடைய பிரசங்கத்தை எழுதிக் கொடுத்துவிட்டார். அந்தப் பிரசங்கத்தை ஸேட் படித்தபோது, 'இலக்கியச் சுவை' என்ற சொல்லை அவரால் உச்சரிக்க முடியவில்லை; தட்டித் தடுமாறி, ''இல..இல..அந்தக் காரியதரிசி எங்கே போனார்? இவ்வளவு கஷ்டமான சொல்லையெல்லாம் போட்டிருக்கிறாரே!'' என்றார். மகாநாட்டின் தலைவரும் வேடிக்கையாகப் பேசுவதில் வல்லவர். ''நீங்கள் ஏன் இவ்வளவு கஷ்டப்படுகிறீர்கள், ஸேட் ஜி! அவர் எழுதியிருக்கும்போது அவரே அதைப் படித்துவிடட்டுமே!'' என்றார்.

## இங்கும் அங்கும்




ஸோவியத் கோஷ்டி நாடுகளிலும் மற்ற நாடுகளிலும் (1) எஃகு, (2) நிலக்கரி, (3) எண்ணெய், (4) அலுமினியம், (5) மின்சாரம், (6) கப்பல் இவற்றின் உற்பத்தி அளவைக் காட்டும் படம். வெள்ளைக் கட்டங்கள் மற்ற நாடுகளையும் கறுப்புக் கட்டங்கள் ஸோவியத் கோஷ்டியையும் குறிக்கின்றன.

—'ஸண்டே டைம்ஸ்'

## இன்பம் விளைக்கும் சொல்

இல் வாழ்க்கையை இன்பமாக்குவது 'நம்' என்ற ஒரே வார்த்தை.

—ராபெர்ட் க்வில்லன்

# பல சரக்கு

★

மாடும் குதிரையும் வண்டி இழுக்கும் வழக்கம் வரவரக் குறைந்து வருகிறது. ரெயிலும் காரும் ஸைக்கிளும் ஏராளமாய் வந்து விட்டன. ஆனுல், பிரிட்டனில் ராணிக்கு மகுடாபிஷேகம் நடக்கும்போது, வண்டிகளைக் குதிரைதானே இழுக்கப்போகிறது? இந்த விஷயம் பிராணிகளுக்கெல்லாம் தெரிந்துவிட்டதுபோல் இருக்கிறது. அவை, போக்குவரத்துச் சாதனங்களை உலகில் பல இடங்களில் தடை செய்யத் தொடங்கியிருக்கின்றன.

லண்டனுக்கு அருகே இருக்கும் எப்பிங் என்ற காட்டில் பல மான்கள் வந்து ஒரு காருக்குக் கீழே தலையைக் கொடுத்து, காரைக் கவிழ்த்துவிட்டன.

தென் அமெரிக்காவில் உள்ள சிலே (Chile) நாட்டில், ஆயிரக் கணக்கான பட்சிகள் ஒரு விமானத்தின் முன்னே கூடி அதன் விண்ட்ஸ்கிரீன்மீது மோதி அதைப் பலவந்தமாய் இறக்கிவிட்டன.

ஆப்பிரிக்காவைச் சேர்ந்த உகண்டா பிரதேசத்தில் மோட்டார் ஸைக்கிளில் காட்டுவழியே ஒருவர் போனுர். ஒரு சிங்கத்தின் மீது ஸைக்கிள் மோதியது. சவாரி செய்தவரின் கால் முறிந்தது. சிங்கத்துக்கும் காயம் ஏற்பட்டது. அந்த அதிர்ச்சியால் அது நல்ல வேளையாக ஆளை ஒன்றும் செய்யாமல் பயந்தோடிவிட்டது.

உஷ்ணமும் எருக்கமும் உள்ள அறைகளில் இருந்து சுவர்மாட்டிக் கடிகாரங்கள் சிலவற்றைக் குளிர்ச்சியான அறைகளுக்கு எடுத்துச் சென்ருல், அவை நின்று விடுவதுண்டு. இதற்குப் பரிகாரமாக



ஒருவர் ஒரு யுக்தி சொல்லுகிருர். ஃப்ளானல் என்ற கம்பளி உடை ஒன்றை அதன் முகத்திலே மூடி, சட்டைக் கைப் பொத்தான் ஒன்றை அடியிலே வைத்துவிட வேண்டுமாம். இரவிலே இப்படிச் செய்தால், பல கடிகாரங்கள் மிக்க திருப்தியுற்று ஆனந்தமாய் வேலை செய்யுமாம்.

*  *  *

ஆமை தாவர உணவையன்றிப் பிராணிகளைத் தொடாது என்று சென்ற இதழ் 'மஞ்சரி'யில் ஒருவர் குறிப்பிட்டது தவரும். தம் சகோதரர் வைத்திருக்கும் ஓர் ஆமை பலவித உணவுகளைத் தின்கிறது என்கிருர் இன்னெருவர். பச்சை அல்லது சமைத்த மாமிசம், மீன், மிட்டாய், ஜெல்லி, ஐஸ் க்ரீம் இவை

யெல்லாம் போகப் பஞ்சைக்கூட அது தின்றுவிடுகிறதாம். இது மாத்திரம் அல்ல; இன்னொரு விநோதம்: அந்த ஆமையும் ஒரு பூனையும் அருகருகே அமர்ந்து ஒரே தட்டிலிருந்து உணவை எடுத்து உண்கின்றனவாம்.

* * *

**சென்ற** வருஷம் பிரிட்டனிலிருந்து 73,000 பேர் ஆஸ்திரேலியாவில் குடியேறப் போனார்கள்.



ஆனால், அதில் நாலில் ஒரு பங்கு ஆசாமிகள் பிரிட்டனுக்கே திரும்பிவிட்டார்கள். "அங்கே மதுக் கடையே இல்லையே!" என்றார் சிலர். "வசிக்க இடமில்லை" என்றார் வேறு சிலர். தங்களுக்கேற்ற வேலை கிடைக்கவில்லை என்பது சிலர் குறை. ஒரே ஒரு கிழவி மாத்திரம் அலாதியான காரணம் சொன்னாள்: "அங்கே ஏராளமான பட்சிகள் இருக்கின்றன; ஆனால், அவைகளில் ஒன்றுகூடப் பாடவில்லை. ஏராளமான மலர்கள் இருக்கின்றன; ஆனால், அவைகளில் ஒன்றுகூட மணம் வீசவில்லை. பச்சைப் பசேல் என்று அடர்ந்திருக்கும் புல்மீது சிறிது உட்கார்ந்தால், சுள் சுள் என்று எறும்பு கடிக்கிறது. இதனால்தான் நான் திரும்பிவிட்டேன்" என்றாள் கிழவி.

* * *

**எத்தனை** எத்தனையோ தொழில்கள் உண்டு. ஆனால் லண்டனில் மதுபானம் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றில் சிலர் செய்யும் ஒரு தொழில் மிக விசித்திரமானது. வாசனை மோப்போர் என்பது அவர்களுடைய பெயர். 800 காலிப் பீப்பாய்களைச் சுத்தமாய்க் கழுவித் தினந்தோறும் அவர்களிடம் அனுப்புகிறார்கள். பீப்பாய்க்குள் நீண்ட குழாய் ஒன்றை ஒரு துவாரத்தின் மூலம் செலுத்தி, அதிலிருந்து துர்நாற்றம் ஒன்றும் வீசவில்லையா என்பதைத் தங்கள் கூரிய மூக்கால் அறிந்து சொல்வதுதான் மோப்பம் பிடிப்பவரின் வேலை. துர்நாற்றத்தைக் கண்டுபிடிக்கும் கூர்மை அவர்களின் மூக்குக்கு இருந்தாலும், மது வாசனையை மோந்து மோந்து மிகவும் பழகிவிட்டதால், எவ்வளவு மதுவைக் குடித்தாலும் சுலபத்தில் அவர்களுக்கு மயக்கம் ஏற்படுவதில்லையாம்!

* * *

**வீட்டுக்** கஷ்டம் நம் நாட்டு நகரங்களில் மட்டும் அல்ல; உலகெங்குமே - அமெரிக்கா, பிரிட்டன் முதலிய நாடுகளிலுந்தான் - இருக்கிறது. இதை நிவர்த்திக்கப் பலவித முயற்சிகள் அங்கெல்லாம் நடக்கின்றன. புதிதாய் மணமான ஒரு பிரிட்டிஷ் பெண்ணுக்கும் வாலிபனுக்கும் வீடு வேண்டியிருந்தது. எங்கே வேண்டுமானாலும் இழுத்துச்



செல்லக் கூடிய வண்டி மாதிரி ஒரு வீட்டை அவர்கள் கட்டினார்கள். அதை வயல்வெளி, காடு, கிராமம் எங்கே வேண்டுமானாலும் இழுத்துச் செல்லலாம். இந்த வீட்டைப் பார்த்ததும், இதே மாதிரி ஆயிரக்கணக்கான பேர் ஓடும் வீடு கட்டி அதில் வாழத் தொடங்கிவிட்டார்கள். எப்படி இந்த யுக்தி!

* * *

ஸ்காட்லாந்தில் அபெர்டீன் ஷயர் என்ற இடத்தில் ஒரு குடும்பத்தார் கோழிப்பண்ணை வைத்திருக்கிறார்கள். பெரிய மெழுகு வர்த்தி விளக்கு ஒன்றை அதில் நிறுத்தியிருக்கிறார்கள். அது இரவெல்லாம் எரிந்துகொண்டிருந்தால், கோழிகள் அதிக எண்ணிக்கை முட்டையிடுமாம். ஒரு நாள் இரவு அந்த விளக்கு நின்றால், அடுத்த நாள் முட்டைகளின் எண்ணிக்கை கண்டிப்பாய்க் குறைந்துவிடுமாம். இப்படியிருக்க, குடும்பத்தினர் வசித்த வீட்டில் ஏதோ பழுது காரணமாக மின்சாரம் ஒருநாள் நின்றுவிட்டது. வீட்டிலே இரவில் வெளிச்சத்துக்கு வழியில்லை. கோழிக் கொட்டகை விளக்கை எடுத்து வரலாமே என்றால், முட்டை குறைந்துவிடும். குடும்பத்தினர் பார்த்தார்கள்; தங்

கள் நாற்காலி, மேஜைகளையெல்லாம் கோழிக் கொட்டகையிலே கொண்டு போய்ப் போட்டார்கள். கோழிகளுடனேயே அன்றிரவு முழுவதும் தாங்களும் கழித்தார்கள்!

* * *

குழந்தைகளுக்குப் பாட்டிமார் அழகழகாய்க் கதை சொல்லித் தூங்க வைப்பது முன் கால வழக்கம். இப்போது அப்படிக் கதை சொல்லுவோர் எங்கே இருக்கிறார்கள்? இந்தப் பாட்டிமாரின் வேலையை ஆஸ்டிரியா தேசத்துத் தலைநகரான வியன்னா என்ற ஊரில் உள்ள டெலிஃபோன் கம்பெனியார் இப்போது ஏற்றிருக்கிறார்களாம். குறிப்பிட்ட ஓர் எண்ணை இரவு படுக்கும் நேரத்தில் டெலிஃபோனில் கூப்பிட்டால், அங்கே இருந்து ஒரு குரல் அழகாய்க் குழந்தைகளுக்குக் கதை சொல்லத் தொடங்கி விடுகிறதாம். எல்லாம் யந்திரமயமாகிக் கொண்டு வருகிறது உலகம்!

## உண்மையின் இயல்பு

உண்மையைக் காண்பது கஷ்டம் அல்ல; அதைக் கண்டதும் கைவிட்டு ஓடாதிருப்பதுதான் கஷ்டம்.

—ஏட்ரியென் கில்ஸன்

## உள்ளமே உலகம்

நீ மட்டும் உன் உள்ளத்திலே வாழ்ந்தால், உலகத்திலே எங்கிருந்தாலும் பரவாயில்லை.

—ஹேர்பர்ட் ஷெர்மான்

# அமெரிக்கர் வீட்டிலே

★

**வித்து மாலை:** அமெரிக்க வீடுகளில் பிள்ளைகள் முத்து மாலை போல் வித்து மாலை செய்கிறார்கள். சோள மணிகள், வித்துக்கள், கொட்டைகள் முதலியவற்றால் வளையல்களும் செய்வார்கள். அறுந்து போகாத நல்ல நூலில்



விதைகளைக் கோத்து மாலை செய்கிறார்கள். வித்துக்களுக்கு நிறந் தீட்டுவதும் உண்டு. வெள்ளரி விதைகளால் தொடுத்த மாலையை இங்கே படத்தில் காணலாம்.

**பச்சைக் காய்கறிகள்:** அமெரிக்கப் பெண்கள் காய்கறி சமைக்கும் பாத்திரத்தில் தண்ணீர் ஓர் அங்குல ஆழத்துக்குமேல் ஊற்றுவதில்லை. கால்மணி நேரம் அல்லது இருபது நிமிஷம் ஆனதும், இறக்கி விடுகிறார்கள். சூடாகவே காய்கறி பரிமாறுவார்கள்; வேக வைத்தபின் வெகு நேரம் கழித்து உண்பதில்லை. வேக வைத்த தண்ணீரையும் வெளியே கொட்டிவிடுவது இல்லை; தக்காளிப் பழச் சாற்றுடன் கலந்து அதை அருந்துவார்கள்.

**விளக்குச் செய்தல்:** அழகான விளக்குகள் செய்வது அமெரிக்கப் பெண்களுக்கு ஒரு பொழுது போக்கு. விலைக்கு வாங்குவதை விட வீட்டில் செய்தால் செலவும் குறைவு; பார்ப்பதற்கு மிக நன்றாகவும் அமையும். பித்தளைப் பாத்திரம், செப்புப் பாத்திரம், மண்ஜாடி, பழைய புட்டி இவைகளில் ஏதா



வது ஒன்றைக் காயாக வைத்து, அதன் கழுத்துப் பக்கம் மின்சாரக் கம்பிகளை பொருத்துகிறார்கள். மேலே செருகும் மின்சார 'பல்பின்' ஒளி நேரே கண்ணில் படாதபடி அதைச் சுற்றிலும் வட்டமான 'ஷேடு' அமைக்கிறார்கள். பழைய 'ஷேடு' ஒன்றின் சட்டத்தை எடுத்து, ஒரு நல்ல காகிதத்தை அளவாகக் கத்தரித்துச் சட்டத்தைச் சுற்றி ஒட்டி, மேற்புறமும் அடிப்புறமும் அகலமாகத் தைத்து விடலாம்.

மூலம்: அமெரிக்கன் ரிபோர்ட்டர் (தமிழ்: 6-2-'53), மவுண்ட் ரோடு, சென்னை.

# பாபுராவ் பதில் சொல்லுகிறார்

**கேட்பவரின் கேள்விகளுக்கு, 'ஃபிலிமிண்டியா' ஆசிரியர் பாபுராவ் அளிக்கும் பதில்கள் பிரசித்தம். இவைகளில் விறுவிறுப்பும் கேலியும் நிறைந்திருக்கும். இவை 'ஃபிலிமிண்டியா' ஜனவரி '53 இதழில் வெளியானவை.**

கேள்வி: சுதந்தரம் வந்தவுடன் அமெரிக்கர்களுக்கு அதிகாரம், முன்னேற்றம், சுபிட்சம் எல்லாம் கிடைத்தன. நமக்கு என்ன கிடைத்தது?

பதில்: அமெரிக்கர்கள் கிடைத்தார்கள்.

* * *

கே: காதலால் ஒரு பெண்மணியைத் திருத்த முடியுமா?

ப: காதல் செய்யும் பெண்மணி நல்லவள் தான். காதல் செய்யாமல் நிற்கும்போதுதான், அவள் தொந்தரவு செய்பவளாக ஆகிறாள். அதற்குப் பிறகு அவளை எதனாலும் மாற்ற முடியாது.

* * *

கே: அமெரிக்கர்கள் சரியான தலைவரைத் தேர்ந்தெடுத்தார்களா என்று சந்தேகப்படுகிறேன்.

ப: விரைவில் கொரியர்கள் பதில் சொல்வார்கள்.

* * *

கே: குழந்தைகளை நேசிக்கிறவர்கள் கடவுளை நேசிக்கிறார்கள். இது சரியா?

ப: நான் அப்படி நினைக்கவில்லை. குழந்தைகள் சுயநலமும், பிடிவாதமும், அகங்காரமும் உடையவர்கள். அவர்களை நன்றாகக் கவனியுங்கள். நான் சொல்வது உண்மையென்று தெரியும்.

கே: ஏழை எப்போதும் கனவு காண்பானா?

ப: யார் வேர்வை சொட்ட உழைக்கிறார்களோ, அவர்கள் நன்றாகத் தூங்குவார்கள். சோம்பல் நேரத்துக் கற்பனையே கனவு.

* * *

கே: உலகிலுள்ள கண்ணாடிகள் யாவும் மறைந்து போனால், பெண்கள் என்ன செய்வார்கள்?

ப: ஒவ்வொருவருடைய கண்களும் இருக்கின்றனவே!

* * *

கே: ராமுக்கும் ரஹீமுக்கும் இப்போது வெட்டுப் பழி குத்துப் பழியா?

ப: இல்லை; ராம்லாலுக்கும் ரஹீம் பக்ஷுக்குந்தான்.

* * *

கே: ஏன் கடவுள் கண்ணுக்குத் தெரியாமல் இருக்கிறார்?

ப: தாம் சிருஷ்டித்தவர்களைக் கண்டால், அவருக்கு மானம் போகிறது. மானிகள் மறைவாகவே இருப்பார்கள். கடவுள் அதற்கு விலக்கு அல்லவே.

* * *

கே: வாழ்க்கையில் வெற்றி பெற வேண்டும். எப்படிப் பெறலாம்?

ப: 'வெற்றி' என்ற வார்த்தையை நினைப்பதை நிறுத்துங்கள். அதற்குப் பதிலாக 'உழைப்பு' என்ற வார்த்தையை ஸ்மரியுங்

கள். அதை நன்ருகச் செய்யும் வரையில் சொல்லிக்கொண்டே இருங்கள். ஒரு நாள் அந்த 'உழைப்பு' என்ற வார்த்தையே 'வெற்றி' என்ற வார்த்தையாக மாறுவதைக் காணலாம்.

* * *

கே: இங்கிலீஷ்காரனுக்கு ஒரு வேடிக்கையைச் சொன்னுல், அவன் மூன்று தடவை சிரிப்பான்; மரியாதைக்காக முதல் தடவை; வேடிக்கையை வியாக்கியானம் செய்தால் இரண்டாந் தடவை; அவனுக்கே புரியும் போது மூன்ருந் தடவை சிரிப்பான். ஜெர்மனிக்காரன் இரண்டு தடவை சிரிப்பான்; முதலிலே மரியாதைக்கும் பிறகு வேடிக்கையை வியாக்கியானம் செய்யும் போதும். அவனுக்கு வேடிக்கையே புரியாது. பிரெஞ்சுக்காரனுக்கு வேடிக்கையைச் சொன்னுல், ஒரு தடவை சிரிப்பான்; அவனுக்கு உடனே அது புரிந்து விடும். அமெரிக்கனிடம் சொன்னுலோ, அவன் சிரிப்பதே இல்லை; அது அவன் முன்னுலே கேட்ட பழசாக இருக்கும். ஆனுல் இந்தியனிடம் சொன்னுல் . . .

ப: அதற்காக வரி செலுத்த வேண்டியிருக்கும்.

* * *

கே: பிரிட்டிஷ்காரர்கள் இந்தியாவில் எவைகளை விட்டுச் சென்றிருக்கிருர்கள்?

ப: அவர்களுடைய பாஷை, அவர்களுடைய தோஷங்கள், ஆங்கிலோ இந்தியர்கள்—இவைகளை.

* * *

கே: இந்தியாவும் பாகிஸ்தானும் மறுபடியும் சேரும் என்று நினைக்கிறீர்களா?

ப: ஒருகாலும் இல்லை. பிறந்த குழந்தை மறுபடியும் தாயின் வயிற்றுக்குள்ளே போகுமா?

* * *

கே: மூன்ருவது உலக யுத்தம் வந்துவிட்டால்?

ப: நான் அப்போது உமக்குத் தெரிவிக்கிறேன். அதுவரைக்கும் சுகமாகத் தூங்கும்.

* * *

கே: அரசியலில் ஏதாவதொரு சோக சம்பவத்தை வருணிப்பீர்களா?

ப: காந்தியடிகளின் கொலை. அது 32 கோடி ஹிந்துக்களை ஒரு நாளில் கொன்றுவிட்டதே!

* * *

கே: 'பக்கத்து வீட்டுக்காரர்களைத் தெரிந்துகொள்ளாதே' என்கிருர்களே; அது சரியா?

ப: அது ரொம்ப சரி. புதிய சிநேகிதர்களைச் சம்பாதிப்பதை நிறுத்தி விடுங்கள். பகைவர்களைக் காட்டிலும் அதிகமாக நண்பர்கள் நம்மை வேவு பார்க்கிருர்கள்.

## கவலை

"ஆபீஸிலிருந்து கவலையை வீட்டுக்கு நான் எடுத்துச் செல்வதில்லை."

"நானுந்தான் எடுத்துச் செல்வதில்லை. என் கவலை வீட்டிலே எனக்காகத் தயாராய்க் காத்திருக்கும்."

— 'ஃப்ரீ இண்டியா'

# நவீன துபாஷி

★

**கிழக்கிந்தியக் கம்பெனிக் காலத்துத் துபாஷிகளைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறோம். தற்காலத் துபாஷிகளைப் பற்றி நமக்குத் தெரியவேண்டாமா? இதோ இந்த விவரம் 'ஜான் புல்' கட்டுரை ஒன்றை ஆதாரமாகக் கொண்டது.**

ஒருவர் பாஷை மற்றவருக்குத் தெரியாத இரண்டு பேர் சந்தித்தால், இருவர் பாடும் திண்டாட்டந்தான். முன் காலத்தில் இதற்காகத்தான் துபாஷிகள் ஏற்பட்டார்கள். இன்றோ பல தேசங்களில் அங்கம் வகிக்கும் ஸ்தாபனங்கள் ஏற்பட்டிருக்கின்றன. அவைகளில் பல பாஷைகள் பேசும் அங்கத்தினர்கள் கூடி விவாதங்களும் செய்யத் தொடங்கிவிடுகிறார்கள். எப்படி ஒருவர் சொல்வதை மற்றவர் புரிந்துகொள்வது? இந்தக் காரியத்துக்கு உதவியாக



சர்வதேச மகாநாடு ஒன்றின் இடைநேரத்தில் துபாஷி பெட்டியில் உட்கார்ந்து, பொழுதுபோக்காக டெட்டி பில்லி ஒரு பெண்ணுடன் பேசிக்கொண்டிருக்கிறார்.

மிகத் திறமை வாய்ந்த துபாஷிகள் இருக்கிறார்கள்.

இந்த மாதிரி துபாஷிகளுக்குள் பிரசித்தமான ஒருவர் டெட்டி பில்லி என்பவர். சமீபத்தில் அவருக்கு ஏற்பட்ட வேலைகளைப் பாருங்கள். ஃபின்லண்டு தலைநகரான ஹெல்ஸின்கி என்ற இடத்தில் நடந்த வன மகாநாட்டுக்குச் சென்றார். மூன்று நாள் அங்கே மொழிபெயர்த்துவிட்டு, டர்க்கி நாட்டின் தலைநகரான இஸ்தான்புல் என்ற ஊரில் நடந்த பல தேசப் பார்லிமெண்டுகளின் மகாநாட்டுக்குப் பறந்து சென்றார். சில நாளைக்கெல்லாம் ஜெருசலேம் காங்கிரஸுக்குப் போனார். அங்கிருந்து ஹாலந்து விவசாய மகாநாட்டுக்கு ஓடிவந்தார். அப்புறம் சொந்த ஊரான லண்டன் நகரில் பல் வைத்தியர் காங்கிரஸுக்குப் போய்ச் சேர்ந்தார். இத்தனையும் சில வார காலத்தில் இவருக்கு ஏற்பட்ட ஜோலிகள்.

துபாஷி டெட்டி பில்லி, கட்டு மஸ்தான சரீரம் உடையவர். தங்கு தடையில்லாமல் இங்கிலீஷ், பிரெஞ்சு, ஸ்பானிஷ், ஜெர்மன், டச்சு இந்த ஐந்து மொழிகளிலும் பேசுவார். தம் அலைச்சலுக்கு உதவியாக ஐரோப்பாவில் இரண்டு கார்களும் ஒரு மோட்டார் ஸைக்கிளும் வைத்திருக்கிறார். எந்த ஊரில் ஏரோப்ளேன் சவாரி தொடங்குகிறதோ அங்கேயே இவைகளை விட்டுவிட்டுக் கிளம்பிவிடுவார். இவைகளைத் தவிர, அடக்கமாக மடக்கிக்கொண்டு செல்லக்கூடிய 'மோட்டார்-ஸ்கூட்டர்' என்ற சிறு வண்டி ஒன்றையும் சில இடங்களுக்கு எடுத்துச் செல்கிறார்.

ஒரு பாஷைக்காரர் பேசுவதன் பொருளை மற்றவருக்கு மொழி பெயர்த்துச் சொல்வதோடு மட்டும் இவர் நிற்பதில்லை. பேசுகிறவரின் உணர்ச்சியையுமே மற்றவருக்குக் காட்டிவிடுவார். பேச்சைக் கேட்பவர்கள் அநேக சமயம் அசல் பிரசங்கியை விட்டுவிட்டு இவருக்கே தங்கள் பாராட்டுதலைத் தெரிவித்துக்கொண்டு விடுகிறார்கள். அவ்வளவு திறமையாக டெட்டி பில்லி மொழிபெயர்க்கிறார்.

உலக மகாநாடு ஒன்று சில மாதங்களுக்கு முன் லண்டன் நகரில் நடந்தது. தம் கண்ணாடிப் பெட்டிக்குள் டெட்டி பில்லி உட்கார்ந்து, கையை ஆட்டிச் சமிக்ஞை செய்துகொண்டு, "மனைவிமாரும், தாய்மாருமான நாம் இருக்கிறோமே பெண்கள், நாம்.." என்று ஆரம்பித்தார். பிறகு, "நான் யார் பேச்சை மொழிபெயர்க்கிறேனோ, அந்த மனைவியாகவே - அந்தத் தாயாகவே - இப்போது ஆகிவிட்டேன்" என்றார். துபாஷி என்றால் அவர் ஒரு மனத்தத்துவ சாஸ்திரியாயிருக்கவேண்டும்; நடிகராயிருக்கவேண்டும்; சிறந்த பிரசங்கியாயிருக்கவேண்டும்; மொழி நிபுணராயிருக்கவேண்டும். பெரிய பெரிய உலக மகாநாடுகளில் இப்படிப்பட்ட சிறந்த துபாஷிகள் சுமார் இருநூறு பேர்தான் இப்போது இருக்கிறார்கள். அவர்களுக்குள் 16-பேர் பிரிட்டனைச் சேர்ந்தவர்கள். துபாஷிகளுக்குள் மிக அதிக வருமானம் பெறுபவர்கள், வருஷம் ஒன்றுக்கு மூவாயிரம் பவுன் சம்பாதிக்கிறார்கள்.

மகாநாடுகளில் துபாஷிகள் மொழிபெயர்ப்பதில் இரண்டு விதம் உண்டு. ஓர் அங்கத்தினர் பேசும்போது, அவருடைய பாஷை தெரியாத மற்ற அங்கத்தினரெல்லாம் தங்கள் காது

களிலே 'ஹெட் ஃபோன்'களை வைத்துக்கொள்வார்கள். பிரசங்கி பேசும்போதே பேச்சைத் துபாஷி ஒரு 'மைக்ரஃபோன்' முன் மொழிபெயர்த்துச் சொல்வார். அந்த மொழிபெயர்ப்பு மற்ற அங்கத்தினர்களின் 'ஹெட் ஃபோன்'களில் கேட்கும். இது ஒரு விதம். இதை விட்டு, பிரசங்கி பேசி முடித்த பின்பு அதைத் துபாஷி மொழிபெயர்த்துச் சொல்வதும் உண்டு. இது மறு விதம். இந்த இரண்டாவது முறைதான் டெட்டி பில்லி என்பவருக்கு மிகவும் பிடித்தமானது. ஒரு பிரசங்கியின் நாற்பது நிமிஷப் பேச்சு ஒன்றை, ஒரு சிறு குறிப்புக்கூட எடுத்துக்கொள்ளாமல் பிரபல துபாஷி ஒருவர் ஒரு சமயம் இப்படி மொழிபெயர்த்தாராம். அப்போது பிரசங்கி இடையிலே குறுக்கிட்டு, "மிஸ்டர் துபாஷி, நான் அப்படிச் சொல்லவில்லையே?" என்றாராம். "இருக்கலாம். ஆனால், நீங்கள் அப்படித்தான் சொல்லியிருக்க வேண்டும்" என்று ஒரு போடு போட்டாராம் துபாஷி.

பிரெஞ்சு நாட்டில் பிறந்தவர் டெட்டி பில்லி. சர்வதேச லாயர் ஆகவேண்டும் என்பது சிறு வயதில் அவருக்கு ஆசை. ஆனால், நீண்ட காலம் பயிற்சி பெற அவருக்கு வசதி இல்லை. இப்போது இந்தத் தொழிலே தமக்குத் திருப்தியாகத்தான் இருக்கிறது என்று அவர் சொல்லுகிறார். ஆக்ஸ்போர்டு யூனிவர்ஸிட்டியில் நவீன பாஷைகள் படிப்பதற்கு ஸ்காலர்ஷிப் பெற்றார். பிறகு, மணி ஒன்றுக்கு ஒரு ஷில்லிங் சம்பளம் பெற்று, சில மாணவருக்கு பிரெஞ்சு பாஷை கற்றுக் கொடுக்கத் தொடங்கினார்.

1937 - இல் ஒரு நாள் ஆலிஸ் டெலிஸியா என்ற கீர்த்தி பெற்ற நடிகை ஒரு நாடகத்தை இவரிடம் கொண்டுவந்து கொடுத்து, எட்டு மணி நேரத்தில் மொழிபெயர்த்துத் தரும்படி கேட்டாள். ஆறு மணி நேரத்தக்குள்ளே இவர் அதை மொழிபெயர்த்துத் தந்துவிட்டார். அப்போது ஓர் அரசியல் கமிட்டியில் அங்கம் வகித்திருந்த நண்பர் ஒருவருக்கு இது பிரமிப்பளித்தது. ராஜதந்திரிகளின் மகாநாடு ஒன்றில் ஒரு துபாஷி தேவையாக இருந்ததால், பில்லியை அந்த வேலைக்கு அவர் அமர்த்தினார்.

இப்படி முதல்முதல் துபாஷி வேலை கிடைத்ததும், பில்லிக்குத் தலை கால் புரியவில்லை. அவருடைய பரபரப்பைக் கண்ட மனைவி நோரா பயந்துவிட்டாள். 'எதிரி இந்தப் பரபரப்பில், தமக்குத் தெரிந்த பாஷைகள் அத்தனையையும் இவர் மறந்து விடுவார்போல் இருக்கிறதே' என்று எண்ணினாள். இவருக்குக் கொடுக்கத் தயாரித்த டீ பானத்தில் சிறிது 'பொட்டாஸியம் ப்ரோமைடு' போட்டாள். இதைக் குடித்தால், பில்லியின் நரம்புகள் சற்றுப் பதப்பட்டு, நிம்மதி பெறுவார் என்பது அவளுடைய நினைப்பு. ஆனால், அவள் சிறிது அதிகமாக அதைப் போட்டுவிட்டாள் போல் இருக்கிறது. அதனால், இவர் அதைக் குடித்தவுடனேயே துள்ளி எழுந்து, உரத்த குரலில், "இனி அவர்கள்தான் என்னிடம் பயப்பட வேண்டும்" என்று கத்திக்கொண்டே கம்பீரமாக எழுந்து வெளியே நடந்தார்.

மகாநாட்டில் ஸ்பெயின் தேசம் சம்பந்தமான ஏதோ விவகாரம் நடந்துகொண்டிருந்தது. பிரெஞ்

சுக்காரர் ஒருவர் மூச்சுவிடாமல் நீண்ட பிரசங்கம் செய்தார். அதைத்தான் இவர் இங்கிலீஷில் மொழிபெயர்க்க வேண்டியிருந்தது. மொழிபெயர்த்து முடிந்தது. எல்லாரும் காபி குடிக்கத் தொடங்கினுர்கள். பிற்காலத்தில் ஹிட்லரின் துபாஷியான பால் ஷிமிட் என்பவர் இவரிடம் வந்து, "எப்படி இதுவரையில் உங்களைப் பார்க்காதிருந்தேன்? வெகு நாளாக இந்தத் தொழில் புரிந்துகொண்டிருக்கிறீர்களோ?" என்று விசாரித்தார். "அப்படி வெகு நாளாக என்று சொல்ல முடியாது" என்று ஒருவாறு மழுப்பிவிட்டார் பில்லி.

மகாநாடுகளில் துபாஷி வேலை பார்க்கும் கலை பற்றி வாரந்தோறும் பலருக்கு இவர் வகுப்பு நடத்திப் போதனை செய்கிறுர். மொழிபெயர்க்கும்போது தங்களுக்கு நேரிட்ட சங்கடங்களை இவரிடம் மாணுக்கர்கள் அப்போதப்போது தெரிவிப்பார்கள். 'மாவாய்த் தின்ருல் பணியாரமில்லை' என்பது போன்ற ஓர் இங்கிலீஷ் பழமொழியைப் பிரெஞ்சு பாஷையில் தம்மால் மொழிபெயர்க்க முடியவில்லை என்று ஒரு சமயம் ஒரு மாணுக்கர் தெரிவித்தார். "என்னுலுந்தான் முடியாது" என்று பில்லி ஒப்புக்கொண்டார்.

விகடத் துணுக்குகள் வந்தால் இந்தத் துபாஷிகளுக்கு வெகு கிலி. அதுவும் பிரசங்கி பேசிக்கொண்டேயிருக்கும்போது, 'இம்' மென்னு முன்னே ஒரு பாஷை விகடத் துணுக்குகளை மற்ருெரு பாஷையில் மொழிபெயர்க்க வேண்டும் என்ருல், சாத்தியமாகிற காரியமா?

பெரும்பாலான துபாஷிகள், யார் பேச்சை மொழிபெயர்க்கிருர்களோ அவர்களேயாக அப்போது மாறிவிடுகிருர்கள். "எனக்கு மெஸாரிக் பேச்சை மொழிபெயர்ப்பதிலே மிகவும் பிரியம்: அப்போது அவரே யாகிவிடுவேன். ரிப்பன்ட்ராப் பேச்சை மொழிபெயர்ப்பதில் பிரியமில்லை; ஆனல் அவர் பேச்சை மொழிபெயர்க்கும்போதும் அவரேதான் ஆகிவிடுவேன்" என்கிருர் பில்லி.

யார் வேண்டுமானுலும் துபாஷி ஆகிவிட முடியாது. துபாஷி பதவிகள் ஏராளமாகக் காலி இல்லை. தவிர, துபாஷிகளுக்குச் சட்டம், வாத்தியார் வேலை, ரேடியோ, பத்திரிகைத் தொழில் இவை போன்ற வேறு தொழில்களும் தெரிந்திருக்கவேண்டும்.

பிரசங்கியின் பேச்சிலே முரட்டுத்தனம் இருந்தால், பில்லி அதைச் சிறிது பதப்படுத்தியே மொழிபெயர்ப்பார். ஏனென்ருல், ஒரு பாஷையிலே உள்ள சாமானிய வசவு இன்னொரு பாஷையிலே மிகக் கடுமையாகப் போய்விடக்கூடும்.

லண்டனில் பல பாஷைக் கிளப் ஒன்றைத் துபாஷி பில்லி நடத்துகிருர். ஹைட் பார்க் கார்னர் அருகே வெள்ளையடித்த கட்டிடம் ஒன்றில் அது நடக்கிறது. அது தொடங்கி இப்போது இருபத்தொரு வருஷம் ஆகிறது. வாரத்துக்கு வாரம் நூறு கூட்டங்களும் வகுப்புகளும் நடக்கின்றன. ஆயிரக்கணக்கான வியாபாரிகளும் தொழில்காரர்களும் அவைகளுக்கு வருகிருர்கள். மொழிபெயர்ப்புக் கலையை அவர்களுக்கெல்லாம் இவர் வெகு ரசமான முறையில் கற்றுக்கொடுக்கிருர்.

# ஜப்பானிய விவசாயம்

★

**உழைப்பிலும் சரி, யுக்தியிலும் சரி, ஜப்பானியர் கீர்த்தி பெற்றவர்கள். வளமில்லாத நிலத்திலும் நல்ல மகசூல் கிடைக்கச் செய்யும் திறமை அவர்களுக்கு உண்டு. என்ற இந்த விவரம் 'தி பார்மர்' என்ற ஆங்கிலப் பத்திரி கையில் வெளியான ஒரு கட்டுரையின் சாரம்.**

ஜப்பான் தேசம் மலைகள் நிறைந்தது. மொத்த நிலப்பரப்பில் 16 சதவிகிதந்தான் சாகுபடிக்கு லாயக்குள்ளது. இந்த 16 சதவிகித நிலத்தை ஓர் அங்குலங்கூட விடாமல் பயிரிடுகிறார்கள். தரிசாகவோ உற்பத்தி செய்யாமலோ எந்த நிலத்தையும் ஜப்பானியர் விடுவதில்லை.

மலைச்சரிவுகளில் விவசாயம் செய்வதற்காக, அந்த இடங்களை நன்றாகப் பண்படுத்தியிருக்கிறார்கள். மிகச் சரிவான நிலங்களைக்கூட, விளைநிலங்கள் ஆக்க அவர்கள் எடுத்திருக்கும் முயற்சி வியக்கத் தக்கது. அந்தச் சரிவுகளில், உயரமாகக் கல் கட்டிடங்களை எழுப்பி, துண்டு துண்டாகச் சமநிலங்கள் ஆக்கியிருக்கிறார்கள். கல் கட்டிடம் சில இடங்களில் 4 முதல் 6 அடி வரை உயரம் இருக்கிறது. சரிவுகளில் மண் அரிப்பைத் தடுப்பதற்காக நீர் வடியும் இடங்களில் கல் பரப்பி வைத்திருக்கிறார்கள். மலைச் சரிவுகளில் இப்படித் துண்டு துண்டாகக் கட்டிச் சமம் ஆக்கப்பட்ட நிலங்கள், பார்ப்பதற்கு ரம்மியமாக இருக்கின்றன.

பிரசித்தி பெற்ற உன்ஷூ ஷிஜோகா ஆரஞ்சுப் பழத்தை, இந்த மலைச் சரிவுகளில் கட்டி நிர்மாணித்த நிலங்களில்தான் பயிரிடுகிறார்கள். வேறு பழ வகைகளையும் இந்த நிலங்களில் பயிரிடுவது உண்டு. இந்த மலைச் சாரல்களில் வருஷம் முழுவதும் நல்ல மழை பெய்வதால், விளை பயிர்களுக்கு வேறு நீர்ப்பாசனம் எதுவும் தேவை இல்லை.

ஜப்பானில் விவசாய நிலங்களுக்கு வேலிகள் போடுவதில்லை. உள்ள நிலமோ கொஞ்சம். ஆகவே, கிடைத்த ஒரு துளி நிலத்தைக்கூட அவர்கள் வீணாக்குவதில்லை. வரப்புகளில்கூடப் பயிர் விளைவிக்கிறார்கள். ஜப்பானில் கவனிப்பாரற்றுத் திரியும் மாடுகளே இல்லை. ஏனென்றால், அங்கே கால்நடைகளை மேய்ச்சலுக்காக, தும்பைத் தட்டிவிடுவதே கிடையாது. ஒரு வயலிலிருந்து இன்னொரு வயலுக்கு மாடுகள் செல்ல வேண்டியிருந்தால், மாடு

மூலம்: கிராம ராஜ்யம் (தமிழ்: பிப்ரவரி '53), மவுண்ட்ரோடு, சென்னை.

களுக்கு வாய்க்கட்டுக் கட்டியோ கூடை போட்டோதான் விவசாயிகள் அவற்றைப் பிடித்துப் போகிறார்கள். மற்றவர்களின் சொத்துக்களுக்கு நாசமோ, நஷ்டமோ ஏற்படுத்தக் கூடாது என்பதில் ஜப்பானியர் மிகுந்த கருத்துள்ளவர்கள். அங்கே மற்றவர்களின் விளைபொருள்கள் திருட்டுப் போவதுமில்லை. ஒருவரால் மற்றவர்களின் பொருள்களுக்குச் சேதம் ஏற்படுவதுமில்லை. பெரியவர்களுக்கு மட்டுமல்ல, இந்த உணர்வு; ஜப்பானியக் குழந்தைகள்கூட இந்த அருங் குணத்தைப் பயின்றிருக்கிறார்கள். ஜப்பானியக் குழந்தைகள், மற்றவர்களின் தோட்டங்களுக்குச் சென்று பழங்கள் பறிப்பதில்லை; வேண்டுமென்றே நஷ்டமோ சேதமோ ஏற்படுத்தவும் மாட்டார்கள். ஆகவே, வேலி அமைத்துப் பாதுகாப்பது அங்கே அவசியமில்லை. ஒரு நிலத்துக்கும் மற்றொரு நிலத்துக்குமிடையே பிரிவைக் காட்ட ஒரு சிறு வரப்புத்தான் நெடுக இருக்கும். ஒருவர் மற்றொருவர் நிலத்தைப் பெறும் ஆசையில் தள்ளி உழுவதும் அங்கே இல்லை. தகராறுகள் ஏதாவது ஏற்பட்டாலும் சுமுகமாகத் தீர்த்துக்கொள்ளுகிறார்கள். ஜப்பானில் நிலத் தகராறு கோர்ட்டுக்குப் போவதே கிடையாது.

உரங்களைக் கொண்டு போவதற்கும், மகசூலை எடுத்து வருவதற்கும், ஜப்பானில் ஒவ்வொரு பண்ணைக்கும் நல்ல ரஸ்தாக்கள் உண்டு. ஒரு நில எல்லை சற்று மூலை முடுக்காக இருந்துவிட்டால், அந்த நிலத்தை அமைப்பான நீண்ட சதுர வடிவமாக்குவதற்குப் பக்கத்து வயல்காரர்கள் தங்கள் நிலங்களை விட்டுக் கொடுப்பது அங்கே சகஜம். வயல்கள் ஒவ்வொன்றும் நீண்ட சதுர வடிவம்; அதிலே அந்த நீளத்துக்கு ரஸ்தாக்கள். இப்படியே பார்ப்பதற்குச் சித்திரப் பிளான் மாதிரி வயல்கள் இருக்கின்றன. புதிதாக ஒரு ரஸ்தா போடவேண்டுமானால், அந்த விவசாயிகள் ஒன்று சேர்ந்து புது ரஸ்தாவுக்கான திட்டம் வகுத்துக்கொள்கிறார்கள். திட்டம் முடிந்து அந்த வரிக்கோட்டில் கல் நடும்போது, அதனால் சில நிலங்களை இழக்க நேருகிறவர்கள் பூரண சம்மதத்துடன் நிலங்களைக் கொடுத்து விடுகிறார்கள். எங்கேயாவது ஒரு புது ரஸ்தா போட வேண்டுமானால், விவசாயிகள் எல்லாரும் ஒன்று சேர்ந்து தங்களுக்கு நேருகிற நில நஷ்டத்தைச் சிறிதும் பொருட்படுத்தாமல் ஒத்துப்போக முன் வருவார்கள். ஒவ்வொரு விவசாயியும் தன் சக்தியானுசாரம் பணம் போட்டு, ஒரு நிதி திரட்டுவதில் ஈடுபடுவான். ரஸ்தாவுக்காக நிலம் கொடுத்தவர்களுக்கு நஷ்ட ஈடு தருவதற்கு இந்தப் பணம் உபயோகமாகிறது.

ஜப்பானிய விவசாய நிலங்கள் நந்தவனங்களைப் போலத்தான் காட்சியளிக்கின்றன. சாகுபடியாகும் ஒவ்வோர் அங்குல நிலத்தையும் மிகப் பாங்காக உழுகிறார்கள். விளைபயிர் நிலங்களில் களைகளே இல்லை. மிக நன்றாக அமைத்த சிங்காரத்தோட்டம் போலத்தான் அந்தக் கிராமப் புறங்கள் காட்சியளிக்கின்றன.

பிடி நீளமாக உள்ள களைக் கொட்டினால்தான் அவர்கள் களை வெட்டுகிறார்கள். அந்தக் களைக் கொட்டு, பூமியில் நன்றாக இறங்குகிறது. பெரிய மண் கட்டிகளை

உடைத்து, சமனப்படுத்திவிடுகிறார்கள். நெல்லைத் தவிர மற்றப் பயிர்களை, வரப்புகளில்தான் பயிர் செய்கிறார்கள். வரப்புப்போடுவது, களை வெட்டுவது எல்லாம் கைக் கொட்டினாலும் பிற சிறு கருவிகளாலுந்தான் நடக்கின்றன.

மேட்டுப் பூமியில் மே மாதத்தில் கோதுமை அறுவடையாகிறது. எப்ரல் மாதத்திலேயே கோதுமைப் பயிர் வரப்புகளுக்கு இடையே புகையிலை நடுகிறார்கள்; அல்லது நிலக்கடலையோ, மொச்சைக் கொட்டையோ விதைக்கிறார்கள். சில சமயங்களில் இடைப் பயிராக நெல் நாற்று நடுவதும் உண்டு. ஆகவே, கோதுமை அறுவடை ஆகும் பொழுது, நிலுவையில் அதனுடன் இருந்த மாற்றுப் பயிருக்கு, அதற்குள்ளாக ஒரு மாதம் ஆகிவிடுகிறது. கோதுமைத் தாளை அந்தப் பயிர் நின்றிருந்த இடத்திலேயே போட்டு மண் மூடி எருவாக மட்க விட்டுவிடுகிறார்கள். அந்தக் கழிவுகளை மூடும்போது களையும் எடுபட்டுவிடுகிறது.

நன்செய்யில் நெல் சாகுபடி விஷயமாக, மண் கட்டு உள்ள இடத்தில் எப்ரல், மே மாதங்களில், நீண்ட பிடியுள்ள மண் வெட்டிகளால் பூமியை நன்றாக உடைத்துவிடுகிறார்கள். மாரிக் காலத்தில் நன்செய் வயல்களில் 30 அல்லது 40 சத விகிதத்தில் கோதுமை, பார்லி போன்ற மாரிக் காலப் பயிர் இடுகிறார்கள்.

களை, கரம்பு இல்லாத துண்டு துண்டான நிலங்கள், வரிசை வரிசையாகப் பயிர்களுடன் நிற்பதை ஜப்பானிய விவசாயத்தில் மிக விசேஷமான அம்சமாகச் சொல்ல வேண்டும். நெல் நாற்றங்கால்தவிர மற்ற நிலங்களில் தானியத்தை விதைக்காமல், வித்தை ஒழுங்காக நடுகிறார்கள். இப்படி வரிசை வரிசையாகப் பயிர் இருப்பதனால், களை கொத்துவது, எருவிடுவது முதலியவைகளைச் சுலபமாகச் செய்ய முடிகிறது. செடிகளும் நல்ல சூரிய வெளிச்சத்தையும் காற்றையும் பெறுகின்றன. இப்படி நேர் வரிசையாகப் பயிர்கள் நிற்பதால், அந்தப் பயிர் நிலுவையில் இருக்கும்போதே 2-ஆம் பயிர் ஒன்றை அதற்குள்ளேயே விளைவிப்பது சாத்தியமாகிறது. களைகளையும் கற்களையும் அந்த நிலங்களில் காணவே முடியாது. கற்கள் எல்லாவற்றையும் சுத்தமாகப் பொறுக்கி, வரப்பிலே மண் அரிப்பைத் தடுப்பதற்காகப் போட்டுவிடுகிறார்கள். மலைச் சரிவுகளிலே, இந்தக் கற்கள், கல்கட்டுச் சுவர்களுக்குப் பயன் படுகின்றன. வயல்கள் எல்லாவற்றையும் கரம்பின்றிச் சம நிலங்கள் ஆக்குகிறார்கள். மேடு பள்ளமாக நிலம் இருப்பதை ஜப்பானில் பார்க்கவே முடியாது. களர் மண்ணாகவோ களிமண்ணாகவோ இருக்கும் பட்சத்தில், அவற்றுடன் செம்மண் அல்லது மணல் கலந்து, மண்ணைத் தக்கபடி தரப்படுத்துகிறார்கள். ஜப்பானில் தனிப்பட்டவர்களுக்குச் சொந்தமாக உள்ள எண்ணற்ற காடுகளில் நிறைய இலைகளும் சருகுகளும் வண்டல்களும் கிடைக்கின்றன. வளமில்லாத மண்ணுக்கு அவைகளைப் போட்டு வளப்படுத்துகிறார்கள். இப்படி வருஷக்கணக்கில் பச்சை இலைகள் முதலியவற்றைச் சேர்த்து வந்தால், மோசமான நிலங்களும் நல்ல வளமான நிலமாவது நிதர்சனம்.

சிறு கதை:

# அத்தை சொன்ன கதை

மஞ்சேரி எஸ். ஈச்வரன்

**இலக்கிய நயத்தோடு அரிய கதைகள் பல எழுதியுள்ள நண்பர் ஈச்வரனுக்குச் சமீபத்தில் திருமணம் நடந்தேறியது. இந்தச் சந்தர்ப்பத்துக்கு ஒட்டிய இந்த அழகிய கதையை இப்போது எழுதியிருக்கிறார். இதை வெளியிடும் இந்தச் சமயத்தில், புதிய மணத் தம்பதிகளான அவருக்கும் அவருடைய மனைவி அன்னபூர்ணாவுக்கும் நம் மனப்பூர்வமான வாழ்த்தைத் தெரிவித்துக்கொள்கிறோம். கலைஞரான நண்பருக்குக் கல்வியறிவும் இசை ஞானமும் நிறைந்த கலைச்செல்வி மனைவியாய் வாய்த்தது பெரிதும் பொருத்தமுடையது. இனிக் கதையைப் படியுங்கள்.**

"எனக்கொரு கதை சொல்லு" என்றது ஒரு சிறு பையனின் குரல்.

"எங்களுக்கொரு கதை சொல்லு" என்று பல சிறுவர் சிறுமிகளின் குரல்கள் ஒன்று சேர்ந்து கூச்சலிட்டன.

திருமண வைபவம் அதிகாலையில் நடைபெற்றது. இரவில் சம்பிரமமான விருந்து நடந்தது. அதன் பின்பு, வீட்டின் விசாலமான கூடத்தில் ஆண்களும் பெண்களும் சூழ்ந்து உட்கார்ந்துகொண்டிருந்தார்கள். அவர்களுக்கு இடையிலே சிறுவரும் சிறுமிகளும் பல வர்ண உடை அணிந்து உட்கார்ந்திருந்தார்கள். ரத்தின மாலையிலிருந்து உதிர்ந்து சிதறிய மணிகளைப்போல் இருந்தது அந்தக் காட்சி. ஆண்களில் சிலர் சீட்டாடிக்கொண்டிருந்தார்கள்; வேறு சிலர், தம் தம் கட்சிப் பற்றுக்கேற்றபடி அதி உஷ்ணமாக அரசியல் பிரச்னைகளைப்பற்றித் தர்க்கம் செய்துகொண்டிருந்தார்கள். பெண்களோ மிக மிகப் புதிய மோஸ்தர்ச் சேலைகளையும் நகைகளையும்பற்றிப் பேசிக்கொண்டிருந்தார்கள். பால் மணம் மாறாத குழந்தை ஒன்று ஒரு பெண்ணின் மடியில் இருந்தபடி வீச்சென்று கத்திக்கொண்டிருந்தது. தாய் கவலையுடன் அங்கும் இங்கும் திரும்பி, மேலே சுவருக்குச் சுவர் ஓடும் உத்திரங்களை நோட்டம் பார்த்தாள்; ஒரு சேலையை உத்திரம் ஒன்றில் வீசித் தன் பாலகன் கண்ணுறங்கத் தூளி கட்ட அவள் முயன்றாள்.

எனக்கு ஒரே அசதி. கண் கெஞ்ச, அரைத் தூக்க நிலையில் இருந்தேன். அப்படியே ஒரு கோடியில் உட்கார்ந்துகொண்டிருந்தேன்.

என் பக்கத்திலே என் தாயாதி ஒருவன் முழங்கையைத் தலைக்கு முட்டுக் கொடுத்தபடி ஏதோ ஓர் இங்கிலீஷ் பத்திரிகையைப் பிரித்தான். அதிலிருந்த

காப்பிரைட்: ஸ்வதந்த்ரா (ஆங்கிலம்; 21-2-'53), சென்னை.

மாவோ - ஸே - துங் படத்தில் ஆழ்ந்துவிட்டதுபோல் பாவனை செய்துகொண்டிருந்தான். அவன் கொஞ்சம் சொத்தக்காரன். ஏதாவது வேலை செய்து வயிற்றைக் கழுவவேண்டுமே என்ற கவலை இல்லாதவன். அவனுக்குச் சிரத்தையெல்லாம் முதல் முதலில் குதிரைப் பந்தயத்தில்; அடுத்தபடி சர்வதேச விவகாரத்தில்தான்.

“எனக்கொரு கதை சொல்லு.”

“எங்களுக்கொரு கதை சொல்லு.”

என் அரைத்தூக்கத் திரையைக் கிழித்துக்கொண்டு வந்தன அந்தக் குரல்கள். கண்ணைத் துடைத்து விழித்துக்கொண்டேன்.

“வெகுகாலத்துக்கு முன் ஒரு சின்ன ஊரில் ஒரு சின்ன வீட்டில் ஒரு கணவனும் மனைவியும் வசித்துக்கொண்டிருந்தார்கள்.......”

இப்படி என் அத்தை லட்சுமி சொல்லத் தொடங்கினள். எங்கள் குடும்பத்துக்குள்ளே அருமையாய்க் கதை சொல்லுகிறவள் என்று அவள் கீர்த்தி பெற்றவள். அவளுடைய கதைகளிலே ஞானமும் ஹாஸ்யமும் பொதிந்திருக்கும். அவை வாழ்க்கையை மேலெழுந்தவாறு தொடுவதுபோல்தான் தோன்றும்; ஆனல், ஆழ்ந்த நோக்கம் ஒன்று அவைகளிலே ஊடுருவி நிற்கும். வற்றாத நீதிக்கதைப் பொக்கிஷம் அவள். கூர்ந்த புத்தி சாதுரியம் உடைய அவள், தன் கதைகளை ஒளியும் நிழலும் துலங்க மெருகிட்டுவிடுவாள்.

நான் நிமிர்ந்து உட்கார்ந்து, அவள் கவனத்தை இழுப்பதற்காகச் சற்று இருமினேன். அவள் என் பக்கம் திரும்பி, எனக்கப்பால் சாய்ந்திருந்த தாயாதியைக் கவனித்துவிட்டாள். அவள் முகம் சுளித்தது; பின்பு அதிலே ஒரு புன்சிரிப்பு அரும்பியது. அவள் குறும்பும் நமக்கு இன்பமாயிருக்கும். அவளுடைய வாக்குத் திறமையைக் காண்பதற்காக, நான் ஆவலோடு காத்துக்கொண்டிருந்தேன். கதையிலே முக்கியமான அம்சத்தை அவள் தள்ளிவிடுவாள்; சிறு விஷயத்தை நகாசு செய்வாள். இதனுலெல்லாம் அவளுடைய கதைகள் அலாதியான ஒரு கவர்ச்சி பெறும். அவைகள் மலரைப்போல் மிருதுவாக இருக்கும். கல்லைப்போல் கடினமாயும் இருக்கும்.

“......ஒரு கணவனும் மனைவியும் வசித்துக்கொண்டிருந்தார்கள். மனைவி மகா அழகாயிருப்பாள்; குன்றுகளிலே நடனம் ஆடி வரும் அருணோதயம் போலும், மரகதப் பச்சைப் புற்களின்மீது ஊஞ்சலாடும் பனி முத்துக்கள் போலும், ஏரி நீரில் துள்ளி விளையாடும் நிலவொளிபோலும் அவள் அழகாயிருப்பள். ஆனல், அவள் சந்தோஷமற்றிருந்தாள்; துளியும் சந்தோஷமில்லை. ஏனென்ருல், அவள் கணவன் அவளை லட்சியமே செய்யவில்லை; வீட்டிலே அவள் ஒருத்தி இருக்கிருள் என்பதையே அவன் மறந்துவிட்டான். வீட்டுக் காரியங்களை எல்லாம் ஒரு நிமிஷம்கூடப் பிசகாமல் வெகு கணக்காகச் செய்வது அவள் வழக்கம். அவன் ஸ்நானம் செய்யத் தண்ணீர் எடுத்துவைப்பாள்; புயலைப்போல் வெகு வேகமாய் அவன் ஸ்நானம் செய்துவிட்டு வருவான். அவனுக்கு உணவு வட்டிப்பாள்; மள மளவென்று ஐந்தாறு கவளமாய் அதை அவன் விழுங்குவான். உடுப்புகளை அணிந்துகொள்வான். சரேல்

என்று வெளியே கிளம்பிவிடுவான். இரவெல்லாம் வீட்டுக்கு வராமல் எங்கேயோ தங்கி விடுவான். வீட்டிலே தன்னந்தனியே இருந்து கொண்டு தூங்காமல் துயரப்பட்டுக்கொண்டிருப்பாள் மனைவி. எலிகள் குடுகுடு என்று ஓடும் சந்தடியையன்றி வேறு துணையொன்றும் அவளுக்கு இல்லை. அவள் அழுதழுது கண்ணீர் வழிந்து கன்னத்தின் வர்ணமெல்லாம் போய் விட்டது.''

''என் அத்தை, இரவெல்லாம் கணவன் வீட்டுக்கு வருவதில்லை?'' என்று கேட்டாள் ஒரு சிறுமி.

''என்னவோ வருவதில்லை; அவ்வளவுதான்.''

என் தாயாதிக்கு இருப்புக் கொள்ளவில்லை; அவன் தவிப்பதை நான் கவனித்தேன்.

''அவர்களுக்குப் பக்கத்து வீட்டிலே ஒரு பாட்டி இருந்தாள். உள்ளத்திலே அன்பும் நாவிலே இங்கிதமும் நிறைந்தவள். வாலிப மனைவியின் துயரத்துக்கு என்ன காரணம் என்று பாட்டி அறிந்து கொண்டாள். வாலிபப்பெண்ணிடம் சொன்னாள்:

'''இதோ பார்; உன் துக்கத்திலேயே நீ மிக ஆழ்ந்து கிடப்பதால், யோசிப்பதைக் கைவிட்டு விட்டாய். உன் துயரத்துக்கு நீ ஏன் இடங்கொடுக்கிறாய்? ஏனடி கண்ணே, நீ என்ன ஒன்றும் தெரியாத அப்பாவியா?'

'''என்ன யோசிப்பது, பாட்டி?'

'''உன் சந்தோஷம் திரும்ப யோசி. அவன் சிண்டைப் பிடித்து இழுத்து, அவன் இருக்கவேண்டிய இடத்தில் அவனை இருத்தி வை. நிலைமை அடியோடு மிஞ்சிப் போவதற்குள் ஏதாவது செய்.'

'''எனக்கு ஒன்றும் தோன்றவில்லை; ஒன்றுமே தோன்றவில்லை.'

'''அட பேதைப் பெண்ணே!'

'''ஓயாமல் பிரார்த்தனை செய்கிறேன். எத்தனையோ ஸ்வாமிகளையும் அம்பிகைகளையும் வேண்டிக் கொண்டு விட்டேன்.'

'''இந்த மாதிரி விஷயங்களில் பிரார்த்தனை ஒன்றும் பிரயோஜனம் இல்லையடி. ஸ்வாமிகளாவது அம்பிகைகளாவது! எலும்பும் தோலும்சதையும் குருதியுமாய் உருவெடுத்த அம்பாள் ஒருத்தி எப்போதும் குப்பை மேட்டிலே உட்கார்ந்துகொண்டிருக்கிறாள்; தன் மனைவி மாணிக்கமாகவேயிருந்தாலும் அவளைக் கைவிட்டு ஓடித் தன்னிடம் வரும்படி கவர்கிறவள் அந்த அம்பாள்தான். அவளோடு நீ போராடியாக வேண்டும். விழித்துக்கொள். உன் உரிமையை நிலைநாட்டு. அவளை எதிர்த்து நில்.'

'''எப்படி என்று சொல்லுங்கள், பாட்டி?''

'''வீட்டை விட்டு அவன் புறப்படும்போது நீ அவனைப் பின் தொடர்ந்துசெல். அவனை விட்டு அகலாதே. அவன் எங்கே போனாலும் விடாதே.'

(கூடியிருந்த சிறுவர் சிறுமிகளை என் அத்தை அடியோடு மறந்து விட்டாள்; வயதான என் தாயாதியின் மனத்தை உறுத்தும்படி குத்தலாய்ச் சொன்னாள்.)

''பாட்டியின் இந்த யோசனையைக் கேட்டு, இதன்படி வாலிப மனைவி தன் கணவனைத் தொடர்ந்தாள். அவன் என்னவோ பாழ் போகிறது போல் வெகு வேகென்று நடந்தான். அவனுக்குச் சில அடி பின்னாலே இவளும் நடந்தாள். உச்சி வெயில் கடுமை

யாய்க் காய்ந்துகொண் டிருந்தது. சாலையின் செம்மண் புழுதி காலைச் சுட்டது. ஒரு மாமரத்தடிக்கு இவர்கள் வந்து சேர்ந்தார்கள். பச்சைக் காய்களும் பழுத்த பழங் களுமாய்க் குலுங்கக் குலுங்க நிறைந்து அந்தப் பாரந் தாங்காமல் அதன் கிளைகள் சாய்ந்து தொங் கின. அவன் அந்த மரத்தின் மீது ஏறினன். பழங்களை யெல் லாம் பறித்து வயிறு நிறையத் தின்ருன். சில காய்களைப் பறித் துக் கீழே விட்டெறிந்தான். அவை இவளிருந்த இடத்துக்கருகே வந்து விழுந்தன. பழம் தின்ற பிறகு, இலையிலே அவன் கையை முதலில் துடைத்துக்கொண்டான். பிறகு மரப்பட்டையிலே தேய்த்தான். பின்பு மரத்திலிருந்து கீழே இறங்கி நடக்கத் தொடங்கினன். இவளும் அவன் பின்னலேயே சென்ருள்.

"இவளை அவன் அகஸ்மாத் தாகக்கூடத் திரும்பிப் பார்க்க வில்லை. அரை மைல் தூரம் இவர்கள் போயிருக்க மாட்டார் கள். அங்கே ஒரு குளம் தென் பட்டது. அதன் நீர் ஸ்படிகம் போல் தெளிந்திருந்தது; சூரிய ஒளியில் பசுவின் கண்கள் பள பளப்பது போல் நீலமாய், பிரகாச மாய் அது ஜொலித்தது. குளத் தின் படிகளில் அவன் இறங்கி னன். குனிந்து, அந்தக் குளிர்ந்த நீரில் நாலு கை அள்ளிப் பருகினன். விடாய் தீர்ந்தான். பிறகு அதைத் தன் முகத்திலிட்டு, புரு வத்தையும் கண்ணையும் கன் னத்தையும் கழுவினன். அவன் களைப்புத் தீர்ந்தது; களிப்புற்ருன். பிறகு, மெல்லத் தன் உடுப்பைக் களைந்து கரையிலே வைத்தான். இடுப்பளவு நீரில் இறங்கினன். நீருக்கடியிலே இருந்த சேற்றைத் தன் காலால் கடகடவென்று குழப்பினன். சேற்றுக் கும்பி கிளம்பி, நீர் கலங்கியது; அதன் துர்நாற்றம் காற்றிலே நாற்புறமும் பரவியது; பசுப்பும் கறுப்புமான பாசி எழும்பி நீரையெல்லாம் பாழ் படுத்தியது. அவன் சிரித்தான். அவனுடைய இந்த விசித்திர நடத்தையைக் கண்ட மனைவி, அவனைக் காணுதது போல் பாசாங்கு செய்தாள். நீரிலே கைக் கெட்டும் தூரத்தில் அலர்ந்து மலர்ந்திருந்த ஒரு தாமரைப் பூவைச்சுற்றிச்சுற்றி வட்டமிட்டுக் கொண்டிருந்த ஒரு வண்டின்மீது இவள் கண்ணேட்டம் சென்றது. அவன் தன் உடம்பை ஒரு குட்டையால் துடைத்துக் கொண்டான். இவள் இருக்கும் பக்கம் பார்க்காமல் முதுகைத் திருப்பிக்கொண்டிருந்தான்.

"இவள் அந்த வண்டையே உற்றுப் பார்த்துக்கொண் டிருந் தாள். அதன் சிறகுகள் ஆனந்த மாக ரீங்காரம் செய்துகொண் டிருந்தன. விரிந்த மலரின் அருகே வண்டு ஒரு கணம் மிக மிக நெருங்கிவிடும்; ஆனல், அதில் உட்காராது. தட்டித் தடவிக் கொண்டு முட்டாள்தனமாக இலைகள் மீதே உட்காரும். இவ ளுக்கு வந்த துக்கம் இவள் மௌன் னியை அடைத்தது. இதற்குமேல் இவளால் தாளவில்லை. இவள் மௌனம் முறிந்தது. இவள் பேசத் தொடங்கினள். அப்படித் தொடங் கியது இதுவே முதல் தடவை. தன் துணிவைக் கண்டு இவளுக்கே வியப்பாயிருந்தது.

'செம்பழத்தைத்
தான் பறித்துத்
தின்ருனவன்;

வெம்பற்காய்
தனை எனக்கு
வீசினுனவன்.
தெள்ளத் தெளியு
நீரை அள்ளிப்
பருகினுனவன்;
பள்ளக் குப்பிப்
பாசி எனக்கு
எழுப்பினுனவன்.
இதென்ன பாவமோ?
ஏழை வண்டே சொல்.
பெண் மனத்தைத்
தானறியாப்
பித்தனவன்போல்
பூமணத்தை
நுகராமல்
பாயும் பொன் வண்டே,
காரணத்தைச் சொல்
கண் குருடோ நீ?
ஏனே நீ அழுகிருய்?
என்ன துயர் அடைந்தனை?
ஓ வண்டே!
அசட்டு வண்டே!
தத்துப் பித்தென்
றலைந்து திரியும்
பொன் வண்டே'
என்று பாடினுன்.

"இவள் முடிக்கவில்லை. அதற்குள், இவள் கணவன் சட்டென்று திரும்பினுன். அவன் இருதயம் படபடவென்று அடித்துக்கொண்டது; உடம்பு வெடவெட என்று நடுங்கியது. இவளை அவன் பார்த்தான். அவன் பார்வை மிகவும் கூர்மையாயிருந்தது. இவளைக் கால் முதல் கப்பீரமாய்ப் பளபளக்கும் புருவம் வரையில் அவன் பார்த்தான். இவளிடம் ஒரு தெய்விக ஒளி துலங்கியது. அவன் மறு பிறவி எடுத்துவிட்டான். உண்மையும் விநயமும் நிறைந்த மனிதனுகிவிட்டான். மௌனமாக இவள் அருகே வந்தான். இவள் கரத்தைப் பற்றினுன். வீடு நோக்கித் திரும்பினுன். மருண்ட விழியுடன் இவள் பின்புறம் பார்த்தாள். பின்பு சட்டென்று புன்சிரிப்புப் பூத்தாள். வண்டின் ரீங்காரம் மங்கியது. தாமரை மலர் மெல்ல மெல்லச் சாய்ந்தாடுவதைக் கண்டாள். மலரை இப்படி அசைத்தாட்டுவது காற்றல்ல என்பதை இவள் உணர்ந்தாள்."

நான் நன்ருக நிமிர்ந்து உட்கார்ந்தேன். அத்தையின் கவனத்தை இழுப்பதற்காக மீண்டும் இருமினேன். ஆனல் அவளுக்கு அந்தக் கூட்டத்திலே யார்மீதும் கவனமில்லை.

"இஸ்பேட் ராணி" என்று கத்தினுர் சீட்டாடுகிறவரில் ஒருவர். அப்படிக் கத்தியபடி கன்னத்தில் அறைவதுபோல், கீழிருந்த பலகையைப் படீர் என்று தட்டினுர்.

சமீபத்தில் இருந்த யாரோ திடீரென்று எழுந்து அவசரம் அவசரமாய்த் தடதட என்று நடக்கும் காலடிச் சத்தம் கேட்டது. திரும்பிப் பார்த்தேன். அது என் தாயாதிதான். இதுவரை அவன் இங்கிருந்ததையே நான் மறந்துவிட்டேன். முகம் சுண்டிப்போனது வெளியே தெரியாதிருப்பதற்காகத் தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டு, பதுங்கிப் பதுங்கி, நடந்து அவன் வெளியேறினுன்.

இப்போதுதான் எனக்கு ஞாபகம் வந்தது.

பதினைந்து வருஷங்களுக்குமுன் கிளிபோன்ற தன் மனைவியைக் கைவிட்டுத் தவிக்க விட்டவன் என் தாயாதி.

EDITED, PRINTED AND PUBLISHED BY N. RAMARATNAM,
FOR MANJARI AT THE M. L. J. PRESS, MADRAS-4.
MANAGING EDITOR: T. J. RANGANATHAN.

# கருமிச் சீமான்

சீமான் ஒருவர் இருந்தார். அளவிறந்த செல்வம் அவருக்கு இருந்தது. சீமானுக்கு ஒரு நாள் என்ன தோன்றிற்றோ; குருவிடம் சென்று, உபதேசம் அடைந்து, குருவின் ஆசீர்வாதத்தைப் பெற்று வர எண்ணினார். அப்படியே அவரிடம் சென்றார்.

குருவுக்கு இந்தச் சீமான் விஷயம் தெரியும்; அவர் சட்டென்று எழுந்தார்; சீமானின் கையைப் பிடித்து, அழைத்துக் கொண்டு, ஜன்னல் அருகே போனார். ஜன்னலுக்குப் போட்டிருக்கும் கண்ணாடிக் கதவு வழியாகப் பார்க்கச் சொன்னார்.

"இப்போது என்ன பார்க்கிறீர்? சொல்லும்" என்று சீமானைக் கேட்டார்.

இப்படி எதற்காகக் குரு கேட்கிறார் என்று புரியாமல் திகைத்துக்கொண்டே, "ஜனங்களைப் பார்க்கிறேன்" என்றார் சீமான்.

சீமானை அங்கிருந்து மீண்டும் ஒரு நிலைக்கண்ணாடிக்கு அருகே குரு அழைத்துச் சென்றார். "இப்போது என்ன பார்க்கிறீர்?" என்று கேட்டார்.

"என்னையே பார்க்கிறேன்" என்றார் சீமான்.

"மகனே, என் கேள்விகள் இரண்டின் கருத்தையும் இப்போது நான் விளக்கிச் சொல்லுகிறேன். ஜன்னல் கதவும் கண்ணாடிதான்; நிலைக்கண்ணாடியும் கண்ணாடிதான். ஆனால், இரண்டுக்கும் ஒரு வித்தியாசம். நிலைக் கண்ணாடியிலே, ஒளியை மறிக்கும் தடை ஒன்று அமைந்திருக்கிறது. வெறுங் கண்ணாடியிலே பார்க்கும்போது, உனக்கு ஜனங்கள் தெரிகிறார்கள்; அதிலே சிறிது பாதரஸத்தைப் பூசி மறைத்துவிட்டால், உன்னையேதான் நீ பார்த்துக்கொள்கிறாய். இதன் உட்பொருளை மனத்தில் பதித்துக்கொள்" என்றார் குரு.

—'இண்டியா அண்ட் இஸ்ரேல்'.

March '53 Regd. No. M. 4975

# மஞ்சரி

நந்தன - பங்குனி

ஊரும் உலகமும் .. .. .. .. .. .. .. .. .. 1
புத்தரும் சர்வோதயமும் .. .. .. .. .. சர்வோதயம் 3
ஹோட்டல்கள் சீர்திருந்த வழி .. .. .. .. .. உதயம் 6
ரமணர்: வாழ்வும் வாக்கும் .. .. .. .. .. .. .. 8
பணம் வேண்டுமா? .. .. .. .. .. .. வஸந்த் 11
அட மனிதா! .. .. .. .. .. .. .. .. .. .. 13
கலி தீர்த்த நூல் .. .. .. .. .. .. .. .. .. 14
உணர்ச்சிக் கட்டுப்பாடு .. .. .. .. .. ஃப்ரீ இண்டியா 19
தெய்வத் தாமரை .. .. .. .. .. .. .. ஸ்ரீலங்கா 22
க்விஸ் .. .. .. .. .. .. .. .. .. .. .. 25
புத்தகசாலைக் கதை .. .. .. அமிர்தபஜார் பத்திரிகா 26
காட்ஜு பேட்டி .. .. .. .. .. .. சங்கர்ஸ் வீக்லி 32
காட்டிலே கண்ட சிற்பம் .. .. .. .. .. ப்ரபாஸி 37
எதிரி மாப்பிள்ளையா? .. .. .. .. .. .. ஹரிஜன் 39
வழுக்கைக்கு மருந்து .. .. .. .. .. .. .. 42
கார்ட்டூன் கதம்பம் (படம்) .. .. .. .. .. .. 44
புதுமாதிரி ஸினிமா .. .. .. .. .. .. .. .. 46
அந்நியரின் சிலை .. .. .. .. .. மாடர்ன் ரெவ்யூ 49
மலையில் பெரியது .. .. .. .. .. .. பிரஜா மத 53
பழங்கால இந்திய விமானம் .. .. .. .. .. பாரதி 59
விஞ்ஞான ஸமுதாயம் .. .. .. .. ரா. ஸ்ரீ. தேசிகன் 63
புகழ்ப் பசி .. .. .. .. .. .. .. .. ஸரிதா 68
பல சரக்கு .. .. .. .. .. .. .. .. .. .. 71
அமெரிக்கர் வீட்டில் .. .. .. அமெரிக்கன் ரிபோர்ட்டர் 74
பாபுராவ் பதில் சொல்லுகிறார் .. .. .. .. பில்மிண்டியா 75
நவீன துபாஷி .. .. .. .. .. .. .. .. .. 77
ஜப்பானிய விவசாயம் .. .. .. .. .. கிராம ராஜ்யம் 81
அத்தை சொன்ன கதை .. .. .. மஞ்சேரி எஸ். ஈச்வரன் 84
கருமிச் சீமான் இண்டியா அண்டு இஸ்ரேல் (3-ஆம் அட்டை)